பெரியஎழுத்து
கர்ணமகாராஜன்
சண்டை

B.R.N. & SONS.
MADRAS.

உ

கடவுள் துணை

கர்னமகாராஜன் சண்டை

விநாயகர் துதி

முந்திமுந்திவிநாயகனே முருகுழலாள்புத்திரனே
கந்தருக்குமுன்பிறந்த கணபதியேமுன்னடவாய்
ஏடுதவறாமல் எழுத்தாணிசாயாமல்
கோடுதவறாமல் கொழுந்தோலைசாயாமல்
நாவுதவறாமல் நல்லோசைதாருமையா
குரலில்குடியிருந்து குரலோசைதாருமையா
மாலியணுகாமல் வரமீய்ந்துகாருமையா
வெட்பாலைக்கீழிருக்குஞ் சப்பாணிப்பிள்ளையாரே
சப்பாணிப்பிள்ளையாரே பொற்பாதம்யான்மறவேன்
பொற்பாதம்யான்மறவேன் பொன்னின்கணபதியே
தப்பாமலிக்கதைக்கு தக்கோனேமுன்னடவாய்
பஞ்சவர்கள்தன்கதையைப் பட்சமுடன்நான்படிக்க
செஞ்சொல்சிவனுடைய தேவிதிருமகனே
வர்னமருகநல்ல வளர்கொம்பொருகோனே
கர்னன்திருக்கதையைக் காசினியோர்தாம்படிக்க
குற்றங்கள்வாராமல் குறையொன்றும்சேராமல்
கற்றமட்டும்யான்படிக்க கணபதியேமுன்னடவாய்

சுப்பிரமணியர் துதி

தேவரெல்லாம்வணங்குந் தேவர்சேனாபதியே
மூவரெல்லாம்புகழும் முருகோனேமுன்னடவாய்
புள்ளிமயிலேறும் புனிதவடிவேலா
வள்ளிமணவாளா வந்தெனக்குமுன்னடவாய்
திருத்தணிவேலவரே யுன்சீர்பாதம்நான்மறவேன்
கருத்துடனேநான்பாடக் கர்னன்திருக்கதையை
எம்பிரான்முன்னடக்க என்கதையும்பின்னடக்க
தம்பிரானானசிவ சண்முகனேமுன்னடவாய்

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

புகழேந்திப்புலவர் இயற்றிய

பெரிய எழுத்து

கர்னமகாராஜன் சண்டை

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்

அவர்களால்

திருமகள் விலாச அச்சகத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

சென்னை—1.

இதன் விலை] —— [ந-ஸ்ப 0·75

சரஸ்வதி துதி

நாவிற்சரஸ்வதியே நான்முகனுர்தேவியரே
பூவிற்பிறந்தவளே பூலோகரட்சகியே
மாசற்றதீபமே மன்னர்புகழ்விளக்கே
நேசத்துடனெனக்கு நெஞ்சில்குடியிருப்பாய்
வெற்றிக்கர்னன்கதையை விரும்பியேநான்படிக்க
பக்தியுடனிருந்து பாமகளேமுன்னடவாய்

ஈஸ்வரர் துதி

ஆதிபாஞ்சுடரே அரியசிவனுரே
சோதிமணிவிளக்கே தூயவருட்கடலே
கற்கண்டேசர்க்கரையே கனிவுள்ளமுக்கனியே
சொர்க்கப்பதியரசே தூண்டாச்சுடரொளியே
எள்ளுக்குளெண்ணெய்போல் எங்கும் நிறைபொருளே
துள்ளுமெருதேறுந் தோன்றுதமெய்ப்பொருளே
மாலுமயனறியா வண்ணப்பரஞ்சுடரே
ஆலவிடமுண்ட ஐயனேமெய்ப்பொருளே
கர்னனுர்சண்டைகள் கர்த்தாவேநான்படிக்க
தருணமிதுசமயம் தயவுள்ளசங்கரனே
இகழ்ச்சிகள்வாராமல் இடும்பொன்றும்நேராமல்
மகிழ்ச்சியாயெந்தனுக்கு மகாதேவாமுன்னடவாய்

மகாவிஷ்ணு துதி

அண்டமளந்தவரே ஆதிநாராயணரே
கொண்டல்நிறமுள்ள கோபாலமாயவரே
கஞ்சன்வலதழித்த கார்மேகாமுன்னடவாய்
செங்கோலசோதையெனுந் தேவிதன்பாலகனே
எல்லேயளந்தவனே இரணியனேக்கொன்றவனே
கல்லேப்பெண்ணுக்கிவைத்த கர்த்தாவேமுன்னடவாய்
வெண்ணெய்திருடியே மிகவிடைச்சியர்களிட்ம்
வண்ணமுடியாண்ட மாயவனேமுன்னடவாய்
பாண்டவர்க்குத்தூதுபோன பகவானேமுன்னடவாய்
ஆண்டவனேயிக்கதைக்கு அருள்புரியவேண்டுமையா

நூல் வரலாறு

வனவாசப்போனதொரு மன்னவர்களைந்துபேரும்
தென்னமுடிவேந்தன் திரியோதிரனுடனே
பதினெட்டுநாள்சண்டையும் பாரதமுந்தான்படிக்க

செஞ்சொல்சிவனுடனே தேர்விஜயன்வில்லெடுத்து
சண்டைகள்செய்தலவோ சங்கரனார்தன்னிடத்தில்
பாசுபதம்பேறுபெற்ற பார்த்திபனருச்சுனரும்
மாசிலாமேனி மாயவனார்தன்னுடனே
வெற்றிமதயானை வீமனவன்தன்னுடனே
நகுலசகாதேவரென்னும் ராசாக்களெல்லோரும்
வில்லெடுத்துவேலெடுத்து வீரவாள்தானெடுத்து
அம்பெடுத்துவில்லெடுத்து அம்புறாத்தூணிமுதுகணிந் [து
அவரவர்கள்தேரேறி அமர்பொருதவந்தார்கள்
மன்னன்றுரியோதிரன் வண்ணப்படையுடனே
கர்னன்சகுனி காங்கேயன்தேத்தரசன்
வீஷ்மர்துரோணரும் விதுரனசுவத்தாமன்
பதினெட்டுஅக்ரோணி படைமன்னர்தாமும்நின்று
பன்னிரண்டுநாள்சண்டை பாங்குடனேசெய்தார்கள்
அச்சுதனார்வில்லெடுக்க ஆயனவர்தேரோட்ட
மைத்துனரும்மைத்துனரும் மல்பொருதும்நாளையிலே
தேசத்தரசனென்னும் தேர்வேந்தராஜாவும்
சயிந்தவனென்றுசொல்லும் தார்வேந்தராஜாவும்
வெற்றிபரிசுடைய விஜயன்திருமகனை
சுபத்திரையாள்பெற்றெடுத்த துய்யமணிவிளக்கை
பதிமூன்றும்நாளையிலே பாலனபிமனைத்தான்
மாலைக்குறுக்கிட்டு மதிபிசகாய்க்கொன்றுவிட்டான்
அபிமன்னன்தான்விழவே அருச்சுனனார்தான்கேட்டு
ஆருதகோபம் அனலில்மெழுகாகி
காண்டீபன்வில்லெடுத்த காளையந்த அருச்சுனரும்
என்மகனைக்கொன்றவனை யிமைப்பொழுதில்கொல்வேனென்று
பதினான்கா நாளையிலே பரிதிமறையுமுன்னே [ன்
எவ்விதமுங்கொல்வேனென்று இட்டான்சபதம்பண்ணு
இல்லாமற்போனாலே அக்கினியில்விழுவேனென்று
இட்டசபதமது எம்பெருமாள்தான்கேட்டு
மைத்துனனாரிட்ட சபதம்முடிக்கவென்று
மாயன்சக்கரமெடுத்து மறைத்தார்பொழுதையப்போ
அர்ச்சுனனார்கண்டு ஆயாசந்தானாகி
அக்கினிவளர்த்தி அதில்விழவுஞ்சென்றானே
மாயவனார்கண்டு வாள்விசையர்க்கேதுசொல்வார்
க்ஷத்திரியர்கையினால் தார்வேந்தன் அர்ச்சுனனே

வில்வளைத்து நாணியேற்றி விசையப்பெருமாளும்
அக்கினியைச்சுற்றி அர்ச்சுனனூர்வருகையிலே
துரியோதனனுடைய சேனைகளெல்லோரும்
சகடயூகங்கட்டி நின்ற சமர்த்தனென்னும்தேத்தராசன்
வேந்தர்களெல்லோரும் வேடிக்கைப்பார்க்கவந்தார்
அதுசமயம்பார்த்து ஆயர்பெருமாளும்
அருச்சுனனைப்பார்த்து அருளாளரேதுசொல்வார்
பொழுதிருக்குமானல் போர்விஜயா அர்ச்சுனனே
சயிந்தவனைக்கொல்ல சமர்த்துண்டோவென்றுரைத்தார்
அப்படியேசெய்வேனென்று அர்ச்சுனனுந்தானுரைக்க
ஆயர்பெருமாளும் அன்புடனேசக்கரத்தை
வாங்கிவிட்டார்மாயவரும் வாள்விஜயன்வில்லெடுத்து
தேத்தராசன்தன்னை சிலைகவர்ந்து அப்போது
அர்ச்சுனனூர் அம்புக்கு ஆகாரந்தான்கொடுத்தான்
எக்காளைசின்னம் இயல்பெறவேஊதலுற்றூர்
பேரிகைதான்முழங்க பெரியசின்னந்தானூத
மைந்தன்பகைமுடித்து வைத்தார்கள்மற்றுநாள்
பதினைந்தாநாளையிலே பகைசெய்கதுரோணரையும்
அரனூர் அளித்ததொரு சிறுவனும்துஷ்டதுய்மன்
துஷ்டதுய்மன்கையாலே துரோணர்விழுந்துவிட்டார்
பதினாரும்நாளையிலே பட்டார்களெல்லோரும்
வெற்றிமுரசறைய விருதுமேளந்தான்முழங்க
இப்படியாக இருக்கின்றவேளையிலே

கர்னன் சண்டைக்கு செல்லுகின்றது

பதினேழாம்நாளையிலே பரிதிமகன்கர்னனுந்தான்
மல்யுத்தம்பொருதவென்று மணிமகுடந்தானணிந்து
ஆனைபரிசேனைதிரள் அனைவரையுந்தான்கூட்டி
வாகனமுங்கடலதிர வந்தான்படையெடுத்து
காசிநாடாளுங் கர்னன்பெருமாளும்
போருக்குத்தான்போகப் போர்மன்னர்தானிருந்தான்
பொன்னுருவியரண்மனைக்குப் போனூரேயன்னேரம்
தேவியரண்மனைக்குச் சென்றான் கருனருமே
மன்னர்வருகிறனத மங்கையர்கள்தான்கண்டு
பொன்னுருவிதாதியர்கள் பூவையர்கள்கண்டுவிட்டு
ஆஸ்தானமண்டபத்தை அலங்கரித்துமேடையிட்டார்

மாணிக்கப்பொற்பீடம் மங்கையர்கள்தான்போட்டார்
ஆசனமிட்டார்கள் அங்கராயன்தானிருக்க
சிங்காதனம்போட்டார் சேடியர்களந்நேரம்
அங்கவளநாடும் அரசர்பெருமாளும்
இட்டசிம்மாதனத்தில் ஏறியவர்வீற்றிருக்க
மனக்களிப்புதன்னுடனே மன்னவர்கர்னனுந்தான்
மாணிக்கப்பொற்பீடத்தில் மன்னவர்வீற்றிருந்து
சேடியரைப்பார்த்து சொன்னுரொருவார்த்தை
தாதியரைப்பார்த்து தார்வேந்தரேதுசொல்வார்

கர்னர் தாதியரை யனுப்பி பொன்னுருவியை அழைத்துவரச் சொன்னது

அன்னமேதேனே ஐவருக்குந்தாதியரே
பொன்னுருவிநாயகத்தை போயழைத்துவாருமென்ருர்
மாதையும்மைந்தனையும் வரவழைத்துவாருமென்ருர்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரிழைமாரோடிவந்து
பொன்னுருவிநாயகியைப் போற்றியடிபணிந்து
அடிகீழ்முடிசாய்த்து ஆரணங்கைத்தானேக்கி
திருவளருநாடி செல்வரிடதேவியரே
தனப்பொருந்தும்நாட்டுக்குத் தானேயதிபதியாய்
முத்தின்சூழ்நாட்டுக்கு முழுதுமுடையவளே
காசிநாடாளுமந்த கர்னர்பெருமாளும்
அன்னமேஉன்னை அழைத்துவரச்சொன்னுர்காண்
ஆகையினுலேவந்தோங்காண் ஆரிழையேயிப்போது
இப்போதேநீரும் எழுந்தருளிவாருமென்ருர்
அந்தமொழிகேட்டு ஆரணங்குபொன்னுருவி
கண்கள்சிவப்பெழும்பிக் காந்தானமாகியவள்
சீறியவள்பற்கடித்துச் சேடியரைத்தான்பார்த்து [தாய்
இழிகுலத்தார்வார்த்தையோதான் எனக்குசொல்லவந்
தேர்ப்பாகன்வார்த்தையைத்தான்சொல்லவந்தாயெனக்கு
இத்தனைநாளில்லாத இடும்புனக்குவந்ததென்ன
ஆகையினுலங்கனிட அவ்வார்த்தைநீயுரைத்தாய்
சிங்கத்தின்குட்டியைப்போல் சீறியவள்ப்பற்கடித்தாள்
தெண்டனிட்டதாதியரும் சோநடுக்கமுற்று
கால்நடுங்கிகைநடுங்கிக் கடுகியவள்பின்னிட்டு
வந்தவழியே மயங்கியவள்திரும்பி

தாதி பொன்னுருவியை அழைத்து வரவில்லை யென்றது

கர்னன்பெருமாளைக் கடுகமிகத்தெண்டனிட்டு
கலத்துப்புழு நீக்குங் கர்னர்பெருமாளே
ஆச்சியரை நாங்கள் அழைத்துவரப்போனோமே
பூவணையில்பள்ளிகொண்டாள் பொற்கொடியுமென்னுச்சி
தழுவணையில்பள்ளிகொண்டாள் தையலருமென்னுச்சி
அலந்தல்வெடியவில்லை அங்கவள நாட்டாட்கு
என்றுசொல்லக்கேட்டு ஏதுரைப்பான்கர்னனுமே

கர்னர் தாதியரைப்பார்த்து மறுபடியும் பொன்னுருவியை
அழைத்துவரச் சொன்னது

பாங்கியிவள்வரவே பைங்கொடியேசொல்கிறேன்கேள்
பாரதப்போர்செய்து படுகளத்தில்சென்றேரி
காண்டாவனமெரித்து காளையுடஅம்பாலே
பட்டுயிறந்து படுகளத்தில்நான்மடிந்தால்
கற்பகத்தேர்மேலே சாய்ந்தான்கருனனென்றால்
அப்போதுதான்கேட்டு ஆரிழைமாதுநல்லாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அன்னநடையாளும் [ள்
இழிகுலத்தான்பட்டாக்கால் சேதமில்லையென்றிருப்பா
தேர்ப்பாகன்பட்டாக்கால் எனக்கென்னவென்றிருப்பா
அப்படித்தானிருக்க ஆச்சுதந்தஆரிழைக்கு [ள்
கைப்பெண்சிறையிருக்கக் காரணங்கள்வந்துதடி [லாம்
போர்க்களத்தில்செல்லவென்று புலிகாடிசேனையெல்
ஆனைபரிசேனைமுதல் அத்தனையுங்கொண்டுவந்து
ஆசாரவாசல்முன்னே விட்டுவந்தேன்ஆரிழையே
நடப்பேண்டிபூசலுக்கு ரணக்களத்தில்மன்னருடன்
உயுத்தியப்போருக்கு உத்தமியேநான்போறேன்
ஆகையினால்தாதியரே ஆரணங்கேசொல்லுகிறேன்கே
காணுத்திருமுகத்தைக் கண்டுநான்போவதற்கு [ள்
பாராத்திருமுகத்தைப் பார்த்துநான்போவதற்கு
அன்னநடையாளை அழைத்தோடிவாருமென்றார்
பொன்னுருவிநாயகத்தை பொற்கொடியையிட்டுவந்தாள்
கண்டுவொருவார்த்தை கன்னியரேதான்பேசி
பார்த்துவொருவார்த்தை பாவையுடன்தான்பேசி
போறேன்காண்பொற்கொடியே போயழைத்துவாருமென்றார்
அவ்வார்த்தைத்தான்கேட்டு ஆரிழைமாரோடிவந்து

பொன்னுருவிநாயகிக்கு போதமுடிசாதமதி
போத்வருந்தடங்காண் பொன்னுருவி நாயகமே
எழுந்துநடந்தாலும் ஏந்திழையேமாதாவே
காசிவனநாடாளுங் கர்னர்பெருமாளும்
படுகளமேறுதற்குப் பாவையரேபொன்னுருவி
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடிமேல்
மாண்டுருண்டுபோவதற்கு மங்கையரேநாளாச்சு
அரவக்கொடியானுக்கு ஆச்சுதுகாணின்றுரூடே
ஆச்சுதுநாளும் அரசாளபஞ்சவர்க்கு
பஞ்சவர்க்குப்பட்டம் பதிந்ததுயிப்பொழுது
ஆகையினல்சொல்லுகிறேன் அன்னமேநீர்கேளும்
தாமரைவேரிருந்தால் தண்ணீரேதாயாரும்
கமலமலர்மலர்ந்தால் கதிரவன்காய்ந்துகொள்வான்
தாமரைவேரறுந்தால் தாயைப்பகையாக்கும்
கரைமீதிருந்தால் கதிரவன்காய்ந்துகொள்வான்
அப்படிபோலேயென் னுச்சியரேபொன்னுருவி
ஈஸ்வரரும்பார்வதியும் எல்லோருந்தாமறிய
சந்திரருஞ்சூரியரும் தரணியாகாசமூதல்
இந்திரருமன்னவரும் இமையவருந்தாமறிய
கன்னிப்பிராயத்தில் கர்னரைமாலையிட்டீர்
நீ-மாலையிட்ட அப்பொழுதே மறைந்ததேமகாசேனே
தாலிகட்டுப்போதே தவிர்த்ததங்கேசேனைபெல்லாம்
கைகொடுத்ததோஷம் கழிக்கணுமேபொன்னுருவி
வாள்கொடுத்தார்கையில் வாணுள்கொடுப்பதல்லால்
அங்கராயன்போலே ஆண்பிள்ளைபெற்றெடுத்தீர்
அங்கனிடசெல்வமெனறு அறிந்து அத்திநகர்
அத்திநகர்மன்னரல்லோ வெற்றிபெற்றிருந்தார்கள்
ஈரேழுலகத்து இராஜாக்கள்தானபிறந்து
இன்னங்குறையுண்டோ இளங்கொடியேஉந்தனுக்கு
அந்தக்குறைவுண்டோ ஆவதுண்டோமங்கையரே
என்றைக்கிருந்தாலும் இதுவேசதங்காணும்
பெற்றூர்பிறந்தார் பிறந்திடத்தார்சுற்றமுள்ளோர்
அத்தனையுமிந்த அரசனுக்குஈடுமல்ல
கொற்றவரும்நீயும் கூடியுறவாடி
ஒத்துமிகப்பேசி உறவாடிவார்த்தைசொல்லி
செல்வனுநீருமாய்ச் சேருவகைநீர்கேட்டு

சந்ததியும் நீரும் தங்குமிடம்தான்கேட்டு
மைந்தனுக்குமுந்தனுக்கோர் வகைகேட்கவாருமென்றார்
ஆதரவுகேட்க ஆரணங்கேவாருமென்றார்
வாருங்களென்று வணங்கியவர்தெண்டனிட்டார்

பொன்னுருவி கர்னன் அரண்மனை வந்தது

அப்போதுபொன்னுருவி அரிவைமார்சொன்னதெல்லா
ஒப்புடன்தான்கேட்டு உருகியந்தமாதுநல்லாள் [ம்
மனதுகலங்கி மதிகலங்கிமங்கையவள்
அண்டவொண்ணுத்துக்கமது ஆனளேபொன்னுருவி
ஆசனத்தைவிட்டு இரங்கியந்தஆரணங்கு
சிம்மாசனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங்கி
காலிலிட்டகாற்சிலம்பு கலகலென்றுவோலமிட
கொஞ்சுங்கிளிபோலே கொம்பனையாள்தானடந்தாள்
சாய்ந்துவழிநடந்து தையநல்லாள்பொன்னுருவி
மாணிக்கத்தூணருகே மறைவாகவந்துநின்றாள்
பொற்றூண்மறைவாகப் பொற்கொடியும்வந்துநின்றாள்
காசிநாடாளுமந்த கர்னரவர்தாமறிந்து
அண்டவொண்ணுவோங்காரமாகிவந்தஆணழகன்
கண்கள்சிவந்து கடுங்கோபந்தானாகி
மருவிமனங்கொதித்து மனமடங்கியேதுரைப்பான்
அன்னமேதேனே அமுர்தப்பசுங்கிளியே
பொன்னகராஜன்பெற்ற பூங்கிளியேபொன்னுருவி
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
இன்னங்கபடங்கள் யேனுனக்குயேந்திழையே
மௌனங்கள்தீர்ந்து நீ மங்கையரேஎன்னோடே
சங்கையற்றுவார்த்தைத் தையலரேபேசொணுதோ

கர்னர் பொன்னுருவிக்குத் தன் வரலாறு கூறுதல்

ஆனலுமென்ன ஆரணங்கேநீகேளு
மானகங்கொண்ட மன்னன்திரியோதிரன்
சோற்றுக்கடன்கழிக்கத் தோகையரேநான்போறேன்
செஞ்சோற்றுத்தன்கடனைச் செலுத்திவைக்கநான்போ
பூசலுக்குநான்போறேன் பொன்னுருவிநாயகமே [றேன்
போன்பிறகு பொற்கொடியேயிங்கிருந்தால்
அரவக்கொடிபடைத்த அரசன்பெருமாளும்

சீர்ட்பக்கொடிபடைத்த தார்வேந்தரிங்கேவந்தால்
மாளிகையில்வந்துஉன்னை வாவென்றழைத்தாக்கால்
அன்னமேநீர்கேளும் அவர்பிறகுபோகாதே
இழிகுலத்தானென்று இருந்தாயிதுவரைக்கும்
தேர்ப்பாகனென்று தேன்மொழியேநீயிருந்தாய் [ன்
என்குலத்தைஉந்தனுக்கு இளங்கொடியேசொல்லுகிறே
வங்கிஷத்தைஉந்தனுக்கு வகையாகச்சொல்லுகிறேன்
பருவமதயானை பஞ்சவர்களைவருடன்
குருகுலமதயானை கொற்றவர்களைவருந்தான்
கொற்றவர்களைவரையும் கொழுந்தரென்று நீயறியும்
தக்கபுகழுடைய தர்மரெனக்கிளையார்
வெற்றிமதயானை வீமரெனக்கிளையான்
ஆளுமழகுமன்னன் அருச்சுனனென்தம்பி
நாமக்கொடிவேந்தன் நகுலனெனக்கிளையான்
சாஸ்திரக்கொடிவேந்தன் சகாதேவனெனக்கிளையான்
பாருலகில்கீர்த்திபெற்ற பாண்டுவேந்தன்தந்தையராம்
கோணுதமாது அவள் குந்தியம்மாளென்தாயார்
பேடைமலர்க்கண்ணாள் பெற்றாள்தலைமகனாய்
கன்னிப்பருவத்தில் காளையென்னையீன்றெடுத்தாள்
இரவியுடமந்திரத்தால் ஈன்றெடுத்தாளென்னையவள்
சின்னவயதிலென்னை சிக்கெனவேபெற்றெடுத்தாள்
பெற்றமகன்குற்றமென்று பூதலங்களேசுமென்று
பேழையொருபெட்டியிலே போட்டுஎன்னைமுத்திரித்து
மாணிக்கப்பேழையிலே போட்டுஎன்னைமுத்திரித்து
துங்கபத்திரிகோதாவரி சொல்பெரியஆற்றில்விட்டாள்
பாலாறுகங்கை பரவிவரும்ஆற்றில்விட்டாள்
ஆற்றுநீர்வெள்ளத்தில் அலையில்மிதந்துவர
அடுத்தநகராளும் அரசன்திரிதராட்டிரனும்
தேர்ப்பாகன்தான்தேரேறி சென்றார்கரையோரம்
அரசனும்அந்தகனாய் வருவதைத்தேர்ப்பாகன்
பெட்டிவருகிற புதுமைகளைக்கண்ணில்கண்டு
ஆற்றினில்பெட்டியவன் அதோவருகுதென்று
தேர்ப்பாகன்சொல்லையிலேதேர்வேந்தனேதுசொன்னான்
பெட்டியுமென்னுதுகாண் புதுமையெலாமுன்னுது
மாணிக்கப்பெட்டியிலே வைத்ததெல்லாமுன்னுதென்றான் [காண்
அப்போதுதேர்ப்பாகன் அலைந்துவரும்பெட்டிதன்னை

சேரப்பிடித்து சேர்ந்தெடுத்துக்கொண்டுவந்து
பெட்டியைத்தான்திறந்து பூரித்தெனையெடுத்தான்
அரசனூர்சொற்படிக்கு அவர்கையில்பெட்டிதந்தான்
வாரியெடுத்து வளர்த்தான்சிலகாலம்
செல்வமாய்ச்சீராட்டி சிக்கெனவேதான்வளர்த்தான்
அவனியெங்குமறிய அவன்மனையில்நான்வளர்ந்தேன்
வளர்ந்தேன்சிலநாள் வலுமைகொண்டுதேர்ப்பாகன்
ஆண்மையுஞ்சவுரியமும் அறிந்துமந்ததேர்ப்பாகன்
வில்வித்தைகற்பிக்க வேணுமென்றுதேர்ப்பாகன்
வல்லமையால்கீர்த்திபெற்ற மகாரிஷியின்புத்திரனூர்
ஜெமதக்னிமகாரிஷி செல்வன்பரசுராமன்
அவர்கையாலெந்தனுக்கு ஆயுதங்கள்கற்பித்தார்
ஆயுதவித்தைகற்று அவர்கையினுல்சாபம்பெற்றேன்
அப்படிநானிருக்க அரவக்கொடிவேந்தன்
னூலால்கடுந்திரளார் நூற்றுவர்கள்தன்னைக்கண்டு
வணங்கியழைத்துவந்து வாள்விஜயனுக்கெதிராய்
தேசமறியச் சிகாமணியைத்தான்மதித்தார்
அன்றுமுதலின்றளவும் அலைச்சலாய்நின்றுவிட்டேன்
தம்பிமார்காணுமல் தங்கிவளர்ந்துவிட்டேன்
ஐவருக்கும்பகையாய் அலைச்சலால்நான்வளர்ந்தேன்
பஞ்சவர்களைவருக்கும் பகையாளியாகிவிட்டேன்
உத்தமர்களைவரிட உறவிழந்துநானிருந்தேன்
ஆனுலுமென்னவிது ஆயன்செய்தந்திரமிது
மாயனூர்செய்த மகிமைகாண்பொன்னுருவி
பொன்னுருவிநாயகமே பூவையரே நீர்கேளும்
ஆளப்பிறந்த அபிமன்னனுன்மகண்டி
நொந்துவரகூடிவந்த அல்லிமகனுன்மகண்டி
கடோற்கஜன்தான்பிறந்தான் கலந்தையுமுன்னுதடி
ஈரேழுபதினுன்கு லோகமுமுன்னுதடி
படுகளத்தில்சென்றாலும் பாவையரிவையரே
அமர்க்களத்தில்மாண்டாலும் அன்னமேநீர்கேளும்
போர்க்களத்திலென்னுயிரும் போவதற்குமுன்னுக
அண்ணனென்றுசொல்லி ஐவர்களுமோடிவந்து
தமையனென்றுசொல்லி தம்பிமார்களோடிவந்து
மார்மேலுந்தோள்மேலும் வைப்பார்கள்ஐவரடி
மகுடமுடியெடுத்து மார்போடேசேர்த்தெடுத்து

அண்ணுவேயென்று அலரிடுவாரைவாடி
பொன்னுற்சிம்மாதனங்கள் போதவேதானமர்த்தி
வாரியெடுத்துவைத்து வாழ்குடந்தான்பதித்து
கைகட்டிசேவிப்பார் கட்டழகரைவாடி
நூற்றுவர்கள்தன்தனக்கும் ஏற்றமுள்ளதேவியரும்
எந்தனுக்குமேலாக இளங்கொடியேயுந்தனுக்கு
வானுலகப்புகழவழி காட்டுவாரைவாடி
ஆரோஎவரோவென்று எண்ணுதேஆரணங்கே
மன்னர்களைவருந்தான் மைத்துனர்மாருந்தனுக்கு
ஆனாலுமின்னமொன்று ஆரணங்கேசொல்வேன்கேள்
காண்டாவனமெரித்த காளையுடஅப்பாலே
கற்பகத்தேர்மேலே சாய்ந்தானேகர்னனென்ருல்
ஐவருமோடிவந்து ஆரிழையேஉன்னுடைய
பாதம்விளக்கி பனிநீரால்தான்துடைத்து
பூவும்புதுமலரும் பொன்னருகு அட்சதையும்
பூசித்துவுன்னைப் போற்றியடிபணிந்து
சிந்துபதினுடு செல்வநகரத்திபுரி
அத்திபுரநாடும் ஐவர்குருநாடும்
மெத்தப்புகழாக மேதினியோர்கொண்டாட
முத்துமணிமண்டபத்தில் முன்னுகவைப்பார்கள்
செங்கதிரோன்போல செங்கமலமும்போல
கண்காட்சியாகவுன்னை கனமுடனேவைப்பார்கள்
மைந்தனுக்குப்பட்டமு மகுடந்தரிப்பார்கள்
உன்-செல்வருநீயுமாய்ச் சிறப்பாயிருப்பீர்கள்
மைந்தருநீருமே மகிழ்ந்திருப்பீரத்திநகர்
இழிகுலத்தானென்று எண்ணுதேவேந்திழையே
போகவிடைகொடுப்பாய் பொற்கொடியேபொன்னுருவி

பொன்னுருவி தன் கணவன் வரலாறறிந்து
இருவரும் ஒருமைப்பட்டது

என்றுசொல்லக்கேட்டு இரவிமருமகளும்
அனலில்மெழுகதுபோல் அங்கனிடதேவியரும்
கல்லாயிருந்தநெஞ்சு இளகிமனமுருகி [மையாள்
எண்ணுதயெண்ணமெல்லாம் எண்ணியெண்ணியேந்தி
நிலையாத்துயரமெல்லாம் நினைந்துநிகர்வணைமீர்

கொம்பிலிருந்தகனி குலுங்கச்சொரிந்ததுபோல்
ஆருததுக்கமொடு அழுதகண்ணீர்மார்புரள
பொற்கம்பத்திருவழகை விட்டுமந்தபொன்னுருவி
கற்றூண்மறவைவிட்டு கர்னருக்குமுன்னேவந்து
அலைவந்துசேர்ந்தாற்போல் அங்கராயன்மேல்விழுந்து
புல்லார்ந்தமேகமொடு புரண்டுஅலண்டெழுந்து
மன்னன்மடிமேல்விழுந்து மாதுபுலம்பியவள்
கன்னிமனதுருகி கர்னனைப்பார்த்துரைப்பாள் [ரைக்கும்
இழிகுலத்தானென்றுசொல்லி எண்ணினேனின்னுள்வ
தேர்ப்பாகனென்றுவுன்னைச் சேராதிருந்தேனே
பெற்றூர்பிறந்தமுகம் பிறவித்துணையமர்ந்த
இடையனூர்கொண்டகொம்பாய் ஏங்கியிருந்தேனே
காட்டிலேகாய்ந்த நிலவானேன்கர்த்தாவே
கானலிலேபெய்ந்த மழையானேன்கண்மணியே
ஆற்றிலேகரைத்த புளியானேனூரணங்கு
வாழாதிருப்பதற்கோ வைத்தாய்மகாதேவா
சேராதிருப்பதற்கோ செய்தாய்மகாதேவா
பூவால்குறைவாச்சோ புஷ்பத்தால்தாழ்வாச்சோ
மலரால்குறைவாச்சோ வாழ்மலரால்தாழ்வாச்சோ
எல்லோருஞ்சாத்தாத எருக்கம்பூசாத்தினனோ
ஏதுகுறையாச்சோ ஈஸ்வரரேவுந்தனுக்கு
நான்-செய்தகுறையென்ன சிவனரேயுந்தனுக்கு
ஆளனுடன்சேராமல் ஆகவைத்தாயெந்தனை நீ
புருஷனுடன்சேராமல் பிரித்துவைத்தாயென்னையும்நீ
இழிகுலத்தானென்றுசொல்லி இணங்காதிருந்தேனே
இழிகுலவன்தான்போய் என்கணவரிப்பொழுது
குருகுலத்தாராகிவிட்டார் கொற்றவனூர்வீரியரும்
இருகுலமுமொன்றாச்சு என்னுடையநாயகரே
இந்நாள்வரைக்கும் இழிகுலத்தானென்றுசொல்லி
மறைவாயரசாண்டீர் உத்தமரேயித்தனை நாள்
பருவமதயானை பஞ்சவர்களவருடன்
உருவமதயானை உத்தமர்களவருடன்
கூடியுமேவொன்ருகி குலாவியதிசயித்து
சுகமாயிருக்கலாம் சுந்தரரேவாருமென்றாள்
போவோம்நாம்வாருமென்று பொன்னுருவிதானழைக்க

கர்னன் பொன்னுருவியைப் பார்த்து நீயேன் என்னை அவமானப்படுத்தினையென்று வினவுகிறது

காசிநாடாளுமந்த கர்னரவர்தான்கேட்டு
கலகலென்றுதானகைத்து கன்னியரைத்தான்பார்த்து
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
கட்டாணிவார்த்தைகளும்கைநீட்டுப்பேச்சுகளும் [தாய்
திட்டமுடனித்தனைநாள் தேன்மொழியேயெங்குவைத்
இத்தனைநாளெங்கே இளங்கொடியேகண்டமட்டில்
இழிகுலத்தானென்றுசொல்லி இணங்காமலென்னுடனே
தேர்ப்பாகனென்றுசொல்லித் தீண்டாமல்நீயிருந்தாய்
மாயன்கிருபையினுல் மகனென்றுவுண்டாச்சு
ஆயன்கிருபையினுல் ஆளனென்றுவுண்டாச்சு
ஒரு-மாம்பழத்தினுலேயுன் மதிமுகத்தைத்தானறிந்தேன்
அன்று அடிசிலிட்டு அடைக்காய்சுருளளித்தாய்
அயலாரைப்போலேநீ ஆக்கிவிட்டாயப்போது
அப்போதுகண்டேனுன் அழகுதிருமுகத்தை
ஏங்கிமயங்கிவிட்டேன் இளங்கொடியேகண்டமட்டும்
பார்த்துமயங்கிவிட்டேன் பைங்கிளியேயுன்முகத்தை
மறுகால்நான்பார்த்ததில்லை மங்கையரேவுன்வாசல் [ய்
உன்-வாசல்கள்தோறும் நான்வாராமலகாவல்வைத்தா
அரண்மனைகள்தோறும் நான்அண்டாமல்காவல்வைத்
காவலுங்கட்டுங் கடுஞ்சிறையும்வைத்தாயே [தாய்
வைத்துமிருந்தாயே வஞ்சியரேபொன்னுருவி
ஏழுமுழமெத்தையிலே இருந்துநீபள்ளிகொண்டாய்
நான்-தாழப்படுத்திருந்தேன் தாமக்கருங்குழலே
ஆயன்கிருபையினுல் அருகிலென்னை தூங்கவைத்தார்
மாயவனுரென்னையுந்தான் மஞ்சத்தில்தூங்கவைத்தார்
விடிந்துயெழுந்திருந்து மெல்லியென்னை நீபார்த்து
ஆலித்துசிறி அலறியேகொக்கரித்து
பொன்சிலம்புபாதத்தால் பூங்குழலேநீயுதைத்து
ஆடைகளைந்தெரிந்து அழகுபணிதான்கழட்டி
வெவ்வேறுபணிபூண்டு விசிததிரப்பட்டுடுத்தி
அங்கிருந்ததோழியரை அந்நேரங்காவல்வைத்து
இப்படியாகவேதான் இருந்தீர்சிலகாலம்
மாயன்கிருபையினுல் மைந்தனைப்பெற்றெடுத்தீர்

புத்திரன்பிறந்தானென்று உத்தமர்தாமறிந்து
மானுகமேந்தியதோர் மகாராஜன்தாமறிந்து
அரவக்கொடியுடைய அரசன்மிகவறிந்து
கலத்துப்புழுநீக்கும் கர்னனிடசெல்வன்தன்னை
பார்த்துவருவோமென்று படைமன்னர்தன்னுடனே
கண்டுவருவோமென்று காளையவர்தாமெழுந்து
என்னைவரவழைத்து இருவருமாய்கைகோர்த்து
மானுகனென்னுடனே வருகிறபோதையிலே
சிந்துபதியாளுஞ் செல்வப்பெருமானும்
காசிநாடாளப் பிறந்தவக்காளைதன்னை
தாதியர்கள்கொண்டுவந்து சந்தனமாமண்டபத்தில்
வைத்துவிளையாடி மங்கையர்கள்பார்த்திருந்தார்
மூன்கட்டுமண்டபத்தில் மூனைந்துவிளையாடினதை
கண்டந்தமானுகர் கண்கள்களிகூர்ந்து
வாரியெடுத்து மடிமீதில்தானிருத்தி
செல்வநவரத்தினமே சிங்காரப்பொற்கிளியே
வன்னப்பசுங்கிளியே மார்போடே தானணைத்து
கண்ணோடேகண்ணணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
வங்காளதேசமும் மராட்டியர்கள்தன்னுடும்
சிங்களதேசமும் சிந்துபதினாடுகளும்
அங்காடிகொள்ள அளித்தார்காண்சிதனமாய்
ஆரப்பதக்கத்தை அளித்தார்கள்சித்தடிக்கு
இந்தவரிசையெல்லாம் மைத்துனர்க்குத்தான்போட்டு
சந்ததியையென்கையில் தார்வேந்தர்தான்கொடுத்தார்
இந்தாருமென்றுசொல்லி என்மடியில்தான்வளர்த்தி
கண்காட்சியைப்பார்க்க கண்ணற்றானேனே
வந்துஅரைநாழிகையில் மாதாசேநீர்பார்த்து
எட்டுமுழமெத்தையிட்டு திட்டெனவேகுதித்து
ஓட்டமாயோடிவந்து ஒருநொடியில்பாலகனை
தீண்டாதேதீண்டாதே என்றேயேபொன்னுருவி
தேர்ப்பாகன்தீண்டினால் தோஷம்வருமென்றேயே
இழிகுலத்தான்தீண்டினால் ஈனம்வருமென்றேயே
தீண்டாதேயென்றுசொல்லி சித்தடிபாலகனை
ஓடிவந்துசித்தடியை உதட்டியாய்நீயெடுத்து
விசையுரதப்பேர்குப்போது வேல்பொருதுங்கண்ணாளே
தங்கத்திரல்பொன்சரிகை தானிதைத்தமுந்தானை

மாணிக்கப்பொற்சரிகை வைத்திழைத்தமுந்தானே
சோர்ந்துவிழுந்ததடி சுந்தரியேயென்முடிமேல்
ஆணிப்பொன்முடிமேல் ஆடைவந்துசேர்ந்துதடி
சேரவேகண்டுமெத்த துயிலாடையறுத்தெரிந்தாய்
உள்ளாடையோடே நீ உட்கட்டுப்போய்நுழைந்தாய்
அப்போதுபெண்மயிலே ஆரிழையேநானுமங்கே
கண்டுயென்மேனியெல்லாம் கசங்கிமிகப்புலர்ந்து
என்கையில்குத்தியே ஆவிமடியாமல்
மிஞ்சுமணிமுடியான் மேலுலகடையாமல்
ஏதுக்கிருந்தேனுன் ஏந்திழையேபொன்னுருவி
மானகனுக்காக இருந்தேன்மடியாமல்
மகாராஜனுக்காக இருந்தேன்மடியாமல்
சோர்ந்துமுகம்வாடி தோகையரேநானிருந்தேன்
அப்படிநானிருக்க அறிந்தான்மகாராஜன்
மானகமேந்தியதோர் மகாராஜன்தானறிந்து
ஓடியேவந்தணைத்து ஒருகையால்நீர்துடைத்து
என்-அரசேபெருவாழ்வே ஐவருக்குங்கண்ணொளியே
என்றுசொல்விராஜமன்னன் என்மனதைத்தான்தேற்றி
ஆசாரமண்டபத்தில் வந்து அருங்கிளியே
அப்போதுவுன்னெஞ்சம் ஆரிழையேநானறியேன்
நெஞ்சுமறிந்தேன்காண் நிகர்காளேபூங்கொடியே
அத்தனையும்நீக்கியென்னே அருகாகவைத்திருந்தார்
பொற்கமுதுண்ணப் போசனமும்பண்ணிவைத்தார்
தேசத்துக்கதிபதியாய்ச் சிகரம்பதித்துவைத்தார்
பட்டந்தரித்துவைத்தார் பாருலகந்தானறிய
தன்னேவணங்குவாரை என்னேவணங்கவைத்தார்
தன்னேப்பணியாராஜர்களே என்னேப்பணியவைத்தார்
நாகக்கொடியோன்செய்த நன்மைகளேநான்மறந்து
பூசலுக்குநான்பயந்து போவேனேஐவருடன்
சண்டைக்குநான்பயந்து சதிசெய்துபோவேனே
அதுவுந்தானன்றியிலே ஆரணங்கேநீர்கேளும

கர்னன் பொன்னுருவிக்குச் சகல விபரமும்
சொல்லிக்கொண்டு வருகிறது

இன்னமவர்செய்த உதவிதனே நீர்கேளும்
தேசத்தழகன் துரியோதனப்பெருமான்

வேட்டைக்குப்போகவென்று விடிந்தெழுந்திருந்து
கானகவேட்டைக்குக் கடுகவென்னே தானழைத்தார்
தாமக்குழலாளே தலைநோகுதென்றுசொல்லி
போகாமல்நானிருந்தேன் பூவையரேபொன்னுருவி
தேசத்தழகன் திரியோதிரப்பெருமான்
விடிந்தெழுந்திருந்து வேட்டைக்குத்தான்போனார்
அப்படிநானிருக்க அரசனுடதேவியரும்
பேரில்பெரிய பெருந்திருவாள் நாயகியும்
ஓடியேவந்து உத்தமியாளெந்தனைத்தான்
கலத்துப்புழுநீக்கும் கர்னப்பெருமானே
சொக்கட்டாடுவோம் சுந்தரரேவாருமென்றாள்
பாச்சிபகடைதன்னைப் பாவையருந்தான்பரப்பி
ஆசாரமண்டபத்தில் அமர்ந்தேயிருவருமாய்
மாசில்லாமேனி மங்கையருந்தானுமாய்
சங்கைகளைந்து தனித்துவிளையாடையிலே
இருவருஞ்சொக்கட்டான் இருந்துவிளையாடையிலே
தேசத்தழகன் துரியோதனப்பெருமான்
வேட்டைகளாடி வேந்தர்கள்தன்னுடனே
மான்வேட்டையாடி மன்னவர்கள்தன்னுடனே
ஆசாரமண்டபத்தில் அனைவருந்தானிருத்தி
உட்கட்டுமண்டபத்தி லொருவருமாய்வந்துவிட்டார்
மானுகங்கொண்ட மகாராஜன்தேவியரும்
அரசன்வரவுகண்டு ஆரணங்குதானெழுந்து
ஆடும்பகடைவிட்டு அலறியெழுந்திருந்தாள்
இராஜன்வருகிறதை நானுமங்கேகேளாமல்
மகாராஜன்வருகிறதை மங்கையேநான்காணாமல் [று
தோர்வையாய்த்தானெழுந்து சுந்தரியும்போனாளென்று
என்-ஆட்டத்தைத்தந்துவிடு ஆச்சியரேயென்றுசொல்லி
என்னாட்டந்தந்துநீ எழுந்திருந்துபோமென்று
முன்றானைபற்றி யிழுத்தேன்காண் மொய்குழலே
பற்றியிழுத்திடவே பாவைநல்லாள்முன்றானை
முத்துநவரத்தினமு முழுவயிரப்பொற்சரிகை
தெத்தியிருந்ததுகாண் தேன்மொழியாள்பூவாடை
முத்துசரத்தை முடியவிழ்த்துவிட்டதுபோல்
ஆலித்துவிழுந்ததுகா ணாரணங்குபூவாடை
கலகலென்று அத்தனையுங் கழன்றுவிழுந்ததுகாண்

அத்தனையும்பாரா்ம லன்ன நடையாளும்
உள்ளாடையோடேதா னுட்கட்டுபோய்நுழைந்தாள்
தென்னுகங்கொண்டோரைத் திரும்பியங்கேநான்பார்த்
அரசனைக்கண்டவுட னங்கம்நடுநடுங்கி [தேன்
உள்ளம் நடுநடுங்கி உடம்புவிடவிடவென்று
கால்நடுங்கிகைநடுங்கி கனத்தபுஜம்நடுங்கி
வாயும்வறண்டுமனம் நாவுதடுமாறி
எண்ணுதுமெண்ணினு னேங்கிமனம்வாடி
குண்ணுதுங்குண்ணினுன் குனிந்துதலையிரங்கி
அற்றதுஎன்தலைதா னரசன்கைவாளாலே
மாண்டோமேயின்றேடே மறைந்ததுபூமுடிதான்
என்றுமேநானுமிருந்தே னிளங்கொடியே
அன்றுமனந்தளர்ந்த தறிந்துமகாராஜன்
மனதுதளர்ச்சிதன்னை மன்னவனுர்தாமறிந்து
பின்னுகவந்துயென்னை பிரியமுடன்சேர்த்தணைத்து
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
வாரியணைத்து மடிமீதில்வைத்துக்கொண்டு
பூந்துகிலாடைதன்னுல் பெருகியகண்ணீர்தான்துடைத்
கலத்துபுழுநீக்குங் கர்னர்பெருமாளென்று [து
கண்டுனக்குஅச்சமென்ன கர்னரேயென்றுசொல்லி
அச்சமென்னவுந்தனுக்கு ஆணழகாவென்றுசொல்லி
ஆட்டத்தைப்பற்றி அழையுங்காணுரணங்கை
பகடையைப்பற்றி யழையுங்காண்பைங்கொடியை
என்றுசொல்லிமானுகர் இருத்தியவர்தன்மடியில்
தேனுகங்கொண்டாரும் தேவியரைத்தானழைத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
பிள்ளைக்குநானுறவோ பேடைமலர்க்கண்ணுலே
மைந்தனுக்குநானுறவோ மெல்லிமலர்க்கண்ணுளே
அவர்-ஆட்டத்தைநீதீர்த்து அப்பாலேபோமென்றுர்
ஆட்டத்தைத்தாருமென்று ஆரிழையுமெத்தனையும்
ஆடுங்களென்றுசொல்லி யரசனும்பார்த்திருந்தான்
இருவரும்ஆடையிலே இராஜாவும்பார்த்திருந்தார்
பேதங்களெண்ணுமல் பூரித்துப்பார்த்திருந்தார்
நாகக்கொடிவேந்தர் சதியொருக்காலெண்ணவில்லை
உண்மைகள்செய்தார்காண் உத்தமியேயெந்தனுக்கு
செய்தவுதவிதன்னைச் சொல்லவென்றுல்வேணதுண்டு

பண்ணவுபகாரம் பார்க்கவென்றால்வேணதுண்டு
அத்தனையும்நான்மறந்து ஆரமுலையாளே
செய்தநன்றிநான்மறந்து சேர்வேனோஐவருடன்
நன்றியதுநான்மறந்து நான்சேர நீதியல்ல
இன்னம்நான்சொல்லுகிறே னேந்திழையே நீர்கேளும்
விடிந்துயெழுந்திருந்து வெய்யோனுதித்தபின்பு
இரவிலெழுந்திருந்து இருசாமவேளையிலே
பட்டர்புலவர் பாடுங்கவிப்புலவர்
வேதமறையோர் வேதியர்கள்சாத்திரிகள்
தேசத்திலுண்டான தியாகியர்க்கெல்லோரும்
எழுபதுயானை யெடுத்துவரும்பொன்னையெல்லாம்
நானேசெலவழிப்பேன் நாயகமேபொன்னுருவி
தேனின்மொழியாளே செலவழித்ததல்லாமல்
இட்டிருந்தஆபரண மெல்லாஞ்செலவழிப்பேன்
தேடும்திரவியம் சொற்பொற்பணிதிகளும்
மாடைவிராகன்முதன் மத்தியானத்திற்குள்ளே
நானேசெலவழிப்பேன் நாயகியேயிந்தயட்டும்
காசினியையாளும் கர்னர்கொடுத்தாரென்று
பூசுரர்கள்சொல்லப் புலவர்சொல்லநானிருந்தேன்
இத்தனையுமானுக னென்னென்றுதான்கேளார்
அப்படிக்கொத்ததொரு ஆணழகர்செய்தநன்றி
அந்தநன்றிநான்மறந்து ஐவரோடுசேருவேனோ
செஞ்சோற்றுத்தன்கடனைத் தீர்ப்பேனுனின்றேடே
வளர்த்தசரீரத்தை மாய்ப்பேனின்றேடே
தஞ்சமுரைத்தவர்க்கு வஞ்சனைகளாகாது
அவர்க்காகவென்னுயிரையமர்க்களத்தில் நான்மடிப்பே
அரவக்கொடிவேந்த னன்னத்தைநான்புசித்து [ன்
எண்ணங்கொண்டாரோடேயெதிரிடவேணுங்கண்டாய்
ஐவரோடுசேர்ந்து அமர்செய்தேனானக்கால்
வானவர்கள்தேவர்களும் மகாரிஷியோர்தானகைப்பார்
பூதலத்தில்வாழுமன்னர் புன்சொல்லாய்சொல்விடுவார்
ஈனமானவார்த்தைசொல்வார் இவ்வுலகிலுள்ளவர்கள்
மானுகர்செய்தநன்றி மறப்பேனோமங்கையரே
மறந்துவிடுமிவ்வார்த்தை வண்டார்குழலாளே
விட்டுவிடுமிவ்வார்த்தை வேல்பொருதிங்கண்ணாளே

கர்னன் சொல்லிவந்ததைக் கேட்டுப் பொன்னுருவி துக்கப்படுதல்

என்றுசொல்லித்தானுரைக்க ஏந்திழையாளப்போது
ஈரச்சுவரதுபோல் இடிந்தாள்மனந்தனிலே
கல்லாயிருந்தநெஞ்சுங் கரைந்தாளேபொன்னுருவி
மண்ணோடேமண்ணாய் மாதுநல்லாள்தானிருந்தாள்
அப்போதுகர்னரவ ரருங்கிளியைத்தான்பார்த்து
போய்வாரேனென்றுசொல்லி போற்றியெழுந்திருந்தார்
கடுகவெழுந்திருந்தார் கர்னர்பெருமாளும்
எண்ணாத்துயரமெல்லா மெண்ணியேயேந்திழையாள் [டு
போரேனெனசொன்னமொழி பொன்னுருவிதான்கேட்
நினையாதுயரமெல்லாம் நினைத்தந்தநெடுவணையாள்
காமவிகாரமதைக் கடுகியவள்தானினைந்து
ஆங்காரமாகியே யலறியவள்தானெழுந்து
போங்காரத்தோடே பொங்கியவளெழுந்து
குறுக்காகவந்துநின்று கொற்றவனைத்தான்பிடித்து
மானுங்கலையும் மருவியணைந்ததுபோல்
கொங்கைகளும்மார்பமுழுந்தக் கொற்றவனைத்தான்தழுவி
செங்கவளைக்கையாலே சேர்த்துபிடித்தவரை
அங்கவளைநாட்டாரை யாரிழையாளிட்டுவந்து
மாணிக்கமிட்டிழைத்த மஞ்சத்திலிட்டுவந்து
ஆணிப்பொன்மேடையிலே ஆளனைத்தானிருத்தி
தனக்குக்கவரியிடுந் தாதிமுகம்நோக்கி
அடிசில்சமையுமென்று அன்னநடையாளும்

பொன்னுருவி தாதியை யழைத்துச் சமையல் செய்யக் கட்டளையிட்டது

என்றுசொல்லக்கேட்டு ஏந்திழைமார்தாதியர்கள்
போசனப்பெண்கள்வந்து பூரித்துஅன்னேரம்
பத்துவகைக்கறியும் பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதப்பொரியல் இயல்பாகத்தான்சமைத்தார்
புத்துருக்குநெய்யும் போனகத்திமார்சமைத்தார்
சொன்னகணப்பொழுதில் தோகையர்கள்தான்சமைத்
தேனார்மொழியாளின் சிங்காதனத்தருகில்வந்து [தார்
பொன்னுருவிநாயகமே போசனமாச்சுதென்றார்
அமுதுண்ணவாருமென் 'றடிபணிந்துதெண்டனிட்டார்

அழுதென் றுசொல்லுகையி ளாயிழையாள்பொன் னுரு
திக்கென்றெழுந்திருந்து சிம்யாசனம்போட்டார் [வி
அங்கவள நாட்டாரை யருந்திடவேகைபிடித்து
அழுதுண்ணவாருமென் றறைந்தாளேயாரணங்கு
போசனஞ்செய்வதற்கு போவோம்வாவென் றுரைத்தாள்
வாவென் றழைக்கவே மன்னவரப்பொழுது
அங்கமெல்லாம்பொங்கி ஆச்சரியந்தானுகி
இன்பங்குளிர்ந்து இளங்கொடியைதான்பார்த்து
கட்டியணைத்து சனிவாயைமுத்தமிட்டு
சேர்த்துஅணைத்துச் செம்பவளவாய்திறந்து
ஆனைமேதேனே யமிர்தப்பசுங்கிளியே
தேனேரசமே தித்திக்குஞ்செங்கரும்பே
மானேகுயிலே வயிரமணிவிளக்கே
இந்நாள்நெடுநா ளிணங்காமலென் னுடனே
கல்லாகிநெஞ்சங் கரையா திரும்பாகி
வாழாமல் நீயிருந்தாய் மங்கையரேயிந்நாளும்
அழுதுண்ணவாருமென் று அழைத்தாயேமங்கையரே
இழிகுலத்தான்பேச்சல்லோ ஏற்கா துவுந்த னுக்கு
தேர்ப்பாகனெச்சிலடி தேன்மொழியேயாகாது
அவையுங்காணெந்த னுக்கு ஆரிழையேபோய்வாரேன்
போய்வாரேனென் றுமந்த புண்ணியனுர்தான்கூற
போய்வாரேனென் றுசொல்ல புரிகுழலாள்தான்கேட்டு
மார்புரளக்கண்ணீரை மலர்க்கண்ணில்சோரவிட்டாள்
முத்துமுத்தாய்கண்ணீரை முன்மார்பில்சோரவிட்டாள்
சோரவிட்டகண்ணீரைச் சுந்தரருந்தான்பார்த்து
அங்கவடநாடாளு மரசனுமேதான்பார்த்து
அழவேண்டாப்பூமாதே யரிவையரேசொல்லுகிறேன்
சமர்க்களப்போகிறபேர் சாப்பிட்டுப்போவாரோ [கேள்
நாடுநகராண்டு நகர்தனில்வாழ்வார்கள்
படுப்பார்கள்பஞ்சணையில் பாவையுடன்கூடியப்போ
அடுக்காதடுக்காதே யமர்செய்யப்போவதற்கு
ஏதுபரியாசஞ்செய்தா யிளங்கொடியேபோவென்றார்
அந்தமொழிகேட் டரிவைநல்லாள்பொன் னுருவி
ஆனவில்மெழுகதுபோ லாயினுள்பொன் னுருவி
அக்கினியிற்பட்டதொரு புழுப்போர்பதைக்கலுற்றார்
ஈரச்சுவர்துபோல் இடிந்துஇளங்கொடியாள்

அலைந்துசேர்ந்ததுபோ லங்கனிடமேல்விழுந்து
மெல்லிநல்லாள் பொன்னுருவிபோகவிட்டுநானிருக்கே
சண்டைக்குநீபோகத் தரிக்கேநான்பூமியிலே [ன்
என்னைவிட்டுநீர்போனு லும்மைவிட்டுநானிருக்கேன்
நானும்வருவேன்காண் ராஜாவேயும்முடனே [தாள்
என்றுசொல்லிபொன்னுருவி இதஞ்சொல்லத்தானழைத்
அமுதுண்ணவாருமென்று அன்னநடையாளும்
கர்னரிடகச்சையைத்தான் காரிழையாள்தான்பிடித்து
வாருமென்றுசொல்லி வருந்தியழைக்கலுமே

கர்னரும் பொன்னுருவியும் போஜன முண்ணது

காசிவளநாடாளுங் கர்னர்மனமகிழ்ந்து
மாசிலாமேனியந்த் மங்கையரைக்கைபிடித்து
மன்னவருந்தேவியரு மடப்பள்ளியில்போய்புகுந்து
கொற்றவருந்தேவியருங் கூசாமல்போய்நுழைந்தார்
கைபூசநீர்கொடுத்தார் கன்னியர்களந்நேரம்
வாங்கியவர்கைபூசி மனங்குளிரவீற்றிருந்தார்
மன்னர்க்குமாதினுக்கும் வாழையிலைபரப்பி
அமுதுகறிவகையு மறுசுவையுந்தான்படைத்தார்
அறுசுவைவகைக்கறியு மன்பானபச்சடியும்
பத்துவகைக்கறியும் பாங்குடனேதான்சமைத்து
பொரித்தபொறிக்கறியும் பொன்போல்சிறுபயறும்
புத்துருக்குநெய்யும் பூவையர்கள்தான்சொரிந்தார்
கட்டித்தயிருங் கற்கண்டுச்சர்க்கரையும்
மாங்கனியுந்தேங்கனியும் வாழைப்பலாக்கனியும்
காட்டுமாங்கனியும் கருவாழைப்பலாக்கனியும்
இட்டங்களிக்கவேதா னேந்திழைமார்தாதியர்கள்
உண்டுகளித்தார்கள் உள்ளமெல்லாம்பூரிக்க
கண்டுகளித்தார்கள் காளையரும்கன்னியரும்
கையலப்பநீர்கொடுத்தார் காரிழைமார்தாதியர்கள்
போசனமுண்டு பொடிகொண்டுகைப்பிடித்து
இருவருங்கைகோர்த்து இளைப்பாருமண்டபத்தில்
வந்துயிருந்தார்கள் வயிரமணிமேடையிலே
சந்தனமும்பனிநீரும் சாந்துப்புனுகுமங்கே
பூவும்புதுமலரும் பூவையர்கள்தான்கொடுத்தார்
வாங்கியிருவரும் மனமகிழ்ந்துதானிருந்தார்

அரிபிளவுவெற்றிலையும் ஆரிழைமார்தான்கொடுத்தார்
சாம்பிராணிமொக்குடனே சாதிக்காய்வெள்ளிலையும்
ஏலம்லவங்கமுடன ஏந்திழைமார்தான்கொடுத்தார்
கற்பூரஞ்சுண்ணாம்புங் கன்னியர்கள்முன்னேவைத்தார்
தாம்பூலந்தானவாங்கிச் சந்தோஷமாயிருந்தார்
அப்போதுமன்னன் அரிவையரைத்தான்பார்த்து
காஞ்சிநாடாளுங் கர்னனுமேதுரைப்பான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
மன்னவர்க்குத்துரோகங்கள் வஞ்சனைகள்செய்வதில்லை
ஐவருடனானு மமர்பொருதும்வேளையிலே
காண்டாவனமெரித்த காளையிட்ட அம்பாலே
கற்பகத்தேர்மேலே சாய்ந்தானேகர்னனென்றால்
கேட்டமனதுருகிக் கிளிமொழிமானுமனப்போ
வளர்த்த அருமையினல் மானுகனேடிவந்து
தமையனிடதேவியென்று தார்குழலேயுந்தனைத்தான்
வணங்கியழைத்தாக்கால் வஞ்சியே நீபோகாதே
எவ்விதங்கள்சொல்லி யழைத்தாலும்போகாதே
கோணுதமாது குந்தியம்மாள்பெற்றெடுத்த
குந்தியம்மாள்பெற்றெடுத்த கொற்றவர்களோடிவந்து
மார்மேலும்தோள்மேலும் வைத்தெடுத்துக்கொண்டுசென்று
மாணிக்கமெத்தையின்மேல் வைப்பார்களென்னையவர்
ஐவருக்குமூத்தவரென் றரசுமெனக்களிப்பார்
ஆசனத்தின்கீழிருந்து அடிபணிந்துபூசைசெய்வார்
இருபக்கந்தானிருந்து ஏவல்களைச்செய்திடுவார்
மங்கையரேயுன்னிடத்தே மன்னவர்களோடிவந்து
அண்ணனிடதேவியென்றுமண்ணியென்றுமுன்னையவர்
சீக்கிரமாயோடிவந்து திருவடியைப்பூசைசெய்து
புத்திரர்தன்னுடனே பூமியுள்ளோர்தான்புகழ
எத்திசையுமன்னர்க ளெல்லோருங்கொண்டாட
குருகுலத்தார்பட்டம் குழந்தைக்களிப்பார்கள்
தேசமறியச் சிகாமணியாய்வாழ்ந்திருப்பீர்
ஆகையாலுந்தனுக்கு ஆரணங்கேசொல்லுகிறேன்
அந்தநல்லபஞ்சவர்க ளைவருந்தான்மைத்துனர்காண்
கொற்றவர்களைவருந்தான் கொழுநன்மாருந்தனுக்கு
கோணுதமாதவள் குந்தியம்மாளுன்மாமி
தோராவடிவழகி திரௌபதையுனக்கிளையார்

ஐவ்ரிடதேவியர்களைவருமுனக்கிளையார்
ஆளப்பிறந்த அபிமன்னனுன்மகண்டி
தேசத்தரசன்கூறிவந்த அல்லித்திருமகனுர்
பூமார்பழகன் புலந்திரனுர்வீரியரும்
உன்-மைந்தனிலுந்தானதிகம் மாயாண்டிநாட்டாண்டி
உன்-பிள்ளையிலுந்தானதிகம் புலந்திரனுர்வீரியனும்
அவர்க்கு-வேணப்பிரியங்கள் சொல்லிவந்தேன்மெல்லியரே
அந்த-தார்வேந்தனுன்னை தளரவிடார்மெல்லியரே
போர்க்களமும்சென்று பூசல்வடித்தாக்கால்
நூலால்கடுந்திரளார் நூற்றுவர்கள்தேவியரும்
அத்திப்புரத்தில்வாழ் பத்தினிமாரெல்லோரும்
முன்னுளிலிட்ட சபதமுடிக்கவென்று
பாஞ்சாலிநாயகியாள் படுகளத்தில்பார்த்திருந்த
பார்த்திருக்கவெல்லோரும் படுகளத்தில்வந்துநின்று
அரசரிடதேவியர்களனைவரும்வந்துநின்று
தர்மரவர்சொல்வதினுல் தார்வேந்தர்கன்னியர்கள்
ஆழவேகுழிவெட்டி அக்கினியைத்தான்மூட்டி
மாயன்சொல்வதினுல் மங்கையர்கள்வந்துநின்று
ஆயர்கிருபையால் அக்கினியில்தான்விழுவார்
மங்கையர்களெல்லோரும் வந்து அனல்பாய்கையிலே
செங்கைவளைகன்னியர்கள் தீக்குழியில்பாய்கையிலே
ஐவருமுன்னை யனல்பாயவொட்டார்கள்
பஞ்சவர்களுன்னைப் படுகுழியில்பாயவொட்டார்
செல்வருக்காயுன்னையவர் தீக்குழியில்பாயவொட்டார்
மைந்தரையுமுந்தனையும் மாளிகையில்கொண்டுசென்று
மன்னவர்க்குமேலான மதனியென்றுசொல்லியுன்னை
அண்ணனிடதேவியென்று ஆரணங்கேயுன்னையவர்
போற்றிப்புகழ்ந்திருப்பார் பூவையரேபஞ்சவர்கள்
கண்டுகளித்திருப்பார் கன்னியரேயுன்னையவர்
புத்திரரும்நீயுமாய் புகழ்பெறவேவாழ்ந்திடுவீர்
மைந்தரும்நீயுமாய் மனங்களிக்கவாழ்ந்திருப்பீர்
சந்ததியும்நீயுமாய் தார்குழலேவாழ்ந்திருப்பீர்
தான்-இராச்சியமாண்டு நலமாயிருக்கையிலே
அரவக்கொடியோனுடனே அரசுசெலுத்துகையில்
தான்-வாழுமநாளையிலே நாயகமேநீயுமநானும்
ஓராசனத்தில்தான் ஒருமித்திருவருமாய்

மருவிவிளையாடி சரசங்கள் தானுஞ்செய்து [டேன்
பஞ்சணையில்பள்ளிகொள்ள பாக்கியம்நான் அற்றுவிட்
இழிகுலத்தானென்றுசொல்லி இணங்காமல்நீயிருந்தாய்
தேர்ப்பாகனென்றுசொல்லி தீண்டாமல்நீயிருந்தாய்
ஆனாலும்என்னயினி ஆரணங்கே நீகேளும்
மஞ்சள்புனுகுடனே மைச்சார்துபொட்டுடனே
பூவும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையும்
வாரிக்குழல்முடித்து மனமகிழ்ந்துநீயிருந்தாய்
ஆபரணந்தான்பூண்டு அழகியபட்டுடுத்தி
அரிபிளவுதின்று யிருந்தீரே இந்நாளும்
இனிபூவின்மணம்மறந்தீர் பொன்சாந்துநீர்மறந்தீர்
மஞ்சள்குளிமறந்தீர் மணமறந்தீரின்றேடே
தாலிமறந்தீர் தரிபணிகள்தான்மறந்தீர்
சேலைமறந்தீர் செங்கழுநீர் நீர்மறந்தீர்
வண்ணத்துகிலாடை மறந்ததுதானின்றேடே
வெள்ளைத்துகிலாடை விதியாச்சுஉந்தனுக்கு
வெண்ணீருகாப்பணிய வைத்தார்மகாதேவர்
கைப்பெண்சிறையாகக் காரணங்களாச்சுதடி
ஆனாலுமென்னவிது ஆயர்செய்தவுபாயமடி
மாயவனார்செய்த மகிமையிதுமங்கையரே
மஞ்சள்குளிமறந்து வாழ்வுகுறைந்தாலும்
இன்றுமுதல்மைந்தர் இவ்வுலகம்நீபெறுவாய்
தார்வேந்தர்உந்தனைத்தான் தளரவிடார்தையலரே
பேரைவர்தங்கள்முன்னே பெருந்தலையாய்நீயிருப்பாய்
மண்டலத்திலுள்ள மன்னவர்கள்கொண்டாட
செத்தானேகர்னன் சுகம்பெற்றாள்பொன்னுருவி
மாண்டானேகர்னன் வரிசைபெற்றாள்பொன்னுருவி
மைத்துனமார்தன்னாலே வரிசைபெற்றாளென்றுசொல்வார்
அரசர்கள்தான்பெற்ற வரண்மனையில்வீற்றிருப்பாய்
மன்னவர்கள்தான்பெற்ற மாளிகையில்மகிழ்ந்திருப்பாய்
தார்வேந்தர்மாளிகையில் தையலருநீருமங்கே
சுகமாயிருங்காணுஞ் சுந்தரியேபொன்னுருவி
உன்னை நினையாதே இளங்கொடியேசோராதே
இரவும்பகலும் எந்நேரஞ்சோராதே
ஐவரைப்பற்றிநீ இருங்காணும் ஆரணங்கே
பஞ்சவரைப்பற்றிநீ இருங்காணும்பைங்கொடியே

புத்திரரைப்பற்றி நீ இருங்கா ணுப் பைங்கிளியே
மாமியார்மைத் துனர்க்கு மன துரை நீநடந்து
மாமியார்க்கேற்ற மருமகளாமென் றுசொல்ல
பேர்பெற்றிருங்கா ணும் பொன் னுருவி நாயகமே
போகவிடைகொடுப்பாய் பூவையிளங்கொடியே [ளும்
விடையென் றுகேட்கையிலே வேல்பொருதுங்கண் ணு
கர்னர்முகம்பார்த்து காரிழையாளே துரைப்பாள்
போர்க்களத்தில் நீரும்போய் போர்பொருதிமன்னருடன்
அமர்க்களத்தில்நீரும்போய் அருதிபாய்த்தான்மடிந்தால்
பொன்னரசுமாள்வதற்குப் போர்வேந்தர்மன்னவர்கள்
குருகுலத்தானென் றுசொல்லுங் குறிப்பறியமாட்டாமல்
இழிகுலத்தான் தன்கழுத்தில் இட்டாளேமாலையென் று
நாடுநகர தனை நலமுடனேவிட்டுவிட்டு
காட்டகத்திற்போனுரே காதலருமாச்சியரும் [வேன்
அவர்-வாரா திருந்தாக்கால் மன்னவரேயென்னசொல்
ஐவருக்கென்சொல்வே னுச்சியர்க்கென்னசொல்வேன்
தமையருக்கென்சொல்வேன் தம்பியர்கே துசொல்வேன்
ஏதுசொல்வேனென் று இளங்கொடியாள் தா னுரைக்க
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுன னுமேதுசொல்
போதேவருந்தடங்கண் பொன் னுருவி நாயகமே [வான்
ஆணுலழகுமன்னன் அர்ச்சுனன்கையம்பாலே
கற்பகத்தேர்மேலே சாய்ந்தான் கர்னனென்ருள்
பஞ்சவர்களோடிவந்து பரிவாயெனையெடுத்து
கொண்டுபோய்த்தங்கள் கொலுவிலமர்த்தியபின்
உங்கள்-ஐயமார் ஆச்சியற்கு ஆள னுப்பிவைப்பார்கள்
கொற்றவர்களைவருந்தான் குறிப்பறியவைப்பார்கள்
அப்போ-உங்களிட தாய்தந்தைப ரறிந்திடுவாரென்குலத்தை
குருகுலத்தானென் றுசொல்லி கொற்றவர்கள் தானறிந்து
மருமக னுக்காக வரிசைய னுப்பிவைப்பார்
ஈரேழுபதினு லு ராஜாக்கள் தானறிய
ஆனைபரிசேனைகளும் அவர்க்கேற்றராஜ்ஜியமும்
பொன் னுபரணங்களும் போர்வைபட்டாடைகளும்
அரசர்கள் தான்மதிக்க அனுப்பிவைப்பாரெந்த னுக்கு
வேண்டும்வரிசையெல்லா மெல்லிய னுப்பிவைப்பாள்
தருமரிட ஐவர்களும் தார்வேந்தர் தங்களுடன்
வந்தவரிசையெல்லாம் வகையாகத்தானிறக்கி

அவர்களெல்லவர்க்கும் அரியவகைபடுத்தி
தார்வேந்தர்தங்களுடன் சம்பந்தந்தானுகி
உத்தமர்கள்தங்களுடன் உறவாகிஐவருந்தான்
வந்தொருசம்பந்தி மார்களுக்குஅந்நேரம்
வேண்டும்வரிசைகளும் வேண்டியது அவர்களுக்கு
மன்னவரையெல்லாம் மகிழ்ச்சிபெறதானனுப்பி
இன்பஞ்சுகமாக இருப்பார்களென்னருகில்
மனங்களிக்கஐவருந்தான் வந்திருப்பாரென்னருகில்
அப்போதெரியுமுங்கள் ஐவருக்குமென்பிறப்பு
ஈனகுலமென்பதுவும் என்குலமுமென்பிறப்பும்
தானேயறிவார்கள் தையலுந்தாய்தகப்பன்
மாண்டால்தெரியுதடி மங்கையரேஎன்குலந்தான்
செத்தால்தெரியுமடி தெள்ளமிர்தேஎன்குலந்தான்
அப்போதுஉங்களையர் ஐவருடன்கூடியாடி
மனதுமகிழ்ந்திருப்பார் வஞ்சியேநீஅஞ்சாதே
மாதாமொருபயணம் மாதாவின்தன்மனைக்கு
போய்வருவாய்நீயும் பொன்னுருவிநாயகமே
தாய்வீடுமாமிவீடுஞ் சந்தோஷமாயிருப்பாய்
மைந்தரும்நீயுமாய் மதிக்கவேவாழ்ந்திருப்பாய்
புத்திருநீயுமாய்ப் பூரித்துவாழ்ந்திருப்பாய்
போகவிடைதாரும் பூவையரேபொன்னுருவி
என்றுசொல்லக்கேட்டு எழுந்திருந்துபொன்னுருவி
மைந்தனைக்கொண்டுவந்து மன்னவனுர்கைகொடுத்தாள்
வாங்கியந்தப்பாலகனை மார்போடேதானணைத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
கொஞ்சிவிளையாடிக் கோதாட்டிச்சீராட்டி
மைந்தன்கவலையெல்லாம் மன்னவனுர்தான்தீர்ந்து
பிள்ளைகவலையெல்லாம் புண்ணியனுர்தான்தீர்ந்து
ஏந்திழையாள்கையில் எடுத்துமவர்தான்கொடுத்து

கர்னர் பொன்னுருவியிடம் விடைபெற்றுக்கொண்டு அமர்க்களம் போகிறது

போய்வாரேனென்றுசொல்லி பொன்னரசைதான்கேட்
போய்வாரேனென்றசொல்லே பொன்னுருவிதான்கேட்டு [டு
அங்கம்பதைக்க ஆருத்துக்கமுடன்
பொங்கிமனமுருகிப் புண்ணியனுர்மேல்விழுந்து

ஆசையெல்லாந்தீர அவர்மேல்புரண்டழுது
மெத்தவருத்தமுடன் மெல்லியருந்தானெழுந்து
போய்வாருமென்றுசொல்லிப் பொன்னுருவிதானுரைத்
மங்கையவளுரைக்க மன்னவனுர்தானெழுந்து [தாள்
சிம்மாதனத்தைவிட்டுத் திகைத்துமதிமயங்கி
வாசற்படிகடந்து மங்கைநல்லாள்கோவில்விட்டு
பதினெட்டுவுப்பரியும் படியும்பலகடந்து
ஆசாரசாவடிமுன் அங்கராயன்தான்வரவே
கர்னர்வருகிறதைக் காவலர்தானறிந்து
சின்னம்பிடித்தார்கள் செகதலங்கள்தானறிய
ஊதினுர்சின்னம் உலகமெல்லாந்தானறிய
கற்பகத்தேர்மேலே ஏறினுர்கர்னரவர்
அருகிருந்தமன்னவர்கள் அவரவர்வாகனத்தில்
ஏறியே அங்கனுட இருபக்கஞ்சூழ்ந்துகொண்டார்
பாட்டகர்புலவர்களும் படைமன்னர்சேனைகளும்
கட்டியங்கள்கூறக் கவிவாணர்தான்புகழ
எக்காளையூத இராயகொடிமுழங்க
பேரிகைமுழங்க பெரியதாரையூதிவர
துந்துமிமுழங்க திருச்சங்குதானூத
பொற்சின்னந்தான்முழங்க புறப்பட்டார்கர்னரப்போ
காசிநகராளும் கர்னரிடபொற்சின்னம்
ஏதென்றுசொல்லி ஊதினுர்பொற்சின்னம்
சூரியன்புத்திரனுர் துலங்கும்மணிவிளக்கு
தயிலாடன்வாய்ப்புழுவை தவிர்த்ததொருசஞ்சீவி
பஞ்சவர்க்குநூற்றுவர்க்கும் பட்டத்ததிபதியாம்
வருகிருரென்றுசொல்லி மகிழ்ச்சிசின்னந்தானூத
வீதிகடந்து வேந்தர்மனைகடந்து
கடையுங்கடைத்தெருவுங் கன்னுரவீதிவிட்டு
தெத்துகடந்து தெருவுப்பலகடந்து
போர்களத்தில்வந்து புகுந்தார்கர்னருமே
சமர்க்களத்தில்வந்து சதிராகமன்னவனுர்
சல்லியனுர்தேருடனே தார்வேந்தனப்போது
ஆனைபரிசேனை அணிவகுத்துநின்றுர்கள்
முன்னணியும்பின்னணியும் மூதலணியும்போரணியும்
ஒன்றுகத்தானிறுத்தி நடுவணியில்நின்றுர்கள்
அப்போதுபஞ்சவர்க ளவரவர்சேனையுடன்

சின்னப்பணிமாறத் திருச்சின்னந்தானூத
ஆயுதம்பட்டு அமர்க்களத்தில்வந்துநின்றார் [லாம்
போர்க்களத்தில்வந்துநின்று புண்ணியனார்சேனையெல்
சக்ராயூகம்போலே தானிறுத்திசேனையெல்லாம்
பற்குணனுமப்போது படுகளத்தைப்பார்த்துநின்றான்
அப்போதுமாயவனை வருக்கேதுரைப்பார்
தக்கப்புகழுடைய தருமரைத்தானழைத்து
தாரார்மணிமார்பா தர்மரே நீர்கேளும்
ஆட்டினிடமந்தைகண்டு ஆலிக்கும்வேங்கையைப்போல்
சூரியன்புத்திரனார் துலங்குமணிமுடியோன்
அக்கினியைப்போலே அங்கராயர்வந்தார்காண்
செந்தணலைப்போலே வந்தான்கர்னனென்று
பருத்தப்பொதிதனிலே நெருப்புபொதியதுபோல்
ஐவரையுமின்றேடே யனலாயெரிப்பான்காண்
ஆகையினாற்சொல்லுகிறே னைவரே நீர்கேளும்
ஐவருமொன்றாக அணிவகுத்துநின்றிடுங்கள்
உங்களைக்கைவிட்டேனென் றெண்ணாதீர்பஞ்சவரே
அங்கராயனுக்கெதிரா யாலித்துநின்றிடுங்கள்
அந்தமொழிகேட்டு ஆயரைத்தான்பார்த்து
கலகலென்றுதானகைத்துக் காவலர்களேதுசொல்வார்
ஆழியைவென்றவந்தோ மாறுகளை நீந்திவந்தோம்
ஏழுகடல்நீரு மேகவோ நீந்திவந்தோம்
மண்ணெடுத்தபுற்குழிதான் மாயவரேயரிதாச்சு
வீஷ்டுமர்துரோணர் விகர்னர்கள்நூற்றுவரை
சேரவேகொண்டுவந்தோம் தீரஅமர்க்களத்தில்
ஆனையைக்கொன்றவர்க்குப் பூனையரிதாச்சோ
புலிகளைகொன்றவர்க்கு எலிகொல்லதானரிதோ
ஆயரேயுன்னருளா லலங்காரபூமுடியை
நூற்றுவர்களோடே காற்றில்பறக்கடிப்போம்
ஏதுகாணிவ்வார்த்தை எளிதமாய்ச்சொல்லிவிட்டீர்
என்றுசொல்லக்கேட் டெம்பெருமாள்தானுரைப்பார்
தக்கப்புகழுடைய தர்மரே நீர்கேளும்
காசியையாளுங் கர்னப்பெருமாளும்
உதித்தெழுந்ததாகத்துக்கும உத்தமர்களைவரையும்
கொன்றுதுரியனுக்குக் கொடிதருவேனென்றுசொல்லி
தார்வேந்தர்முன்பாகச் சபதமிட்டுவந்தார்கள்

ஆகையினல்கர்னனை யமர்க்களத்தில்சாமத்துக்குள்
கொல்லவேணுமென்று கூறினர்மாயவரும்
அவ்வார்த்தைதான்கேட் டாச்சரித்தாரைவர்களும்
கொற்றவர்களைவருந்தான் கொக்கரித்துக்கானெழுந்தார்
மாயவரேயுன்னருளால் வஞ்சனையால்கர்னனைத்தான்
எமபுரத்துக்காளாக யேற்றுகிறோம்பாருமென்று
கையில்சிலைபெடுத்துக் காவலர்களும்புகுந்து
சேனைகளத்தனையுஞ் சின்னபின்னமாகவே
தேரோடுதேரறுத்துச் சிதறடித்தார்பார்தனிலே
கரிகள்பரிசேனையுடன் கதறிமுறிந்திடவே
அர்ச்சுனனுங்கர்னன்மேல் அதட்டிவருவதைக்கண்டு
தேர்விசையன்வில்வளைத்து சீறிவருகிறதை
சாரதியன்சல்லியனுகக் கர்னனைத்தான்பார்த்து

கர்னரைச் சல்லியன் சமாதானமாகப் போகச் சொன்னது

கண்டீரோகர்னு நீ காளைவருகிறதை
எரிமுகத்து அக்கினிபோ லெதிர்த்துவாரானருச்சுனனு
முன்னுள்பரசுராமர் பொழிந்தநல்லவாய்மையினல் [ம்
கைச்சிலைகளெல்லாங் கடுகச்சமைந்தான்காண்
அஸ்திரங்களில்லைகா னங்காராயர்வுன்னிடத்தில்
ஆகையாளவர்பக்க மடைவாகச்சேருவோம்வா
வாருமென்றுசொல்லி வருந்தியழைக்கையிலே
அவ்வார்த்தைதான்கேட்ட அங்கராஜன்தானகைத்து
சல்லியனைத்தானேக்கித் தானங்கேயேதுரைப்பார்
உத்தரதேசத்து ராஜாவே நீர்கேளும்
கற்பகத்தேரிருக்கக் கைதனிலேவேலிருக்க
அற்புதமாய்க்கொல்லவல்லோ சர்ப்பக்கணையிருக்க
ஒப்பாகபெண்ணுமல் சொற்பமாய் நீயுரைத்தாய்
ஐவரையுமின்றேடே அடக்குகிறேன்பாருமென்று
பார்த்துரைத்துக்கர்னன் பாம்புக்கணையெடுத்தான்
சல்லியனுமங்கே தானங்கேயேதுரைப்பான்
காசினியையாளுங் கர்னப்பெருமாளே
முன்னளில்பாஞ்சாலி முடிமன்னர்சபைதனிலே
ஈரேழுபதினறு தேசத்துராஜமன்னர்
ஐயாயிரந்தேசராஜாக்கள் தானறிய

மாநாகன்தன்னுடனே மருஞ்சிலேயைத்தான்வளைக்க
மாளாமல்விட்டீர் மகாசபையோர்பார்த்திருக்க
வளைக்காமல்விட்டுவிட்டீர் மன்னவரேகர்னரே நீர்
அனைவரும்பார்த்திருக்க அர்ச்சுனனுரப்போது
பத்துபேர்தான்பார்க்க பார்த்திபனுமோடிவந்து [தே
அவ்வில்லைத்தான்வளைத்து அரைக்ஷணத்திலப்பொழு
அனலிற்பிறந்தவளை அப்பொழுதேமாலையிட்டான்
தீயிற்பிறந்தவளைச் சிலைவளைத்துமாலையிட்டான்
வில்வளைத்துமாலையிட்டான் மெல்லியந்தப்பெண்மயிலை
கணைவளைத்துமாலையிட்டான் காளையந்தவருச்சுனனும்
அப்படிக்கொத்தவர்களைவ ரந்தப்பஞ்சவர்கள்
மச்சநாடெல்லையிலே மாட்டைமடக்கையிலே
உத்தரனேடேயொரு தேர்மீதிலேறிவந்து
மாட்டைத்திருப்பிவிட்டு மன்னர்க்கெதிரில்வந்து
சின்னபின்னமாகவே சேனையைப்பறக்கடித்து
மன்னவர்கள்பூமுடியில் மகுடம்பறித்தவனும்
தேவர்கள்வாழ்ந்திடவே சென்றூன்விலாடபுரம்
மகுடம்பறிகொடுத்து வந்தீர்கள் அத்திபுரம்
அப்போதேநானறிந்தே ஞாயவித்தையெல்லாம்
வேறென்னகண்டீர்காண் வீரா நீவில்வித்தை
அதிகமாய்க்கற்றீரோ அங்கராயாவில்வித்தை
மாயவனுரைவருக்காய் வலுவாயிருக்கையிலே
உன்-வாழ்பாம்புவிட்டாக்கால் சண்டைபண்ணுரைவருந்
சர்ப்பத்தைவிட்டாக்கால் வதைத்திடமாட்டாது [தான்
ஆகையினுல்சொல்லுகிறே னறிந்துதிருப்புமென்றூர்
அவ்வார்த்தைத்தான்கேட் டரசனங்கேதுரைப்பான்
காசிநகராளுங் கர்னனுமேதுரைப்பான்
கொல்லுப்புலியதுபோற் கோபித்துக்கண்சிவந்து
எதிராளிக்காகவென்னை இகழ்ச்சியாய் நீயுரைத்தால்
சிவனையாதரித்தாற் சேருந்துரியனேடே
என்றுசொல்லியங்கராய னெடுத்தானேசர்ப்பந்தன்னை
சர்ப்பக்கணையெடுக்கச் சல்லியனுர்தான்பார்த்து
கர்னனைவிட்டுக் கடுகியேசல்லியனுர்
மாஞகன்பக்கலிலே வந்துவிட்டாரப்போது
சல்லியன்போனபின்பு தாக்குள்ள அங்கராயன்
சாரதியுமில்லாமல் தார்வேந்தர்கர்னரப்போ

கர்னர் அர்ச்சுனன்பேரில் சர்ப்பக்கணை ஏவுதல்

வாழ்பாம்பு அஸ்திரத்தை மன்னவனார் தானெடுத்து
மந்திரங்களுச்சரித் திந்திரனார்பாலகன்மேல்
இந்திரனார்மைந்தனுக்கு இசைவாக அம்புவிட்டார்
முந்திகைமுடிக்க மூண்டதுசர்ப்பக்கணை
சிடசிடவென்று செந்தணலக்கினிபோல்
அக்கினிசெந்தணல்போ லனலாய்வருகிறதை
ஆணாலழகுமன்ன ரர்ச்சுனனார் தான்பார்த்து
விஷநாகந்தான்விலக்க வேறுதுணையில்லாமல்
மாயவனைந்தான்பார்த்து மர்மமாய்நின்றுவிட்டான்
ஐவரையுங்காக்கவந்த ஆயருந்தாமறிந்து
மேகவர்னர்தேர்மிதிக்க முன்சக்கரந்தானழுத்த
ஆழியழுந்தவே ஆணழகன்தான்சாய
அங்கராயன்விட்டகணை யருச்சுனனார்கிரீடமதை
காண்டீபன்கிரீடந்தனை கர்னன்முன்னேவைத்ததுகாண்
கதிரவன்புத்திரனுங் கண்டுமனங்கலங்க
சூரியனார்புத்திரனே துலங்கும்மணிவிளக்கே
அமர்க்களமெல்லாந்தேடி அர்ச்சுனனைக்கண்டதில்லை
போர்க்களமெல்லாந்தேடி புண்ணியனைக்கண்டதில்லை
பாதாளலோகத்தில் பார்த்திபனார்போயிருப்பார்
பாதாளம்போயிருந்து பாரமுடிகொள்ளவல்லேன்
மறுகணைபோடுமென்று மாநாகன்தான்கேட்க
சர்ப்பக்கணைவீண்போச்சுதென்று தார்வேந்தனப்போது
மயங்கிமறுமனதாய் நின்றுவிட்டார்கர்னரப்போ
சின்னப்பட்டுப்போனேமென்று சினந்துமே அங்கராயன்
முன்னாளில்குந்தியற்கு மொழிந்திட்டவாய்மையினால்
தாயாருக்குச்சொன்னமொழி தவறாமலங்கராயன்
மறுகணைத்தான்தொடுக்க மாட்டேனெனவுரைத்தார்
வேறொருகணைத்தொடுக்கவேண்டாங்காணென்றுசொல்ல
அவ்வார்த்தைதான்கேட் டரவப்பெருநாகம்
பொங்கிமனமுறுகி போங்காரந்தானாகி
அரனாரெழுத்தின்படி யந்நேரம்போச்சுதுகாண்
பாம்புமேபோனபின்பு பழுதில்லா அங்கராயன்
சேனைகளுமில்லாமல் தேரொன்றாய்நின்றுவிட்டான்
பொதியில்கணைகளுந்தான் போய்விட்ட தாகையிலே

கைவாளைக்கண்டு கர்னனுமருச்சுனன்மேல்
வாய்வேகமாகவே வருகையிலேமாயவரும்
கண்டுமேயாவருங் காளையுடனேதுசொல்வார்
அங்கப்பழுதில்லா அருச்சுனவீரியனே
ஐவருடன்பிறந்த அழகுசிகாமணியே
பொங்கியேகர்னரும் புதுமையது நீபாராய்
என்றுசொல்லியஞ்சலா யிருக்குமந்தவேளையிலே
அங்கராயன்ஓடிவந்து அருச்சுனரைத்தாக்கினன்
தாக்கியபோது தனஞ்செயனர்தானும்
ஏழுமார்தூரம் இடைந்ததின்பின்னுக
பின்னுகத்தானிடைய பெருமாளும்தான்பார்த்து
ஏழுலகையாண்ட எம்பெருமாள்தானகைத்து
காசினியையாளுங் கர்னர்பெருமாளே
செமதக்கினிபயின்ற செல்வனர்தானளிக்க
ஆயுதவித்தையெல்லா மடையாளங்காட்டிவைத்தாய்
மெச்சினேனென்றுசொல்லி மேகவர்னர்தானுரைத்தார்
ஆணலழக னர்ச்சுனனேதுரைப்பான்
மாயனேகர்னரிட வலிமைதனை நீயுரைப்பாய்
அடியேனுங்கர்னனை யமர்க்களத்தில் நில்லாமல்
எத்தனைதூர மெடுத்தெரிந்துபோட்டாலும்
ஆனலுங்கர்னனைத்தா னமர்க்களத்துமுன்னே
மெச்சினேனென்றுசொல்லி மாயவரேயெடுத்துரைப்பீர்
பாசுபதாஸ்திரத்திற் கதிகமோபாசக்கணை
என்–காண்டீபத்தைப்பார்க்கிலும் அதிகமோபாசக்கணை
என்றுசொல்லக்கேட் டேதுரைப்பார்மாயவனர்
தருமருடன்பிறந்த தனஞ்செயரேசொல்லக்கேள்
வீரியங்கள்பேசாதே வேந்தர்கள்முன்பாக
சவுரியங்கள்பேசாதே தார்வேந்தர் அருச்சுனரே
கற்பகத்தேரதனைக் காற்ருய்ப்பறக்கடித்து
ஏழோசனைதூர மெடுத்தெரிந்துபோட்டாலும்
கர்னனர்தேரதனைக் காப்பாரொருவருண்டோ
மூச்சுவிட்டால்கர்னர்தேர் முக்காதமோடிவிடும்
ஆகையினல்கர்னர்தேர் அரிதல்லவெந்தனுக்கு
என்னுடையதேராண்மை யுரைக்கிறேன்மன்னவனே
அந்தரலோகமெல்லாம் ஆபோசனமாக்கிடுவேன்
பூமியழுத்திப் புதையமிதித்திடுவேன்

அர்ஜுனமாரும்தேர்மேலே யவருடையவல்லமைகேள்
ஏழுகடலு மெடுத்தெறியவல்லவர்காண்
ஜெகஜாலப்பெற்றவர்காண் கெருடபகவானும்
இத்தனைபேரு மிருந்துமிதிக்கையிலே
பூமியிலேதேரைப் புதையமிதித்திருக்க
இத்தனைதேரோடே யெடுத்தெறிந்தான்கைச்சிலையால்
கர்னன் திரேகமல்லோ காளையருச்சுனனே
ஆகையினால்கர்னனைத்தா னருச்சுனனிப்போது
விட்டுவிட்டாராமாகில் வேந்தருங்களைவரையும்
எமபுரத்துக்காளாக்கி ஏகுவானத்திபுரம்

அருச்சுனன் கர்னன்மேல் கணை தொடுத்தது

என்றுசொல்லக்கேட்டு இந்திரனார்புத்திரரும்
காண்டீபந்தன்னைக் கடுகவேதான்வளைத்து
சந்தித்துக்கர்னனிட மார்புக்குவிட்டுவிட்டான்
காண்டீபன்விட்டகணை கர்னனப்போதானறுத்து
வாளால்விலக்குகையில் மட்டுப்படாமல்வந்து
மயிருக்கொருகணையாய் மன்னனுக்குதைத்ததுகாண்
அப்போதுகர்னனு மாயாசந்தானுகி
தேர்தட்டுபூசனையில் சேர்ந்திருந்தார்சோகமுடன்
செவ்வானமிட்டதுபோல் செவந்ததுமேனியெல்லாம்
கையெடுக்கமாட்டாமல் கர்னருஞ்சாய்ந்திருந்தார்
ஆனலழகுமன்ன னர்ச்சுனன்தான்பார்த்து
கைச்சிலையைக்கீழேவைத்து காளையவரப்போது
தர்மரைப்போலாக தனஞ்சயற்குதோற்றுதென்று
அரைமனதுயரந்தா லர்ச்சுனனின்றுவிட்டான்
கர்னரேதருமரென்று காளையரும் நின்றுவிட்டான்
அப்போதுமாயவனு ரர்ச்சுனரைத்தான்பார்த்து [ர்
கைச்சிலையைக்கீழேவிட்டகாரணங்கள் சொல்லுமென்று
வில்லதனைக்கீழேவிட்ட விரதஞ்சொல்லுமென்றுசொன்
அப்போது அர்ச்சுனனு மாயவருக்கேதுரைப்பார் [னார்
காசியைத்தானுளுங் கர்னரைப்பார்த்தாலே
தக்கபுகழுடைய தருமரைப்போல்தோற்றிடுது
தருமரைப்போல்சீர்வடிவு சுவாமியிதோகாணுதென்றார்
என்றுசொல்லக்கேட்கா டெம்பெருமாளேதுரைப்பார்

முன்னாளில்கர்னன்செய்த முறைமையெல்லாம்கண்டிருந்
தோராவடிவழகி துரோபதைமுன்னாளில் [தோம்
அரசர்சபைநடுவே யம்பலத்திலேற்றிவைத்து
துகிலையுரியவைத்தான் துரியோதனப்பாவி
அப்போது கிலுரிந்த அங்கவள நாட்டான்காண்
ஆயிரந்துரைகளுட னபிமன்னனைச்சூழ்ந்து
தந்தைமார்காணுமல் தகப்பனூர்மாலையினுல்
கொன்றமலர்மாலையிட்டுக் கொன்றவனுங்கர்னனல்லோ
மைந்தனைக்கொன்றதொரு மாபாவிகர்னனல்லோ
உன்பிள்ளைகளைக்கொன்றதொரு பெரும்பாவிகர்னன்கா
அபிமன்னனைக்கொன்ற அரும்பாவிகர்னனிவன் [ண்
மூர்ச்சைதெளிந்தெழுந்து முடுகிவந்தானுனுக்கால்
களைதெளிந்துகர்னனுங் கையிலேவில்லெடுத்தால்
ஐவரையுங்கொன்று அதம்பண்ணிபோட்டிடுவான்
பஞ்சவரைக்கொன்று பரமபதஞ்சேர்த்திடுவான்
அப்போதுகொல்ல அரிதாயிருக்குமப்பா
மூர்த்தித்துகிலுரிந்த முறையில்லாகர்னனல்லோ
இன்னமொருபாண மெய்யுமென்றூர்மாயரும்
எய்யுமென்றவார்த்தை எழில்விசையன்தான்கேட்டு
அதிககோபந்தானுகி அர்ச்சுனனுமப்போது
கர்னன்மேல்சிலையெடுத்து கணையொன்றுதான்பூட்டி
மார்பளவுதானிழுத்து மன்னன்மேல்விட்டுவிட்டான்
விட்டகணையப்பொழுது பட்டதுகர்னன்மேல்
கற்பகத்தேர்மேல் சாய்ந்தான்கர்னனப்போ
அந்தரத்திற்றேவதைகள் அப்பொழுதேதுரைப்பார்
முன்னாள்பரசுராமர் மொழிந்திட்டசாபத்தினுல்
பாணங்கள்கர்னனுக்குப் பலிக்காமற்போயினது
அருச்சுனன்கையப்பாலே யங்கதன்மடிந்தானென்று
பூலோகந்தான்புகழப் புட்பமழைபொழிந்தார்
பூமாரிகள்கர்னன்மேல பொழிந்துநடந்தார்கள்
தேவர்மழைபொழிந்து தெய்வலோகந்தான்புகழ
கர்னன்விழுந்திடவே கதிரோனும்போய்மறைந்தான்
புத்திரனூர்தான்விழவும் புண்ணியனூர்போய்மறைந்தார்
படைத்தலைவர்தான்விழவே படைமன்னர்தாமுறிந்தார்
இவரிடசேனைகளு மிடைத்தார்கள்நேரம்
அவரவர்கள்தேரை அமர்க்களத்தில்தானிறுத்தி

வெறுங்கையாய்த்தானடந்தார் வேந்தர்களெல்லோரும்
ஐவர்களுஞ்சேர்ந்தார்கள் அவர்களிடமண்டபத்தில்

கிருஷ்ணபகவான் பிராமண வேடம்பூண்டு கர்னனைத் தியாகங் கேட்டது

இப்படியாக இருக்கின்றவேளையிலே
அப்போது-மாயன்பெருமாளு மனதிலேகபடுகொண்டு
முதிர்ந்தவயதுடனே முந்நூலுமார்பிலங்க [மாள்
வேதப்பிராமணர்போல் வேடங்கொண்டாரெய்பெரு
ஐயமென்றுசொல்லியவர் அங்கருயன்முன்னேவந்து
ராஜாதிராஜாவே ராஜமணிவிளக்கே
எதிராளிநெஞ்சிற் கிளையாதஆச்சரமே
கற்பகத்தருவைநிகர் கர்னப்பெருமாளே
கேட்டவர்க்கில்லையெல்லாக் கீர்த்திமணிவிளக்கே
ஐயமென்றுவந்தேன்காண் அங்கவளநாட்டானே
தேகியென்றுவந்தேன்காண் தேவேந்திராஜமன்னு
என்றுசொல்லிமாயவனுர் எடுத்துரைத்தாரப்போது
மாயவனுர்கூறியதை மன்னவனுர்தான்கேட்டு
கணைபால்கலைத்திருக்குங் கர்னர்பெருமாளும்
மாயவனுர்சொல்மொழியை மனதிலேதானினைத்து
ஐயமென்றுக்கூறினதை அங்கராயன்தான்கேட்டு
அங்கமெடுத்துயிந்த ஆயரைத்தான்பார்த்து
மறையவனுகவந்த மாயவரைத்தான்பார்த்து
ஸ்ரீராமாவென்று தேர்வேந்தர்கர்னனப்போ
பிராமணரைத்தான்பார்த்து புண்ணியனுரேதுரைப்பார்
பிர்மகுலத்துதித்த புண்ணியவேதியரேநீர்
பேய்கள்தழைக்க பெரும்பூதங்கொக்கரிக்க
இராஜாக்கள்நின்ருடும் ரணக்களத்திலிவ்வேளை
பயப்படாமலென்னருகில் பார்ப்பான்நீவந்ததென்ன
அமர்க்களத்துக்கஞ்சாமல் ஐயா நீவந்ததென்ன
என்றுசொல்லக்கேட்டு ஏதுரைப்பார்மாயவனுர்
ஈரேழுதேசத்து ராஜாதிராஜர்முன்னே
கார்மேகந்தன்னில்மிச்சங் கர்னகொடையென்றுசொன்
ஆகையினல்கர்னரே ஐயமென்றுவந்தேன்காண் [னுர்
என்றுசொல்லக்கேட்டு எப்பெருமாள்வார்த்தைதன்னை
ஆயனுர்சொல்வார்த்தை அங்கராயன்தான்கேட்டு

காசினியாண்டதொரு கர்னனெடுத்துரைப்பான்
தேசத்தையாண்டுநான் தியாகமளிக்கையிலே
அப்போதுஐயமென்று அடியேனைநாடிவந்தால்
தேவரீர்மனமகிழத் திரவியத்தைநானளிப்பேன்
அடியேனுன்செய்ததொரு அபசாரந்தன்னாலே
தம்பிமார்பாணத்தினால் தாழாதிருக்கையிலே
தியாகமென்றுவந்தாக்கால் தயாபரனேசொல்லுவேனுன்

கிருஷ்ண பகவான் கர்னனிடத்தில் தியாகம் பெற்றுக்கொண்டது

ஆனாலுமென்னவினி ஐயமென்றுவந்தீரே
நவரத்தினத்தாலிழைத்த நல்லநல்லவாபரணம்
வாங்கியேதாரேன்காண் மகிழ்ந்துகொண்டேகுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயரவரேதுசொல்வார்
ஆபரணந்தான்வேண்டேன் அழகியபெண்வேண்டேன்
பூணாரந்தான்வேண்டேன் பொன்னம்பலம்வேண்டேன்
இந்நாளிதுவரைக்கும் இராஜ்ஜியத்தையாண்டிருந்தாய்
பண்ணினபுண்ணியத்தை அளியுமேயெந்தனுக்கு
நீர்-பண்ணியபுண்ணியத்தை நின்னயமாய்த்தாருமென்
இன்றைக்கேதாருமென்று இயம்பவேதான்கேட்டு [றார்
கற்பகத்தேருடைய கர்னனுந்தான்மகிழ்ந்து
அப்படியேபுண்ணியத்தை ஐயாவேதாரேன்காண்
மார்பினில்தைத்திருந்த வன்சிலையைத்தான்பிடுங்கி
உதிரத்தையெடுத்துயின்னு ளூற்றுள்ளேசெய்ததொரு
தருமங்களத்தனையும் தானீந்தேனுந்தனுக்கு [தான்
வாங்கிக்கொண்டேகுமென்று மன்னவனுந்தான்கொடுத்
அங்கராயர்தருமமெல்லாம் ஆயரவர்தான்வாங்கி
எண்ணவொண்ணுமனமகிழ்ச்சி யாகியேயெம்பெருமாள்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் பிராமணரூபம் நீங்கித் தன் சுயரூப மெடுத்து கர்னனுக்கு வரங்கொடுத்தது

கர்னன்மனமகிழக் காட்சிகொடுக்கவென்று
செங்கருடன்மீதேறித் திருமாலெழுந்தருளி
சங்குஞ்சதுர்ப்புஜமுஞ் சக்கரமுங்கையுடனே
கர்னனார்முன்பாகக் கரியமால்வந்துநின்றார்
காசினியையாளுமந்த கர்னர்கண்டுதான்மகிழ

ஈரேழுலகாண்ட எம்பெருமாள்மேகவர்னர்
அந்நாளில்தேவருக் கமுதம்பகுந்தவரே
அரிகரிதேவா நீ ரச்சுதரேபோற்றியென்றார்
மாயவரேபோற்றி மாயாவுன்தாள்போற்றி
யாதவனேபோற்றி ஆண்டவரேபோற்றி
அடியேனொருபொருளாய் அபயமென்றுவந்தீரே
நாயேனொருபொருளாய் நாடிவந்தீரென்னிடத்தில்
சேயனுன்செய்தவினை தீர்ந்ததுஇன்றோடே
பஞ்சைநான்செய்தவினை பறந்ததுஇன்றோடே
எத்தனைபோகோடிநா னென்னவொண்ணுமோக்ஷம்பெற்றேன்
கிருபையென்மீதில்வைத்து சிறுமையகற்றிவைத்தீர்
என்றுசொல்லக்கேட் டெடுத்துரைப்பார்மாயவரும்
கற்பகத்தேர்படைத்த கர்னர்பெருமாளே
இந்நாள்போலுன்னைநா னிதுநெடுநாள்வரைக்கும்
உறவுகலவாம லுற்றாறியாமல்
பிறப்புமறியாமல் பெற்றாருங்காணமல்
மறைவாகஉன்னைநான் வளர்த்தேன்காண்பஞ்சவர்க்காய்
அவமாகும்வேளையிலே யாயுதமூதவாமல்
பாம்புமறுபடிக்கும் பகழிகொடுக்காமல்
குந்தியார்சொல்லைநீ குறுக்கேநடவாமல்
மறைவாகக்குண்டலங்காண் வாங்கிக்கொண்டமாயவனு
அமர்க்களத்தில்பாம்புகணை அர்ச்சனனையுங்கொல்லாமல் [ன்
போர்க்களத்தில்கணைகளெல்லாம் பொருந்தியேநில்லா
காலையிடபாணத்தால் களைத்துவிழுந்திடவே [மல்
மறையவராய்வந்துஉந்தன் மாதருமமத்தனையும்
வாங்கியேகொண்டதொரு மாதவனுநான்காணும்
மனதுகுறைகளினுல் வஞ்சனைகள்செய்தேன்காண்
ஆசையினுலுன்பேரி லதிகசந்தோஷமையா
கேட்டவரந்தரவே வந்தேன்காண்கீர்த்தியுடன்
வேண்டியதைக்கேளுமென்று மேகவர்னர்தானுரைக்க
அவ்வார்த்தைதான்கேட் டங்கராயரேதுரைப்பார்
காசினியையாளுமந்த கர்னர்பெருமாளும்
ஆனைபுரவிமற்ற அரசமக்கள்தன்னுடனே
எப்போகமெல்லாநா னிப்போதேதீர்த்துவிட்டேன்
மாயவரேஉந்தன்றாள் மலர்பதத்தைக்கண்டமட்டில்
மூவுலகுங்கீர்த்தியுடன் முத்திபதம்பேறுபெற்றேன்

இந்தப்பதங்களெல்லா மிருக்கட்டுமாயவரே
ஆனாலுமின்னமொன் றடியேன்சொல்விண்ணப்பம்
தேவரீர்முன்னாலே தூதுரைக்கவப்போது
அடியேனுரைத்த வவ்வார்த்தைவிட்டுவிட்டு
குருகுலத்துக்கர்னரென்று கொற்றவர்கள்தங்களுடன்
பெற்றெடுத்தகுந்தியென்று பிரபலமாய்க்காணவென்று
வந்துஎடுத்தென்னை மார்போடெடுத்தணைத்து
முடிமன்னர்கண்டவுடன் மூலையமுதுதானளித்து
தம்பிமாரென்னைத் தழுவியெடுத்துப்போய்
மாணிக்கமேடையிலே வைத்துமுடிசூட்டி
கைகட்டிநின்றுதான் கர்மக்கடன்கழித்து
ஐவருக்குமூத்ததொரு அங்கராயனென்றுசொல்லி
ஈரேழுலகத்து ராஜாக்கள்தான்புகழ
மாதாவரும்வரையில் வல்லுயிர்தானிருக்க
இதுவுமேயல்லாமல் யானென்றுவேண்டேன்காண்
என்றுசொல்லக்கேட் டெம்பெருமாள்தான்மகிழ்ந்து
அப்படியேயாகுதென்று அட்சயமென்றுரைத்தார்
கேட்டபடிவரங் கொடுத்தாரேயெம்பெருமான்
கர்னன்மனமகிழக் காட்சிவரங்கொடுத்து
அவ்வேளைகுந்தியம்மா ளரண்மனைக்குத்தாம்போயி
அத்தைமார்தம்மோடே யங்கனிடசேதியெல்லாம்
அரியவசப்படுத்தி ஆயரவரப்பொழுது
ஆயரவர்தானுரைக்க அலரியெழுந்திருந்து
விட்டலறிகுந்தியம்மாள் விழுந்துவெறுநிலத்தில்
மூட்டியேகையாலே முகத்தோடேதானறைந்தாள்
வாயிலடைத்துக்கொண்டு வயிற்றினில்கையைவைத்து
மகனேமகனேயென்று மண்ணின்மேல்தான்விழுந்தாள்
ஆயர்பெருமாளு மத்தையரைத்தானெடுத்து
பூந்துகிலாடையினால் பெருகியகண்ணீர்துடைத்து
அத்தையரே நீர்கேளும் ஆயன்விதிதப்பாது
முன்னாள்விதிதவிர்க்க முடியுமோமூவரினால்
தலையின்விதிப்படிகள் தப்பாது அத்தையரே
பிர்மாவெழுதியதோர் பிராப்தியிருக்கையிலே
தப்பவைக்கொண்ணாது தாரணிராசருக்கு
இனியான்படுந்துயரம் ஏதுக்கு அத்தையரே
இங்கிருக்கநியாயமல்ல ஏறுஞ்சமர்க்களத்தே

கர்னனிடத்தில்நீர் கன்னியரேபோய்வருவாய்
போய்வாருமென்றுசொல்லிப் போனார்தன்பாடிமனை
மாய்வனார்போனபின்பு மாதுஎழுந்திருந்து

குந்தியம்மாள் அமர்க்களத்தில் வந்து கர்னனைக் கண்டு பரதவித்தல்

அப்போதுகுந்தியரு மமர்க்களத்தைத்தான்தேடி
அப்போதுகுந்தியுடன் ஆரிழைமார்தானெழுந்து
மகனுரைக்காணவென்று மாதுநடந்தாளே
கூடநடந்தார்கள் குந்தியிடதாதியர்கள்
ஒக்கநடந்தார்களுத்தமிமார்தாதியர்கள்
கர்னனுமாண்டதொரு களரியெவ்விடங்களென்று[மாள்
அர்த்தராத்திரிவேளையிலே அமர்க்களத்தில்குந்தியம்
பிணமுங்குறைத்தலையும் பின்னுமுன்னுந்தானிடற
உதிரக்கடல்நோக்கி யோடுகின்றசமூத்திரத்தில்
மாரளவாய்நீஞ்சியவள் மகனிடஆசையினால்
அடித்துப்புரண்டழுது அயர்க்களமெல்லாந்தேடி
கற்பகத்தேரோடே கண்டாளேகர்னனைத்தான்
கண்டுதான்தேறிக் கர்னனார்மேல் விழுந்து
வாயிலடித்துக்கொண்டு மார்மேலறைந்துகொண்டு
மகனேகருவிளமே மாகர்னப்பெருமாளே
பொன்னேமணிவிளக்கே பூவேயிளஞ்சியமே
கன்னிக்குடலைக் கலக்கிவந்தகன்மணியே
சொர்னப்பசுங்கிளியே துலங்குநவரத்தினமே
முன்னேயொருநாளில் முனிவாய்மைத்தன்னாலே
ஐந்தாம்வயதிலே பஞ்சாட்சரமளித்தார்
செல்வத்திலேஉன் சிறுபுத்திதன்னாலும்
மனமகிழ்ச்சியாலே மதிகெட்டுப்போனேனே
வலக்கையில்பிண்டமுடன் மந்திரத்தையுச்சரித்தேன்
சித்திபண்ணமந்திரத்தால் சூரியனுமவ்வேளை
பாசமாய்க்கர்னனென்று பாலனெனக்களிததார்
அவ்வேளைமாயவனார் அறிந்துமவரோடிவந்து
பெற்றமகன்குற்றமென்று பேழையிலுன்னைவைத்து
முத்திரித்துபெட்டியைத்தான் மூகமாயமில்லாமல்
கெங்கையிலேவிட்டுவிட்டார் கேசவனார்தானுமப்போ
அந்தப்புறஞ்சேர வனுப்பிவைத்தார்மாயவனார்

பெற்றுவளர்த்துநான் பெருமகிழ்வுகொள்ளாமல்
வைசையிலேவிட்டுவிட்ட மாபாவியானேனே
வைத்துவளர்த்துநான் பிரபல்யங்காணுமல்
வாழவும்நான்மடியில் வைத்துவளர்க்காமல்
ஆற்றிலனுப்பிவிட்ட அருப்பாவிநான்தானே
பேழையிலேகட்டிவிட்டுப் பெருக்கத்தவித்தேனே
கும்பத்தின்மூலைப்பால் கொடுத்துவளர்க்காமல்
அப்பிப்பால்வார்த்துநான் ஆற்றில்விட்டபாவியானேன்
பட்டம்பதித்தமூனைப் பாராளவையாமல்
பெட்டியில்வைத்துநான் போாற்றில்விட்டுவிட்டேன்
மூகத்தோடேமுகமணைத்து மூலைப்பாலளியாமல்
செலத்திலேவிட்டுனக்குச் சிலப்பாலளித்தேனே
கட்டியணைத்துவுன்னைக் கண்குளிரப்பாராமல்
நட்டாற்றில்விட்டு நான்பாவியானேனே
பருதில்லாமுத்தென்று பாருலகஞ்சொல்லாமல்
இழிகுலத்தானெனச்சொல்லி ஏசவுனைவைத்தேனே
குருகுலத்தான்மைந்தனென்று கூறுவாரில்லாமல்
சிறுகுலத்தானெனவுலகஞ் செப்பவுனைவைத்தேனே
ஐவருடன்கூடி அரசாளவில்லாமல்
தெய்வச்சிறுமையினற் சீரைக்குலைத்தேனே
தப்பிமார்தன்னுடனே தனித்தரசாளாமல்
கும்பியமன்னருடன் கூடியரசாண்டாரோ
குந்தியம்மாள்பிள்ளையென்று குருகுலத்தில்வாழாமல்
அந்தகனுர்பக்கலிலே அரசாண்டீரப்பாலே
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்தங்களுடன்
மேலேயரசாண்டு வெட்கித்திருந்தாயே
இந்தவுலகத்து ராஜாக்கள்தானறிய
பந்திடவைவரையும் பகையாக்கிக்கொண்டாயே
விஜயன்மேல்தானபகையாய் மீண்டுவந்தநாகந்தன்னை
அசையாமலுனதருகி லமர்த்திவளர்த்தாயே
தப்பிவிசையனென்று தானறியமாட்டாமல்
வெப்பியநாகத்தை மூடுக்காய்வளர்த்தாயே
மறுகணைதொடாதேயென்ற மாதாசொல்தள்ளாமல்
ஒருகணையை நீதொடுத்து உகந்துமடிந்தாயே
தம்பிதானென்றசொல்லித் தானறியமாட்டாமல்
தம்பிகைபாணத்தால் தளர்ந்துமடிந்தாயே

கர்ணமலுன்பிறப்பைக் கார்கர்னர்தன்பொருட்டால்
மாணுகனுக்காக மாண்டாயோரணக்களத்தில்
நான்-சொன்னமொழிகேட்டு தொடர்ந்துவந்தாலென்
மன்னருட நீயிருந்து மதிக்கவரசாளுவையே [பிறகே
தாழாமல் நீயுமிந்நாள் தன்பிறப்புக்காணுமல்
மாயாமலரசாண்டு மதிகெட்டானுனுயே
அண்ணருந்தம்பியரு மரசாண்டுவாழாமல்
தம்பிகைபாணத்தால் தளர்ந்துவிழுந்தாயே
அண்ணனுர்கர்னரென்று ஐவரறியாமல்
கொன்ருரேயுன்னேயினிக் கொடும்பாவிபஞ்சவர்கள்
வீணுக்குவுன்னே விருதாவில்கொன்றேனே
சித்தமனங்குளிரச் சீராகப்பெற்றேனுன்னே
வைத்திருந்துபாராமல் மாபாவியானேனே
அண்ணனுர்கர்னனென்று ஐவருடன்சொன்னுக்கால்
மண்ணில்விழுந்து மடிவார்கள்பஞ்சவர்கள்
அங்கராயனண்ணனென்று அறிந்தாரேயாமாகில்
தங்களிடகைச்சிலேயால் தானேமடிவார்கள்
ஐவருக்கென்னசொல்வே னப்பாவென்கண்மணியே
பஞ்சவர்க்கென்னசொல்வேன் பைங்கிளியேகண்ணுளா
பொன்சொரிந்தவாயாலே புத்தியொன்றுசொல்வாயோ
என்றுசொல்லிகுந்தியம்மா ளேந்திழையாள்தான்புலம்பி
முட்டினுள்தேரோடே முழிகள்சிதறிடவே
அப்பினுள்மார்மேலே அங்கமெல்லாம்வியர்த்துவிட
கதறித்தலேமோதிக் கர்னனுர்மேல்விழுந்து
மயிருக்கொருபாணம் வகையாகதைத்திருக்க
அம்புகளெல்லா மருங்கையினுல்தான்பிடுங்கி
கும்பமுலேப்பால் கொடுத்தாளேயந்நேரம்
முத்தமிட்டுக்கொண்டு முகத்தோடுறவணேத்து
முந்தாணியைப்பற்றி முடிமன்னன்மேலழுத்தி
உதிரப்புலனேயெல்லா முத்தமியாள்தான் துடைத்து
மடியிலிருக்கின்ற மைந்தனேத்தானணேத்து
மைந்தனுர்கையெடுத்து மாதுநல்லாள்கண்ணிலொத்தி
மகனேமகனேயென்று மாதுநல்லாள்முத்தமிட்டாள்
மகனென்றசத்தமது மன்னவனுந்தான்கேட்டு
குந்திமுலேப்பாலேக் குளிரவேதான்குடித்து
அங்கங்குளிர அமுதுண்டு அங்கராயன்

கலைகள்தெளிந்து கர்னனைப்போது
குந்தியம்மாள்தன்முகத்தைக் குறிப்பாகத்தான்பார்த்து
கொற்றவனைப்பெற்றெடுத்த குந்தியருந்தான்பார்த்து
கட்டியுறவணைத்து கனிவாயைமுத்தமிட்டு
கன்னிக்குடலைக் கலக்கிவந்தகண்மணியே
சின்னவயதில்வந்த செல்வத்திரவியமே
கர்னமணிவிளக்கே கயிலாயங்கண்டாயோ
சிவனடியைக்கண்டுநீ திருப்பியிங்குவந்தாயோ
தாயார்க்குந்தம்பியர்க்குந் தானுரைத்துவாரேனென்று
மாயாமவீசரண்டை வரங்கேட்டுவந்தாயோ
என்றுசொல்லிகுந்தியம்மாள் ஏங்கியழுகையிலே
வகைவகையாய்ச்சொல்லி மாது அழும்போது

கர்னர் தாயாருக்குரைத்தல்

அழுகின்றதாயாரை அங்கராயன்பார்த்து
காசியைக்கண்டதொரு கர்னரெடுத்துரைப்பார்
சூரியமகாராசன் பெற்றெடுத்தகர்னராஜன்
மாதாவைப்பார்த்து மன்னவரே துரைப்பார்
சந்திரகுலம்வாழவந்த தாயாரேகேளுமம்மா
ஆயர்கிருபையினல் அமர்க்களங்கள்சோடித்து
ஈரேழுதேசத்து ராசாக்கள்தங்களுடன்
பதினெட்டச்ரோணி படைகள்மடிந்ததம்மா
ஆனைபரிசேனைகளு மநேகமடிந்ததம்மா
பேய்கள்களித்திடவே பெரும்பூதங்கொக்கரித்து
கூளிகழுகுடனே கூடியிரைபுசிக்க
உதிரக்கால்நோக்கி ஓடுகின்றவெள்ளமதில்
தாளிப்பனைமேலே தானிருக்குங்காகமது
கழுத்தில்வழியுமிரத்தங் காகமதுதான்குடிக்க
நாற்பத்தெட்டோசைகாண ரணக்களத்தில்தன்பெருமை
கேட்டவர்களெல்லாங் கிலிபிடித்துநின்றிடுவார்
பார்த்தவர்களெல்லாம் படுகளத்திலேமடிவார்
அப்படிக்கொத்ததொரு அமர்க்களத்திலிந்நேரம்
பதினைந்துநாழிகையில் பயமொன்றுமில்லாமல்
பெற்றவருமையினல் பேராசைதன்னலே
தாங்கிமுலைகொடுத்த தாயார்நீயானதினல்
இந்தமகனுதலின லோடிவந்தாயென்தாயே

பிள்ளையிட ஆசையினல் பெற்றவளேயென்தாயே
மைந்தனிட ஆசையினல் மாதாவேயென்தாயே
ஆனலுமின்னமொன்று அடியேன்சொல்விண்ணப்பம்
அறியாதான்சொல்லுகிறேன் ஆச்சியரே நீர்கேளும்
தாயாரைநானறியேன் தகப்பனர்போறியேன்
பெற்றாரைநானறியேன் பிறவித்துணையறியேன்
உற்றாரைநானறியேன் உறவின்முறையறியேன்
வைத்திருந்தான்தானெழிய வளர்த்தாரைநானறியேன்
சோறிட்டார்தானெழிய சுற்றத்தாரைநானறியேன்
ஈரேழுதேசத்து ராஜாக்கள்தானெழிய
குருகுலத்தார்மைந்தரென்று கூறுவார்நானறியேன்
இழிகுலத்தான்மைந்தனென்று ஏசவளர்ந்தேனன்
இப்படியாக இருந்தரசாண்டிருந்தேன்
துரியனர்பாக்கியத்தைச் செலவழித்துநானிருந்தேன்
மானனுக்காக மாண்டேன்ரணக்களத்தில்
செஞ்சோற்றுதன்கடனைத் தீர்த்தேனனின்றேடே
ஆனலுமின்னமொன்று ஆச்சியரே நீர்கேளும்
மூன்னலே நீர்தானும் மூடுகிவந்தென்பக்கல்
பிள்ளை நீதானென்று பிறப்பறிபப்பண்ணிவைத்தாய்
பஞ்சவர்க்காகவொரு பாம்புகணையொழிய
மறுகணைவிடாதேயென்றும் மாதாவே நீயுரைத்துப்
போகும்போதெந்தனுக்குப் புகழ்ச்சிமகிழ்ச்சியினல்
வாழ்வுமெனக்களித்து மாதாவேபோனீரே
அந்தவரங்களைப்போல் அரசமக்கள்தானறிய
மகன்பேரிலாசையினல் வந்தாய்ரணக்களத்தில்
இன்னமொருவரந்தான் எந்தனுக்குத்தாருமம்மா
தம்பிமாரைவர்களும் தார்வேந்தர் தங்கள்முன்னே
வந்துரணக்களத்தில் வருந்தியெனையெடுத்து
ஈரேழுதேசத்து ராஜாக்கள்தான்பார்க்க
அருமைபெறவெனக்கு உரிமைசெய்யவேணுமென்று
யான்கேட்க நீரளித்து ஆச்சியரேபோனீரே
அப்படியேயிப்பொழுது ஐவருமோடிவந்து
பாண்டுமகாராஜன்பெற்ற பஞ்சவர்களோடிவந்து
மன்னவர்கள்காண வாரியென்னைதானெடுத்து [கு
குருகுலத்துமைந்தனென்று வரிசையெல்லாஞ்செய்வதற்
ஐவரையுமிந்நேர மழைப்பிக்கவேணுமென்றார்

குந்தியம்மாள் ஐவரையும் அமர்க்களத்திற்கு வரவழைத்தல்

அந்தமொழிகேட்டு ஆரணங்குகுந்தியம்மாள்
மைந்தன்மனம்களிக்க மாதாவுமந்நேரம்
தனக்குகவரியிடுந் தாதியரைத்தானழைத்து
மூத்தின்கவரியிடும் மூப்பிமுகம்நோக்கி
தர்மனூர்வீமனூர் தனஞ்செயனூர்ரெட்டையனூர்
ஐவரையுமிந்நேரம் அழைத்தோடிவாருமென்ருள்
அவ்வார்த்தைத்தான்கேட்டு ஆரிழைமாரோடிவந்து
பாண்டியரண்மனையில் பஞ்சவர்கள்வீற்றிருக்கும்
சிங்காசனத்தருகே திகழவந்துதெண்டனிட
தக்கப்புகழுடைய தருமருந்தான்பார்த்து
ஆர்பணிதாதிநீ அறியவுரையுமென்ருர்
தாயக்கருங்குழலார் தாதியருமேதுரைப்பாள்
பூமியோடெதிர்த்தொரு புண்ணியனேகேளுமையா
கொற்றவரைப்பெற்றெடுத்த குந்தியம்மாளென்னுச்சி
காசினியையாண்டிருந்த கர்னர்பெருமாளும்
சந்திரகுலம்வாழவந்த தருமருக்குமூத்தவராம்
ஆகையால்குந்தியம்மா ளமர்களத்தில்தேடிப்போய்
கற்பகத்தேருடைய கர்னனூர்மேல்விழுந்து
அழுதிருக்குங்குந்தியம்மா ளைவரைத்தானழைத்து
வாருமென்றுசொல்லி மாதுவனுப்பிவைத்தாள்
என்றுசொல்லக்கேட்டு ஏங்கியந்தபாண்டவர்கள்
ஓமப்புகையில்நெய்யை யூற்றினவூற்றுபோல்
ஆருத்துயரமுற்று அனலில்மெழுகாகி
அண்ணுவேயென்று அலறிப்புரண்டழுதார்
மூட்டினூர்மன்னரவர் முழிகள்சிதறிடவே
அடித்துப்புரண்டழுதா ராழிபலந்தான்சிதற
அருகிருக்குமன்னவர்க ளனைவரையுந்தானெடுத்து
தார்வேந்தரைவருக்குந் தனிக்கவரிவீசலுற்ருர்

பஞ்சவர் முதலானவ ரமர்க்களம் வந்து கர்னரைப் பார்த்துப் புலம்பல்

ஐவருந்தானெழுந் தமர்களத்தைத்தான்தேடி
நடந்திடவேயந்நேரம் இராஜாக்களெல்லோரும்
ஐவருடன்கூட வலறியவர்தானடந்தார்

பருவமதயானை பஞ்சவர்களைவரும்
பாதியிரவுதனிற் பதினைந்துநாழிகையில்
பேய்கள்பிணந்தின்னும் பிசாசுமிரண்டோடும்
கொள்ளிவாய்ப்பேய்களது கோஷ்டங்கள்செய்துநிற்கும்
பிணந்தின்னுங்கூலிகளும் பிதிர்கலங்கிஎழுந்துநிற்கும்
அலறியழுதசத்தம் யமர்க்களங்கள்தானதிரும்
அண்ணாவேகர்னாவென் றைவர்களுமப்போது
கன்றிழந்தபசுவைப்போல் கதறியவர்தான்புலம்பி
குந்தியார்பேர்கூறிக் குறிப்பாகத்தானடந்தார்
குந்தியழுதசத்தங் கொற்றவர்கள்தான்கேட்டு
ஓடியேவந்துமிந்த உத்தமர்களைவருந்தான்
கற்பகத்தேர்மேலே கர்னரவர்மேல்விழுந்து
முட்டினார்தேரோடே முழிகள்சிதறிடவே
அறைந்தார்கள்தங்களிட கடகங்களற்றுவிட
வாயிலடித்துக்கொண்டு மண்மேல்புரண்டழுதார்
களைத்துவிழுந்தெழுந்து கர்னனார்மேல்விழுந்து
அந்நாளிலிவ்வார்த்தை யறியாமற்போனோமே
மர்மமாய்த்தானிருந்தாள் மாபாவிகுந்தியரும்
இப்போதுரைத்தவளு மப்போதுரைத்தாக்கால்
இந்தப்பெருவாழ்வு மிராச்சியமும்வேண்டாமல்
அரசும்பெருவாழ்வு மிராச்சியமும்வேண்டாமல்
காட்டகத்திற்போய்விடுவோம் காவலர்களைவர்களும்
ஐவருங்கூடினு மாலோசனைபேசி
அந்நேரங்கானகத்தி லேவருடனேகுவோம்
தாயல்லகுந்தியம்மாள் சத்ராதிஎங்களுக்கு
படுபாவிகுந்தியம்மாள் படுகளத்தில்சொன்னாளே
மாபாவிகுந்தியம்மாள் மனதிலேவைத்திருந்தாள்
குந்தியரைப்பார்த்துக் கோவென்றுபஞ்சவர்கள்
அழுதாரேபஞ்சவர்கள் மேனியெல்லாம்வெயர்த்துவிட
முட்டினார்பஞ்சவர்கள் முழிகள்சிதறிடவே
அறைந்தார்கள்தங்களிட அடிவயிற்றில்கையைவைத்து
அண்ணனார்கர்ன னென்றவரறியாமல்
கர்னனைத்தான்செயிக்க கண்டங்கறுத்தாரை
அடுத்தக்கணைவாங்கி யமர்செய்தோமண்ணாவோ
சிறுபுத்திதன்னாலே செய்துவிட்டோமண்ணாவே
கர்னனார்மேல்விழுந்து கதறிப்புலம்பிடவே

கணையால்களைத்திருந்த கர்னர்களைதெளிந்து
மூர்ச்சைகளைதெளிந்து முகத்தையவர்பார்த்து
தம்பிமாரைவரையும் தழுவியெடுத்தணைத்து
பூந்துகிலாடையினல் பெருகியகண்ணீர் துடைத்து
துக்கத்தைதானுற்றி துய்யபெருமாளும்
அண்டையிலேதானழைத்து அண்ணன்பெருமாளும்
முன்னுள்விதிவசத்தை மொழிந்திடவுமாமோதான்
அருச்சுனன்கையம்பாலே என்னையிழக்கவென்று
மனதிலேயெண்ணிவஞ்சம் மாயவனுர்செய்வதல்லால்
பின்னெருவர்செய்த பிழையல்லதம்பியரே
குருகுலபாண்டுவின் குமாரர்களென்றுசொல்லி
ஒருகுளத்துநீரதுபோ லுடனிருந்துவாழாமல்
மாயவனுர்செய்த வஞ்சனைகளல்லாமல்
மற்றெருவர்செய்ததல்ல வஞ்சனைகள்மன்னவரே
ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலும்
மாண்டார்வருவதுண்டோ வர்னமணிவிளக்கே
இத்தையறியாமலேதுக்குஇத்தூரம்
பாதிப்பொழுதிலே பதினெட்டுநாழிகையில்
கல்லோடுகல்லுறையும் காரிருளில்வந்தீரே
விடிகிறநேரமது ஆச்சுதுகாண்வேந்தர்களே
போவோமெழுந்திருங்கள் புண்ணியரேஎன்றுரைத்தார்
போவோமெனறசொல்லைப் புகழ்வேந்தர்தான்கேட்டு

பஞ்சவர்கள் கர்னனுக்கு பட்டந் தரிப்பித்தது

ஐவருடன்குந்தியரு மாலித்தெழுந்திருந்து
அண்ணனுர்தன்னையப்போ அமர்த்தினுர்தண்டிகையில்
பல்லக்கெடுத்துவரப் பரிவாரஞ்சூழ்ந்திடவே
ஐவருந்தண்டிகையி லருகாகச்சூழ்ந்துவர
பொன்னுலகந்தன்னிலுள்ளோர் விட்டமழைசொரிய
சற்சரிமீட்டிடுவார் சாமரம்வீசிடுவார்
கவரிகள்மீட்டிடுவார் சாமரம்வீசிடுவார்
ஐவரிருக்குமந்த அரண்மனையில்கொண்டுசென்று
பசும்பொன்னுலிழைத்த பஞ்சணைமீதமர்த்தி
மூவருங்கொண்டாட முடிசூட்டிகர்னனைத்தான்
பாருலகக்கீர்த்திபெற்ற பட்டத்தரசனென்று
எக்காளையூத ரணபேரிதான்முழங்க

சின்னமுழங்கத் திருச்சின்னந்தானூத
அண்ணனூர்பாதமடிவணங்கிப்பஞ்சவர்கள்
கர்னனூர்பக்கலிலே கைகட்டிவீற்றிருந்தார்
இழிகுலத்தான்மைந்தனென்று எண்ணியிருந்தவர்களெல்லவரும்
பழுதில்லாச்சிங்கமென்று பணிந்தார்களெல்லவரும்
விருதுகள்தான்முழங்க வெண்கவரிதான்வீச
செங்கண்மால்கர்னருடன் சேரக்கொலுவிருந்தார்
பாருலகில்தேவேந்திர பார்வேந்தன்கர்னனுந்தான்
பஞ்சவரும்போற்றிசெய்யப் பஞ்சணையில்வீற்றிருந்தார்
அப்படியேகர்னனுந்தா னைவருடன்வீற்றிருந்தார்
அத்திபுரமாளு மரவக்கொடிவேந்தன்
வணங்காமுடிவேந்தன் வரவிட்டதூதுவர்கள்
அருச்சுனன்கையம்பாலே யங்கராயன்பட்டதென்று
மாநகந்தனுடனே வந்துரைத்தார்மன்னவர்கள்

கர்னன்மடிந்ததைக் கேட்டுத் துரியோதனன் அமர்க்களம் வந்து தேடுதல்

தேசத்தையாளும் துரியோதனன்கேட்டு
மாளாத்துயர்கொண்டு மண்மேலேவிழுந்தழுது
அண்ணுவேகாணேமென்று அலறிவிழுந்தழுது
கர்னனூர்தான்பட்ட களரியதுஎங்கேயென்று
பந்தம்பிடித்துவரப் பார்வேந்தர்தானடந்தார்
பஞ்சவருக்குமுன்பிறந்த பட்டத்தரசனென்று
ஐவரும்வந்தெடுத்து அரண்மனைக்குப்போனாரென்று
மலர்த்தாண்டரோடிவந்து மன்னனுக்குத்தானுரைத்தா[ர்]
தேசத்தழகன் திரியோதனன்கேட்டு
முட்டினான்மன்னவனும் முழிகள்சிதறிடவே
கையாலறைந்தழுதான் கணடங்களிற்றுவிழ
கர்னனேயண்ணுவே கண்ணேமணிவிளக்கே
வையகம்விளங்கவந்த வாழ்வேமரகதமே.
உன்னாலென்பட்டமதை உதவியாயாண்டிருந்தேன்
உன்னாலேஎன்பேச்சும் ஒப்பாச்சேமன்னவற்கு
உன்பலத்திலேநா னுகந்துபடைக்கிசைந்தேன்
அடிநாளிலிவ்வார்த்தை யறிந்திருந்தேனாமாகில்
பஞ்சவர்களோடேநான் பகைசெய்துகொள்ளாமல்
பாதியரசுடனே பகுந்தளிப்பேனைவருக்கும்

பஞ்சவரும் நூற்றுவரும் பரிந்தரசையாண்டிருப்போம்
கொற்றவரும்நாங்களுமாய் கூடியுறவாயிருப்போம்
கொத்தானுமோரதுபோல் ஒத்துமிகவாழ்ந்திருப்போம்
அரசாளுமாசையினு லமர்க்களம்சோடித்து
சண்டைகள்செய்துநான் சாகக்கொடுத்தேனே
உன்னை நம்பியல்லோ வுடல்பகைத்தேன்பஞ்சவரை
நம்பினேனுன்னை நீ நட்டாற்றில்விட்டாயே
தம்பியரை நானிழந்து தனையரையும்நானிழந்தேன்
அப்புவியாசையினுல் அனைவரையும்நானிழந்தேன்
ஐவருங்காடாண்டா ரங்கனே நீநாடாண்டாய்
யானுமென் தப்பியர்க ளவர்கள் நூற்றுவரும்
வெற்றேற்றமிட்டு விழலுக்கிறைத்தோமே
கர்னனூர் தப்முடனே கலந்திருந்தநாளானுல்
மேலணிந்தகுண்டலமும் விருதாவாய்தான்போமே
அரவத்துக்கு ஆயிரங் கலப்பால்கள் தான்வார்த்து
பட்சமாய்க்கர்னனிட பக்கத்திலேவளர்த்த
அருமையாய்த்தான்வளர்த்து அருச்சுனன்மேலேவிட்ட
பகையாளிமேலேவிட்ட பாம்புபழுதாமோ
வகைவகையாய்ச்சொல்லி மன்னனழும்போது
அருகிருந்தமன்னவர்க ளவனைஎடுத்தேற்றி
ஆண்டாண்டுதோறுமினி யழுதுபுரண்டாலும்
மாண்டதொருகர்னனூர் வாரதில்லைவாருமென்றுர்
வாருமென்றுசொல்லி வருந்தியழைக்கையிலே
மானுகமேந்தியதோர் மன்னவருந்தானெழுந்து
சயிந்தவனைத்தானழைத்து தாமங்கேவுரைப்பார்
பதினேழாநாளையிலே படுகளத்தில்தான்முடிந்த
கர்னனூர்பாடும் காளையர்கள் தன்பாடும்
தையலாள்காந்தாரி தனக்குரைத்துவாருமென்று [தார்
அனுப்பிவிட்டுதன்னுடைய அரண்மனையில்வீற்றிருந்
சயிந்தவனுமோடிவந்து தையலாள்தனக்குரைத்தான்
தையலாள்தான்கேட்டு தலையிலடித்தெழுந்து
ஓவென்றலறி உத்தமியுங்கீழ்விழுந்து
மன்னவனேகர்னுவென்று வாய்திறந்துதானழுதாள்
கலத்துபுழுநீக்குங் கர்னப்பெருமாளே
கட்டுண்ணவைத்ததொரு கர்னனே எங்கொளித்தாய்
முந்நாளில்தானு முடிபெற்றிருக்கையிலே

மூக்காலுஞ்செய்தவினை முழுப்பாவியாகையினல்
அருந்தியதோரன்னமெல்லா மத்தனையுந்தான்புழுவாய்
ஈரேழுதேசத்து ராஜாக்களெல்லோரும்
தையலாளெந்தனுக்குஞ் சந்ததிகளில்லாமல்
எல்லோருந்தூஷிக்க இருந்தேனெடுநாளாய்
செய்ததொருதீவினையாற் செல்வந்தானில்லாமல்
இருந்ததேநெடுநாளாய் என்மகனேகர்னுநீ
சலத்திலேவந்தெனக்குத் தவக்குறையைத்தீர்த்துவைத்
பொற்கலசத்திற்சாதம் புழுவாயமர்ந்திருக்க [தாய்
பிடிவாய்ப்பிடித்தெடுக்க புண்ணியர்உன்கையாலே
புழுநீங்கிப்போசனங்கள் போதேயருகினன்காண்
கலத்துப்புழுநீக்குங் கர்னனென்றுபேருமிட்டு
போற்றிவளர்த்தேனே பொழுதொருமேனியுமாய்
மைந்தரில்லாமாளிகையில் மகிழ்ந்துவளர்த்திடவே
மலடென்றுசொல்லாமல் மைந்தர்களையீன்றெடுத்தேன்
உன்னழகைக்கண்டுயா னுறுதியாயரசாண்டேன்
நூற்றுவனை த்தவிர நேர்த்தியாய்நம்பினேன்யான்
நம்பினேன்உன்னையினி நட்டாற்றில்விட்டுவிட்டாய்
என்றுமேதையலரு மேங்கியழுகலுற்றாள்
கண்ணில்லாக்காந்தாரி கதறிப்புலம்பிடவே
தனஞ்செயனும்வந்து தழுவியெடுத்தணைத்து
பஞ்சவருங்கர்னனுர் பாட்டனுக்குத்தானுரைத்து
துரியனிடபக்கலிலே திரும்பிவந்தான்பக்கலிலே
தையலுடவரலாறெல்லாந் தனியனுக்குந்தானுரைத்தா
மன்னவர்கள்தங்களுடன் மனமகிழ்ந்தாரந்நேரம் [ன்
மற்றுநாள்தானெழுந்து மகாசேனைதன்னுடனே
பதினெட்டாம்நாளையிலே படைக்கிசைந்தான்சல்லியனு
உதித்தான்கதிரோனு முதயகிரிதன்மேலே [ம்
கதிரோனுதித்திடவே இருவர்படைக்கிசைந்தார்
துரியனுர்சல்லியற்குச் சேனுபதியளித்தார்
அரசுமன்னர்தங்களுடன் அமர்க்களத்தில்கஜ வ்கமுட
சேனையளித்தவர்க்குத் திரள்மன்னர்தங்களுடன் [ன்
சல்லியனுமப்போது தானின்றான்போரணியில்
ஐவருங்கூடி யமர்க்களமேவந்தார்கள்
வந்துஅணிவகுத்து மாயவனுரேதுரைப்பார்
கொல்லவந்தகூற்றுவன்போல் சல்லியனுர்வந்தார்காண்

என்றுசொல்லக்கேட் டேதுரைப்பார்தருமலிங்கம்
சத்தசமூத்திரமுந் தாண்டிவந்தோமும்மாலே
குயவனிடகுட்டைதன்னில் கோபாலர்பாரமோதான்
என்றுசொல்விஜவருந்தா னெரிபறந்துகண்சிவந்து
கோபித்துக்கண்சிவந்து கொற்றவர்களைவர்களுஞ்
சிறியவர்கொக்கரித்து சினந்தெழுந்தாரப்போது
இருவரிடசேனைகளும் எதிர்த்தார்களந்நேரம்
கர்னனிடபுத்திரர்கள் காளையிருவர்களும்
சூரியபற்பனென்றும் சுந்தரபற்பனென்றும்
நகுலனுடன்சண்டைபண்ணி ரணகளத்தில்தான்மடிந்தார்
வீமனுடன்சல்லியனும் மீண்டுசண்டைதான்செய்தான்
மதகரியான்தண்டாலே மீண்டானேசல்லியனும்
சல்லியனும் மீண்டிடவே தார்வேந்தன்வந்துரைத்தான்
தேசத்தழகன் துரியோதனப்பெருமான்
வீமராஜன்தன்னுடனே மீண்டுவந்துசண்டைசெய்தா
சிறிவந்தராஜனங்கே தேர்த்தட்டில்தான்விழவே [ன்

வீமன் சல்லியன்மேல் அம்பு தொடுத்தல்

அப்போதுவீமனவன் அதிகதுரிதமுடன்
எமனுடையவாளதினு லெய்தானேவீமனப்போ
வீமன்கைவாளதினால் சல்லியனுந்தான்மடிந்தான்
தருமனுர்வாளதினல் சகலருந்தான்மடிந்தார்
சேனுபதியாளுகையில் சினந்தெழுந்துராஜரெல்லாந்
துரியனுர்சேனையெல்லாந் திசைகெட்டுஓடலுற்றார்
தருமனுர்சேனையெல்லாந் தாமங்கேகொர்ச்சித்தார்
சல்லியனார்தன்னுடனே தான்பிறந்ததம்பியர்கள்
இருபதுபேர்களுபவந் தெதிர்த்தார்களப்போது
எழுநூறுராஜாக்க ளேகமாய்வந்தெதிர்த்தார்
வந்தெதிர்த்தராஜாக்களை மதகரியான்தண்டாலே
கொன்றுமடித்துவிட்டான் கொற்றவர்களத்தனையும்
அத்தனைபேர்சேனைஎல்லா மதஞ்செய்தான்தண்டாலே
மாண்டதொருசேனைதன்னை மாநாகன்தான்கேட்டு
தம்பிவிகர்னுநீ தாக்குமப்பா வீமனைத்தான்
விகர்னனுபவில்வளைத்து வீமன்மேல்வந்தெதிர்த்தான்
வந்தவகானனைத்தான் மதகரியான்தான்பார்த்து
தம்பிவிகர்னுநீ தார்வேந்தாசொல்கிறேன்கேள்

முன்னாலேராஜசபை மூடிமன்னர் தங்கள் முன்னே
சூதுவிளையாடுகையில் துரியற்குபுத்திசொன்னாய்
வேணதெல்லாஞ்சொன்னாய் வேந்தாந்த அண்ணருக்கு
ஆகையினாலெந்தனிட அங்கமெலாங்கூசுதென்றான்
கொல்லவென்றால்கைஎழலை கொற்றவனேஎன்செய்வேன்

வீமன் விகர்னன்மே லம்பு தொடுத்தல்

என்றுசொல்லதான்கேட் டேதுசெய்வான் தம்பியப்போ
அண்ணாவேவீமா நீ அடியேன்சொல்கேட்டருளும்
தூற்றுவரைக்கொல்லவென் றேற்றவிரதங்கொண்டாய்
எந்தனை நீதப்பவிட்டா லேற்காதுவுன்வீரம்
அந்தவிதியெந்தனுக்கு தக்காது அண்ணாவே
பிர்மாயெழுதினதைப் புரட்டிவைக்கக்கூடாது
ஆகையினாலுன்விர்த மழியாமலெந்தனை நீர்
கொல்லுமென்றுசொல்லுகையில் கோபித்துகண்சிவந்து
கோபித்துக்கண்சிவந்து கொக்கரித்துதண்டெடுத்து
ஆர்க்கரித்துப்பற்கடித்து அடித்தான்விகர்னனைத்தான்
மதகரியான் தண்டாலே மாண்டான்விகர்னனப்போ
விகர்னன்மடிந்திடவே வீமனவன்தான்பார்த்து
ஐயையோதம்பியென் றழுதுபுலப்பலுற்றான்
புலம்பியழுதுமன்னன் புண்ணியனுந்தானுமப்போ
விகர்னனைக்கொன்றபின்பு மீண்டுமந்தசேனையெல்லாம்
அதஞ்செய்துதண்டாலே யடித்துநசுக்கலுற்றான்
வந்தவந்தசேனையெல்லாம் மாண்டுமேபோய்விடவே
கண்டுமந்தமாநாகன் கண்கலங்கியேக்கமுற்று
முன்னாள்பெரியோர்கள் சொன்னபுத்திகேளாமல்
பதினொருஅக்ரோணி படைமன்னர்சேனையெல்லாம்
செத்துமடிந்தாருஞ் செலவழிந்துபோனாருந்
தப்பிப்பிழைத்தவரைத் தான்கணக்குப்பார்க்கலுற்றான்
ஐந்நூறுதேர்க்காரர் ஆனைபரிஎழுநூறில்
காலாள்பரிசனங்கள் காவலரெண்ணாயிரம்பேர்
மற்றபேர்குருக்கள் மகுடந்தரித்தவர்கள்
கிருதவர்மன்கிருபாசாரி கீர்த்தியுள்ள அசுவத்தாமன்
இவர்கள்தவிர விறந்தார்களித்தனைபேர்
இத்தனைபேர்கள்பட்டு இறந்துமடிந்தவுடன்
உற்றுநினைத்துமப்போ ஓடினான்தேரழிந்து

தோழிந்துஓடிவந்து திருக்குளத்திற்போய்க்குதித்தா
பட்டிறந்தசேனையெல்லாம் படைமன்னர்தானெழுப்ப
பொய்கைநீர்க்கங்கையில் போய்முழுகிதோத்தரித்தான்
ஈஸ்வரனைநோக்கியங்கே இருந்துசெபஞ்செய்யலுற்றான்
தேசத்தழகன் துரியோதனப்பெருமான்
மாநாகன்போனபின்பு மன்னவனார்சேனையெல்லாம்
தாயிலாக்கன்றதுபோல் தத்தளித்துதான்புலம்ப
மூலைக்குமூலை யோடலுற்றார்சேனையெல்லாம்
திக்குத்திசையைவிட்டுத் திகைதப்பியோடுவதை
தக்கப்புகழுடைய தர்மரிடசேனையப்போ
கொக்கரித்தார்ப்பறித்துக் குறித்தார்கள்வெற்றிசங்கு
வெற்றிசங்குதான்குறிக்க வீமனார்தான்பாழானதுந்
துரியோதனன்சேனை திசைகெட்டுஓடுவதும்
அரசனைக்காணும லமர்க்களப்பாழானதுங்
கண்டுஉளரிபறந்து கையிற்கதையெடுத்து
பொய்கைக்கரைதேடிப் புண்ணியனாரோடிவந்து
வைகைக்கரையில்நின்று மானாகன்தன்னையப்போ
கூவியழைத்துமங்கே கொக்கரித்தார்ப்பறித்தான்
மோதியறைந்தானே மூர்க்கமூடன்கங்கையிலே
சூதுபண்ணியோடிவந்து சுனையிலொளித்தாய்நீ
ஏதடாமானாகா இதுவோசவுரியங்கள்
திக்குதிசைமன்னர்களுந் தேவர்களும்பார்த்திருக்க
ஒக்கநின்றுசண்டைபண்ண ஓடிவந்துநீயொளித்திருக்க
லக்குவுனக்கின்றோடே நலமுடனேவாருமென்றான்
வாருமென்றுசொன்னவார்த்தை மன்னவனுந்தான்கே
சீறியங்கேபற்கடித்து செபத்தைமறந்துவிட்டு [ட்டு
ஏறிவந்தான்பொய்கைவிட்டு எல்லோருந்தான்பார்க்க
பொய்கைக்கரையேறி புண்ணியனார்வந்துநின்று
தக்கப்புகழுடைய தருமரைத்தானோக்கி
ஏற்குமோவுங்களுக்கு ஒருவன்மேலித்தனைபேர்
இத்தனைபேரொன்னோடே யெதிர்க்கிறதுஞாயமோதான்
என்றுமிகத்தான்கேட்க ஏதுசொல்வார்தருமலிங்கம்
சண்டைக்குவரவில்லை சமாதானஞ்செய்யவில்லை
தொண்ணூற்றென்பதுபேர் தோள்வலுவாய்ப்பட்டிறந்
உன்னுடையதம்பியர்க ளுத்தமர்கள்தானடந்தார் [தார்
என்னுடையதம்பியர்கள் யானுமினிஉன்னிடத்தில்

கைகட்டிசேவிப்போங் காவலனேவாருமென்றார்
அந்தநகர்தன்னுடு மரசுசெலுத்திடுவார்
உத்தமனேவாருமென் றுச்சரித்துத்தருமர்சொன்னர்
அந்தமொழிகேட்டு அரவக்கொடியோனுரைப்பான்
னூற்றுவர்தம்பியரை நொடியிலேதான்போக்கி
என்தம்பிமார்களும் இத்தனைபேர்சேனைகளும்
வந்துமடிந்துமப்போ மாள்வதற்குத்தான்பயந்து
உன்னுடனேகூடி வுறவாகிநானிருந்தால்
இந்தவுலகமெல்லா மேதுசொல்லிதானகைக்கும்
சித்திரவேல்விசயன் சிறந்தஉங்களைவரையும்
கொன்றுவிருந்திடுவேன் கூளிகழுகுகட்கு
என்றுசொல்லிமாநாக னேறினன்தரைமேலே
தரைமேலேவந்துநின்று கையில்கெதையெடுத்தான்

வீமனும் துரியோதனனும் யுத்தம் புரிதல்

வீமனுந்துரியனுமாய்ப் போர்செய்தாரன்னேரம்
ஒருவர்க்கொருவ ருயிர் நிலையைத்தான்கேட்க
வீமனதுகண்டு வெகுண்டுதுரியோதனன்மேல்
அண்டவொண்ணுகோபமுட னுர்பரித்துக்கொக்கரித்து
மண்டியிட்டுக்கொண்டான் மாயவனாப்போது
துரியனுடையவுயிர் நிலையைஸ்ரீகிருஷ்ணர்தான்காட்ட
அரையின்கீழ்ப்பெருந்தொடையை யடித்தான்வீமன்கதையால்
தொடையொடிந்துபூமியிலே துரியோதனன்விழுந்தான்
மானகன்தான்விழவே மதகரிவீமனப்போ
பத்தினியைப்பார்த்துப் பழுதுசொன்னவாயிதுவோ
உத்தமிதன் துயிலை யுறியச்சொன்னவாயிதுவோ
என்றுசொல்லிவீம னெழுப்பியுதைத்தானே
அப்போதுராஜமன்ன ரனைவரும்பார்த்திருக்க
அந்நாள்தபசுக்கு மூந்திவனம்போலவர்கள்
இந்நாளில்வந்தார்கள் விதுரன்பலராமர்
விதுரன்பலராமர் வெகுண்டுமேயோடிவந்து
துரியனைக்காலாலுதைத்த வீமனைத்தான்பார்த்து
கோபித்துக்கண்சிவந்து கொல்லவென்றுனைவரையும்
ஆயுதத்தைப்பஞ்சவாமே லந்நேரந்தானெடுக்க
மாயவனார்கண்டு பலராமருக்குத்தானுரைத்தார்
மூன்வார்த்தையாம்படியே மொழிந்துபலராமருக்கு

அமர்ந்தவமர்ந்துதா னேவருடன்கூடியப்போ
ஆரணர்தவத்தில்வந்த அசுவனுமோடிவந்து
தேசத்தழகுமன்னன் திரியோதிரன்மேல்விழுந்து
அழுதுபுரண்டெழுந்து அசுவனுமேதுசொல்வான்
ஈரேழுலகத்து ராஜாவேயென்னரசே
மாயவனார்வஞ்சனையை மனதிலெண்ணிப்பாராமல்
ஐவருக்குபேருதவி ஆபனார்தாமிருக்க
அறிந்துமிருந்துநீ அறியாதான்போலிருந்தால்
ஈரேழுலகத் திராசர்கள்தானறிய
சேனபதியெனக்குத் தெரிந்து அளிக்காமல்
என்னை நீநம்பாம லெனைப்பிரித்துதள்ளிவிட்டாய்
அந்நாள்சேனபதியு மறிந்தெனக்குநீயளித்தால்
மன்னவர்கள்கைதனிலே மாளுவையோமன்னவனே
ஐவரையும்வென்றிடுவே னரசுமுனக்களிப்பேன்
பஞ்சவரைவேரறுத்துப் பட்டமுனக்களிப்பேன்
என்னை நீநம்பாம லேங்கியேமடிந்தாயே
என்-சவுரியமும்வல்லமையுந் தாஷ்டீகமும் நீயறிந்து
சொல்வார்த்தைகேட்டுமென்னைத் திரணமாயாகிவிட்டா
என்றுசொல்லிக்குருபுத்ர னேங்கிவிழுந்தழுது [ய்
அழுதுபுரண்டு அசுவத்தாமன்புலம்ப
மாநாகமேந்தியதோர் மன்னன்களைதெளிந்து
அரவக்கொடியோ னசுவனைத்தான்றழுவி
குருமகனைத்தான்பார்த்துக் கொற்றவனுந்தானுரைப்பா
ஏதுக்கினிமே லிவ்வார்த்தையுந்தனுக்கு [ன்
காடாண்டவரைவர்களும் நாடாண்டான்கர்னராஜன்
கானகமும்ராஜ்ஜியமும காவலரேதாளுண்டார்
வெற்றேற்றமிட்டு விழிலுக்கிறைத்தோங்காண்
ஆவதென்னனம்மாலே ஆயனவன்மர்மமிது
தலையின்விதிப்படிக்குத் தப்பாதொருகாலும்
சொல்லிபலனென்ன சுந்தரரேபோங்களென்று
போமென்றுசொன்னசொல்லைப் புண்ணியனார்தான்
ஆனாலுமென்னவினி யன்பரே நீர்கேளும் [கேட்டு
இனியாகிலுமெனக்குச் சேனபதியளித்தால்
மன்னவரேயுன்பாதம் மகிழ்வாய்புசித்தோம்நாம்
மன்னவர்க்குத்துரோகங்கள் வஞ்சனைசெய்ததில்லை
ஐவரிடபூமுடியை யரைக்கணத்தில்கொண்டுவந்து

ஈஸ்வரனுர்சாட்சியதா யிவ்வேளையுந்தனுக்கு
மன்னவனே நான் மகுடமுடிகவிப்பேன்
என் தகப்பன் துரோணரை எய்தானே துஷ்டத்துய்மன்
அந்தப்பழிக்குநா னேவர்பழிவாங்கிடுவேன்
என்றுசொல்லக்கேட் டெழுந்திருந்துமன்னவனும்
சேனதிபதியுனக்குச் செலவுகொடுத்தேனென்று
அரிபிளவுவெற்றிலையும் அள்ளியவன்கைகொடுத்தான்
வாங்கியந்த அஸ்வனுந்தான் மடிதனிலேவைத்துக்கொ
பெரியரதமேறிப் புறப்பட்டான்மன்னவனும் [ண்டு
மாயன்கிருபர்சொலலை மறந்துமேதானடந்தான்
கிருதவர்மன்மூவருடன் கெர்வித்துதானடந்தான்
இவ்வார்த்தைமாயவனு ரிதயத்தில்தானறிந்து
சேனதனைக்காக்கத் துஷ்டத்துய்மனைக்காவல்வைத்து
நகரமதைக்காக்க ராட்சதரைக்காவல்வைத்து
ஆலோசனையுண்டென்று ஐவரையுந்தானழைத்து
நகரமதைவிட்டு நடந்தாரேஐவருடன்
வனத்தில்தவமிருக்கும் மாமுனிவர்பக்கலிலே
ஐவரையுந்தானொளித்து அப்பால்வழிநடந்துவிட்டார்
ஐவரையுந்தானொளித்து மாயவனுர்போனபின்பு
பார்ப்பான்மகன்ருனும் பசுவாகத்தானடந்து
பஞ்சவர்கள்சேனதன்னைப் பார்த்துமேவில்வளைத்தான்
அக்ரோணிசேனையெல்லா மடிந்துஎதிர்த்தார்கள்
கடந்துஅசுவத்தாமன் கணைமேல்கணைதொடுத்து
எதிர்த்துவந்தசேனகளை எமலோகஞ்சேர்த்துவிட்டு
அரசர்கள்தானிருக்கு மாண்மனையைத்தானேக்கி
அசுவன்வருகையிலே ஆயாவர்காவல்வைத்த
பூதமெழுந்திருந்து போய்மறிக்கஅசுவனுமே
அசுவனுமோடியப்போ யானுர்தனைநோக்கி
ஜெபதபந்தான்செய்து சிலையொன்றுவாங்கிவந்து
ஆர்க்கரித்துவந்தெதிர்த்த ஆதிபூதகேவதையும்
துஷ்டத்துய்மனையுந தொடுத்துஒருகணையால்
அப்போதுநடநததுபோ யாண்மனையினுட்புகுந்து
பாஞ்சாலிதுரோபதையாள் பாவைகள்தானிருக்க
இளம்பஞ்சபாண்டவர்க ளிருக்குமந்தப்பாலகரை
ஐவரிடபூமுடியை அசுவனுந்தானறிந்து
தேர்மேலேதான்போட்டுத்துரியோதனன்பக்கல்வந்து

ரணக்களத்தில்தான்விழுந்த நாயகனுர்முன்னேவந்து
மைந்தர்கள்பூமுடியை மன்னவன்முன்னேவைத்தான்
மாநாகன்தான்பார்த்து மதிமயங்கியே துரைப்பான்
செல்வரைக்கொல்வதற்கோ சேனபதியளித்தேன்
பாலகரைக்கொல்வதற்கோ பாக்கிலேநான்கொடுத்தேன்
இளப்பஞ்சபாண்டவரை யேன்கொன்ருய்பாதகனே
பார்ப்பாரப்புத்தியிற் பாலகரைக்கொன்ருயே
நான்-வானுலகப்புக வழிகாட்டிவைத்தவரை
வீணுக்குப்பூமுடியை வெற்றியுடனறிந்தாய்
பஞ்சவரேயாமாகிற் பார்ப்பனேசொல்லுகிறேன்கேள்
ஐவரிடதன்முடி யானுஞேயிந்நேரம்
தருமருக்குநேரிளைய தாக்குள்ளவீமனென்ருன்
கொக்கரித்துவுன்கழுத்தைக் குதித்துக்கடியானே
ஐவர்கள்பூமுடி அல்லநீபோடாவென்ருர்
பார்ப்பான்மனமுறியப் பார்வேந்தர்தாமுரைத்து
போமென்றுசொல்லியவன் பூமுடிசாய்த்தானும்

அசுவத்தாமனுக்கும் அருச்சுனனுக்கும் யுத்தம்

பார்ப்பான்மகனும்போய் பஞ்சவர்கள்கோபமதாய்
ஐவரையுங்கொல்லவென்று அன்னேரந்தானடந்தான்
மாயவனுரிவ்வார்த்தை மௌனமாய்த்தாமறிந்து
பஞ்சவரைத்தானழைத்துப் படுகளத்தில்வந்துநின்ருர்
பாலகர்மாண்டிடவே பத்தினியாள்துரோபதையும்
அனலிற்பிறந்தவளும் ஐவருந்தானழுதார்
அழுதுமனயபதறி யார்க்கறித்துபற்கடித்து
அசுவனைக்கொல்வோமென் றைவருஞ்சபதஞ்செய்து
ஐவருந்தேரேறி அசுவனைத்தேடிவந்து [டார்
கண்டந்தஅசுவனைத்தான் காவலர்கள்சூழ்ந்துகொண்
அசுவனுந்தான்பார்த்து அவன்கையிலம்புபெற்று
அசுவனும்வில்வளைத்து அர்ச்சுனன்மேல்கணைதொடுத்தான்
அருச்சுனனுமுந்நாளி லரன்கையால்பெற்றுவந்த
பாசுபதாஸ்திரத்தை பற்குணன்தானெடுத்து
அசுவனுர்பூமுடியை அரியவேதான்விடுத்தான்
இருவரும்விட்டகணை எதிரில்லாமல்பறந்து
தோருமலொன்ருேடொன்று தொடர்ந்துபோர்செய்திட
சிஷ்மகாவிபாசர்வந்து இருவருந்தானுரைத்தார் [வே

அவ்வார்த்தைதன்னை அகற்றிவிட்டானசுவனுமே
பரசுராமர் தன்னைப் படுகளத்தில்வரவழைத்தார்
அவ்வேளைபரசுராமர் அவனுக்குத்தானுரைத்தார்
அவர் நடக்கைகாரியமும் அசுவனுந்தடுத்துரைத்தான்
தடுத்ததோர்வார்த்தைதன்னைத் தருமரவர்கேட்டு
அசுவன்மேல்கோபமாய் அவன் தன்கிரீடமதை
அசுவன்கிரீடமதை அர்ச்சுனக்குத்தான்கொடுத்தார்
அபிமன்னதேவியிட அடிவயிற்றில்தானிருக்கும்
கெர்ப்பத்தைப்பார்ப்பான்றன் கைக்கிணைக்கிரைகொடுத்தார்
இந்நாள்சபதமதை இரண்டுஞ்சரியென்றுசொன்னார்
அப்படியாகச்சொல்லி ஆரணியந்தான்போனார்
போனால்பரசுராமர் புண்ணியனார்போனபின்பு
அர்ச்சுனனார்விட்டகணை அசுவனிடபூமுடியை
தங்கியிருந்ததொரு தங்கக்கிரீடமதை
சேர அறிந்துபோய்ச் சிவன் வரத்தால்வந்துதித்த
மாது நல்லாள் துரோபதையின் மலரடியின்கீழ்போட்டு
அரசனார் தன்பக்கலிலே அக்கணையும்போய்ச்சேர
பார்ப்பான்கிரீடமதைப் பாதத்துக்குத்தான்கொடுத்து
அப்போதேகானகத்தில் அசுவனுந்தானடந்தான்
அசுவத்தாமன்விட்டகணை ஐவர்க்குத்தானுரிய
அபிமன்னன்தேவியிட அடிவயிற்றில்தானிருக்கும்
கெர்ப்பத்தைத்தான்சிதைத்து கிறுகிறென்றீசரண்டை
ஈஸ்வரனார்பக்கலில் இதுவும்போய்ச்சேர்ந்ததுகாண்
அப்போதுமாயவனு ரந்தக்கருவெடுத்து
கும்பத்தில்வைத்துக் குழந்தையுருவாக்கிவிட்டார்
ஐவருமந்நேரம் அமர்க்களத்துபூமிவிட்டு
மற்றுமுள்ளராஜாக்கள் மன்னர்கள்தேவியற்கும்
துரோணர்மனைவியற்கும் துரைமக்கள்தேவியற்கும்
சொல்லியழைத்தோடித் துரிதமாய்வாருமென்று
ஆளையனுப்பிவைத்து அமர்க்களத்தில்தானடந்தார்
தருமனார்பீமனார் தனஞ்செயனரெட்டையனார்
ஆயனார்முன்னடக்க ஐவரும்பின்னடந்தார்

பெண்கள் அமர்க்களம் வருவது

அரசனதுகிருபையால் அக்கினியில்தான்பிறந்த
பஞ்சவர்களைவருக்கும் பட்டத்தரசிநல்லாள்

முன்னாள்சபதம் முடிக்கவந்தபாஞ்சாலி
குந்தியன்னைமுன்னிட்டுக் கொம்பனையாள்தானடந்தாள்
அல்லியும்நாககன்னி யாரிழைசுபத்திரையும்
அனேகம்தேவியர்க ளனைவருந்தானடந்தார்
அமர்க்களம்தானேக்கி யனைவருமாய்த்தானடந்தார்
அத்திபுரம்போன ஐவரிட தூதுவர்கள்
அத்திபுரம்புகுந்து ஆரிழைக்குத்தானுரைத்தார்
கண்ணில்லாகாந்தாரி தையல்பெருந்திருவாள்
துர்ச்சடைபொன்னுருவி தோகையர்மற்றுமுள்ளோர்
மற்றுமரசரிட மன்னரிடதேவியர்கள்
அத்தனைபேருக்கு மறிக்கையிட்டார் தூதுவர்கள்
ஆட்டுக்கடாவை அடித்தோட்டிவிட்டாப்போல்
அலறித்தலைவிரித்து அனைவோருந்தானெழுந்து
கோவென்றசத்தமுமாய்க் குருக்ஷேத்திரந்தானேக்கி
ஐவர்கள்வீற்றிருக்கு மமர்க்களம்வந்துநின்றார்
அத்திபுரமாண்ட அரவக்கொடிவேந்தன்
வீமன்கைதண்டாலே விழுந்துமடிந்திருக்க

பெருந்திருவாள் துரியோதனனைப் பார்த்து துக்கப்படுவது

கண்டுபெருந்திருவாள் கலங்கியவளோடிவந்து
ஆருத்துக்கமுடன் அழுதகண்ணீருமாக
வேற்றுமுகமாகி விழிநீருமார்புரள
ஐயோசிவனேயென்று அடித்துதலைமோதி
புல்லார்ந்தமோகமொடு புரண்டவன்மேல்விழுந்து
வணங்காமுடியுடைய மன்னன் துரைராஜாவே
அடுத்தார்தனைக்காக்கு மாண்மையுள்ளமன்னவனே
தேசம்வழுவாமல் செங்கோல்செலுத்திவந்தீர்
மாசில்லாமன்னவனே மாண்டாயோரணக்களத்தில்
மதியாமலிவ்வுலகில் வாழ்ந்திருந்தமன்னவனே [னே
எதிரில்லாதுவாழ்ந்திருந்தா வீணாகங்கொண்டோ
மன்னவருக்குமேலாக வாழ்ந்திருந்தீரத்தினகர்
மண்ணில்லார்முன்பாகக் களத்தில்மடிந்தாயோ
பருவமதயானை பஞ்சவர்களைவருக்கும்
ஊருமுறவளித் தொன்றாகவாழாமல்
பாதியரசு பகுந்தவர்க்கீயாமல்

நீயும்ரணக்களத்தில் நிர்ணயமாய்நூற்றுவரும்
ஓடிமடிந்தீரே யொருமிக்கமன்னருடன்
பொய்வாழ்வைநம்பிநீ பிரியாமலேவருடன்
ஐவரையழைத்துவந்து அரசுபதியளித்து
கொத்தானுமோராதுபோ லொத்துயிருங்களென்று
எத்தனைதான்சொன்னாலு மென்வார்த்தைகேளாமல்
குடிகேடனாற்சகுனி கூறியதோர்வார்த்தையினால்
தொடர்ந்துவந்தவைவருக்குச் சீமைகொடுவென்று
வேண்டாங்காணேவருக்கும் வேறேயரசளித்து [சொன்னேன்
பாண்டவர்க்குண்டான பதியையளியுமென்றேன்
மூட்டியேபோக மூதேவிபட்டிமகன்
கட்டைத்தலையன் கருஞ்சிறையன்மாபாவி
பட்டுவிழுவான் பறையன்சகுனியல்லோ
திட்டத்தரசாண்டு சென்றுமடிந்தீரே
கொல்லைக்குப்பல்லி குடிக்குச்சகுனியென்று
எல்லோருஞ்சொன்னசொல் வேந்தனுக்குமெய்யாச்சு
ஐயையோஎன்வார்த்தை யடிநாளிற்கேளாமல்
பொய்யாயரசாண்டு போர்க்களத்திலேமடிந்தீர்
என்றுசொல்லிராஜாத்தி யேங்கியவள்தான்புலம்பி
பேரரசன்தேவி பெருந்திருவாள்தான்புலம்ப
மாயவனார்தருமரை வரவழைத்துக்கண்காட்ட
தக்கப்புகழுடைய தருமருடமாடிவந்து
வாரியெடுத்து மார்போடுறவணைத்து
பூந்துகிலாடையினால் பெருகியகண்ணீர்துடைத்து
தலையின்விதிப்பயன்தன் தப்பாதொருக்காலும்
கோபங்களெண்ணாதே கொழுந்தியரே நீர்கேளும்
பாபங்களெண்ணாதே பண்ணதில்லையுங்களுக்கு
எவரெவர்கள்செய்தவினை ஏதுவினையானாலும்
அவரவர்கள்செய்தவினை யவரவரேயனுபவிப்பார்
என்றேபெரியோர்க ளியம்பவறியாயோ
வேண்டாங்கானித்துயரம் வேல்பொருதுங்கண்ணே
என்றுசொல்லித்தரும ரேந்திழையாள்கன்னியரை
பூந்துகிலாடையினால் பெருகியகண்ணீர்துடைத்து
பக்கத்தினிற்கவைத்தார் பார்வேந்தர்தருமருமே
அப்போதிரௌபதையா ளாரணங்குமோடிவந்து
தோராவடிவழகி திரௌபதையாளோடிவந்து

மூன்னாள்சபதத்தை முடிக்கவேண்டுமென்று
தேசத்தழகன் துரியோதனன்முன்புநின்று
மாநாகமேத்தியதோர் மன்னன்பெருமாளேகேள்
ஆசாரந்தன்னுள்ள அரசமக்கள்முன்பாக
தலையில்மயிர்விரித்துச் சபதமுரைத்தேனே
அன்றுவுரைத்தசொல்லை யின்றுமுடித்தேன்காண்
என்றுசொல்லக்கேட் டிராசாக்களோடிவந்து
ஐவர்களுமோடிவந் தாரிழையைக்கைப்பிடித்து
அப்புறமேதானடந்தார் ராசமக்கள்தன்னுடனே
அமர்க்களத்தில்தான்விழுந்த அரசமன்னர்தன்பிணத்
இருபுறமும்நீக்கியப்பா லேகினாரைவர்களும் [தை
காசினியையாண்டதொரு கர்னர்பெருமாளும்
மூத்துயணிமேடையின்மேல் முடிசாய்ந்துவீற்றிருந்
கண்ணில்லான்காந்தாரி கண்டுமண்மேல்விழுந்து
ஐயையோமகனேயென் னங்கந்தணிந்தேனே
மகுடமுடிகவித்து மண்ணாளவைத்தேனே
தளிகைபுழுநீக்கித் தாகந்தணித்தவனே
கலத்துப்புழுநீக்குங் கர்னர்பெருமாளே
உன்னைநம்பிநானு முலகமரசாண்டேன்
என்னைத்தனியேவிட் டேகுவதுமேதோதான்
கர்னர்கொடையென்று கர்த்தனுர்தாமறிய
பொன்னுமணிரத்தினங்கள் போதவழங்கினையோ
கண்ணில்லான்முன்னே கடுகித்தானேகுவதோ
என்னையனுப்பாம லேகவும்நீதியுண்டோ
உன்னைவிட்டுநானிருக்க உண்மையல்லவிப்போது
மன்னவனேயுன்பிறகே வருவேன்காண்கர்னுவே
என்றுசொல்லிராச னேங்கிப்புலம்பிநிற்க
கண்டுமந்தமாயவனுர் காவலர்க்குக்கண்காட்ட
தருமரைக்கண்காட்ட தானுமெழுந்திருந்து
கண்ணில்லான்காந்தாரி காலினிற்போய்பணிந்து
நூற்றுவரைப்பார்க்கவே ரேற்றங்காணேயாவே
என்றுசொல்லக்கேட் டேதுரைப்பானந்தகனும்
ஐவரில்நூற்றுவரி லதிபலவான்வீமன்மேல்
சீறியெழுந்தானே சிங்கத்தின்குட்டியைப்போல்
மாயவனுர்வீமனைத்தான் வாருமென்றுகண்காட்ட
மன்னவனுக்கொப்பான வாழ்பதுமைகொண்டுவந்து

அந்தகன்முன்னாக அமர்த்தினரெம்பெருமாள்
மண்பதுமைதனைக் கண்ணில்லான்தான்பிடித்து
மார்போடேமார்புவைத்து மன்னவனுந்தானமுத்த
நோக்கிவிழுந்ததுகாண் நூறுயோசனைகேட்க
அப்போதுமாயவனு ரைவரையுந்தான்பார்த்து
தங்கமுடிபொருத்த தர்மர்பெருமாளே
முரசுக்கொடிபடைத்த முத்துமணிமார்பா
பெரியப்பாநெஞ்ச மறிந்தீரோ ஆணழகா
அப்பனுர்நெஞ்ச மறிந்தீரோ ஆணழகா
மக்கள்மேல்பட்சமதைக் கண்டீரோமன்னவனே
மகனென்றசொற்கேட்டு மதகரியான்வுந்தானே
எமபுரத்துக்காளாக்க வெண்ணினனந்தகனும்
அந்தகன்செய்ததொரு அன்னீதப்பார்த்தீரோ
ஆகையால்கண்காட்டி யதட்டிவிலகிநின்றேன்
அந்தகன்பிள்ளைகளா மர்சர்கள்நூற்றுவரை
சபையிலுரைத்ததொரு சபதமும்வழுவாமல்
அமர்க்களத்தில்கொன்றதினு லதிவீமன்மேல்பகையாய்
வீமனைக்கொல்லவென்று வந்தானே அந்தகனும்
என்றுசொல்லிஐவருக்கு மிப்பாலெடுத்துரைப்பார்

கிருஷ்ணபகவான் சகல விபரமுந் திருதராஷ்டிர னுடன் கூறுவது

அந்தகனைப்பார்த்து ஆயனுரேதுரைப்பார்
அந்தப்புரமாண்ட ஆண்மையுள்ளமன்னவனே
நூற்றுவரைப்பெற்றெடுத்த வேற்றுமுள்ளமன்னவனே
மூன்னுளுன்பாட்ட முடிபொருத்தசந்தனுவும்
தாராமர்தங்கைதனை தான்துறந்துபின்பாக
தந்தையுமைந்தனுமாய்த் தரித்துஅரசாளுகையில்
மச்சதேசத்தாள்மகள்காண் மச்சகந்திபெண்மாது
சவுந்தரியமென்றுலகில் தான்கேட்டுசந்தனுவும்
மலையரையன்பக்கலிலே வந்தசந்தனுவும்
தனக்குமணம்புணரத் தையலரையீயுமென்றார்
அம்மொழியைக்கேட்டு அரசன்சொல்தான்மறுத்தான்
வளையன்மறுத்துரைக்க மன்னன்மனங்கலங்கி
மின்மிகள்தன்னுசையினுல் வேந்தன்முகங்கறுத்து
வந்தவழிநோக்கி மன்னன்திரும்பிவந்து

மெத்தவிசாரமுடன் வேந்தனிருக்கையிலே
நங்கையெனும்வார்த்தை காதலான்தான்கேட்டு
தந்தையார்மோகமதைத் தானடக்கவேணுமென்று
மைந்தனுமவ்வேளை மச்சதேசந்தானணுகி
மச்சதேசத்தானுரைத்த வார்த்தையெல்லாந்தான்கேட்டு
மணம்புரியேனென்றுசொல்லி மகத்தானசபதமிட்டு
பீஷ்மரென்றுபேருமிட்டு வேந்தர்கள்தாமறிய
தந்தையர்தானினைத்த தையலரைக்கொண்டுவந்து
இந்துவுக்குநேரான வேந்திழையைக்கொண்டுவந்து
தந்தையிடம்பக்கல்வைத்துச் சந்தனுக்குமாலையிட்டான்
சந்தனுமிமின்மகளுந் தரித்து அரசாண்டிருந்தார்
மங்கையாலுங்கள்குலம் வாய்க்கவேமன்னவனே
பீஷ்மராலுங்கள்குலம் பெரிதாச்சோமன்னவனே
மச்சகந்திதன்வயிற்றில் மைந்தர்பிறந்தார்கள்
மைந்தர்கள்தான்பிறக்க மறித்தானேசந்தனுவுஞ்
சந்தனுவும்வீரசொர்க்கந் தான்சேர்ந்தபிற்பாடு
சிற்றரசிமைந்தர்களைச் செல்வமுடனேவளர்த்து
தந்தையார்பட்டமதைத் தம்பியர்க்குத்தானளித்தார்
தம்பியரைமுன்னிட்டுத் தானிருந்தார்பீஷ்மருந்தான்
ஈரேழுதேசத் திராஜாக்கள்தானறிய
அன்றுமுதல்தம்பியுட னரசாண்டார்செல்வமதாய்
தம்பியர்க்குத்தன்னரசு தானளித்துபீஷ்மருந்தான்
மன்னவர்கள்கொண்டாட வாழ்ந்துயிருக்கலையோ
அப்படிக்குத்தானிருந்தா லரசர்புகழாரோ
பீஷ்மருக்குண்டான தைரியமுனக்கில்லையோ
தகப்பனார்புத்தியுனக் கில்லையோதார்வேந்தா
பாண்டுவுமுன்தம்பியவர் பாரவனந்தான்போயி
ரிஷியினிடசபதத்தை பரிகரிக்கவேண்டுமென்று
மனையாளிருவருடன் வனந்தனிலேபுகுந்து
குந்தியுபமைந்தரையும் கூடியிருக்கையிலே
தேவர்சகாயத்தால் செல்வர்கள்தான்பிறந்தார்
ஐவரையுப்பெற்று ஆலித்திருக்கவந்தாள்
பாண்டுமகாராஜன் பரமபதமடைந்தார்
அதன்பிறகுகுந்தியரு மைவரையுமிட்டுவந்து
அடைக்கலமாய்மைத்துனரை யண்டியிருந்தாளே
அன்னவனுக்கு அறிவுமெத்தவாகையினுல்

தம்பிமார்பிள்ளையிது தன்பிள்ளையிதுவென்று
எண்ணுமல்மன்னவனே யொன்ருக நீர்வளர்த்தீர்
பள்ளிக்குவைத்தீர் பலகலைகளோதிவைத்தீர்
நூற்றுவரைப்பார்க்கவைவர் பிரியமென்று நீர் வளர்த்தீர்
உன்பிள்ளையைப்பார்க்கவைவர் பிரியமென்றுநீர்வளர்த்தீர்
பிள்ளைகள் நூற்றுவரும் பிரபலர்களானபின்பு
குற்றங்களெண்ணிக் குரோதமிகவுண்டாச்சு
ஐவர்கள்பேரிலுந்தா னுசையடக்கிவைத்தீர்
நூற்றுவருமைவர்மே லேற்றமுள்ளவன்பகையாய்
ஜலத்தில்வசிநாட்டிச் சாகவமுதூட்டி
அரக்குஅரைசோடித்து அதிலேயனல்மூட்டி
பாஞ்சாலன்சீர்மகளைப் பழுதிலாப்பத்தினியை
இணைப்பிரியாமாதாவை கனங்குலையப்பண்ணிவைத்தீர்
மாறுகொண்டுசூதாடி மண்பறித்தோட்டிவிட்டீர்
வீமனும்பாஞ்சாலி மெத்தமனக்குறையாய்
நூற்றுவரைக்கொல்வேனென்று ஏற்றசபதமிட்டு
ஆரணியஞ்சென் றலைந்துதிரிந்தார்கள்
செய்வாரவரென்று தெரிந்துகொள்ளமாட்டாமல்
புஜபலத்தாரைவரையும் போவென்றுஓட்டிவிட்டார்
அன்றுமுதலின்றளவும் அதுவேமனக்குறையாய்
அன்னமும் நித்திரையு மரைவாசியாயிருந்தார்
வேஷங்கள்வேறுபட்டு விராடபுரஞ்சேர்ந்தார்கள்
அக்கியாதவாச மதுவுமுடிந்தபின்பு
தூதாகவென்னையவர் போகவனுப்பிவைத்தார்
வந்துநானைவருக்கும் வளநாடுதாருமென்றேன்
பாதியரசு பகுந்துகொடுமென்றுரைத்தேன்
இடுப்பாகப்பேசியப்போ என்னையெடுத்தெரிந்தீர்
அதுவும்பொருத்துதானைந்துமனைக்கேட்டேன்
இருக்கவேயைவருக் கிடமில்லையென்றுரைத்தீர்
வெட்டிக்கெலித்துமே வெஞ்சமரில் நின்றவர்க்கு
முட்டவோராச்சியங்கள் மூடிபொருத்தன்மையென்றீர்
அப்படியேயைவருமா யேற்றவமர்புரிந்தார்
மூன்னுள்சபத மூடித்தானேபீமனுந்தான்
சபதம்வழுவாமல் தான்கொன்ருல நூற்றுவரும்
ஆகையினல் வீமன்கையி லதமானுர் நூற்றுவரும்
இடக்குகள்தானுரைத்து அடுக்காகத்தான்மாண்டார்

அக்குறையெண்ணுதே ஆனந்தவாழ்மார்பா
என்றுசொல்லிமாயவனு ரேதுரைப்பார்மன்னனுக்கு
வெற்றிமதயானை வீமனுரைவரையும்
அழையுமென்றுசொல்லுமே யைவருமோடிவந்து
சாஷ்டாங்கமாகவே தான்பணிந்து நின்றுரே
கற்பால்பதிவிரதை காந்தாரிநாயகியவள்
பிள்ளைகளைப்போக்கியதோர் பெருந்தாகத்திலிவளும்
மார்பளவுதண்ணீர் வழியவிட்டுநாயகியவள்
ஐவர்களையும்பார்த்து அழுதாளேகாந்தாரி
மாயவனுர்தான்பார்த்து மனநிலவரைமனதாய்
காந்தாரிசாபத்தால் காளையர்க்குத்தாங்குமென்று
ஐவரையும்பின்தள்ளி யத்தைமுன்னேவந்துநின்றுர்
அத்தைமுன்னேவந்துநின் றுயவனுமெம்பெருமாள்

வியாசர் காந்தாரிக்குச் சகலமும் எடுத்துரைத்தல்

அப்போது வியாசருக் காயமெடுத்துரைப்பார்
குருகுலத்தையுண்டாக்கும் விரகுடைமன்னவனே
மருமகளாங்காந்தாரி மக்கள்மேலேசிந்தையுமாய்
தாகமாய்த்தானிருக்குஞ் சோகத்தைத்தீருமென்றுர்
மாயவனுர்சொல்லுகையில் மனமகிழ்ந்துவியாசருமே
மருமகளைத்தான்பார்த்து வியாசரெடுத்துரைப்பார்
கற்பால்பதிவிரதை காந்தாரிநாயகமே
தாய்ப்பேச்சுதப்பாமல் தான்மடிந்தார் நூற்றுவரும்
நூற்றுவரைப்பெற்றெடுத்த வேற்றுமருமகளே
மக்கள்மக்களென்றுசொல்லி மனந்தனிலேசோருதே
குருகுலத்தில்வந்துதித்த கொற்றவர்களைவர்க்கும்
உடன்பிறந்தாரென்றுசொல்லி யொருமித்துவாழாமல்
அடிநாள்முதற்கொண் டைவரையும்பொய்யாக்கி
குடிவழியாமென்றுசொல்லிக் குறிப்பறியமாட்டாமல்
ஜென்மப்பகையாக்கி தீராக்கலகமிட்டு
சலத்தில்வசிநாட்டிச் சாகவிஷமூட்டி
ஐவருக்குப்பாரியாளை யழைத்துமேயம்பலத்தில்
மனக்குறைகளுண்டார்க்கு மன்னருடன்கூட்டி
அவ்வேளைகானகத்தி லதட்டியேயோட்டிவிட்டார்
மாதருடனைவருந்தான் வனத்திலேபோயிருந்தார்
கானகத்திலுள்ளதொரு காய்கனிகள்சோருக

தின்றுதிரிந்தார்கள் தேசாந்திரிபோலே
ஐவருடன்கூட ஆயிரம்பேர் துரைகள்
விட்டுப்பிரியாமல் வேந்தர்கள்வேதியர்கள்
ஆயிரம்பேர் துரைக ளண்டியேதானிருந்தார்
பிரமாவினத்தோர்கள் பின்னிற்போராயிரம்பேர்
ஆனைகுதிரைரத மாள்பேருந்தான்கூட
விட்டுப்பிரியாம லோடித்திரிந்தார்கள்
அக்கினியில்பிறந்த அருங்குழலாள் துரோபதையும்
பரிஜெனங்களெல்லாம் பசியோடிருக்குதென்று
சூரியனைத்தான்தொழுது துலங்கியகிண்ணியொன்று
அக்ஷயபாத்திரந்தான் லட்சணமாய்த்தான்வாங்கி
பரிசெனத்துசேனைகளைப் பாலித்துகாத்துவந்தாள்
பன்னிரண்டாயிரம் பரிசனத்தைக்காத்துவந்தாள்
ஒன்றல்லவிரண்டல்ல ஓராண்டுதானுமல்ல
பன்னிரண்டாண்டும் பசியாமற்சாதித்தபின்பு
ஒருவருஷம்காட்டி லொளித்திருக்கவேணுமென்று
அவரவர்தன்பதிக்கு அனுப்பிவிட்டார்சேனைகளை
அக்கியாதவாசம் அதுவுமுடிந்தபின்பு
விராடபுரம்விட்டு வெளிப்பட்டார்பஞ்சவர்கள்
அன்றுரைத்தசொல்நீக்கி ஐவர்வெளிப்படவே
கண்டுமச்சதேசத்தான் களிகூர்ந்துஐவரென்று
அபிமன்னனுக்குத்தன்பெண்ணை அந்நேரந்தான்கொடு
உத்தரைச்சீதனமா யுபலாவியங்கொடுத்தான் [த்து
உபலாவியந்தனிலே யுத்தமர்களைவர்வந்து
உரிமையைநாடியப்போ பெருமைபெறவேணுமென்று
குப்பிட்டுப்பக்கலுக்குக் கோபாலனையழைத்து
அத்திபுரத்துக்கு அந்நேரந்தூதுவிட்டார்
மாயவருந்தானடந்து மச்சானிடம்புகுந்து
அரவக்கொடியோனுட னைவர்மொழியுரைக்க
அப்போதுமூன்மகன்தான் னனலாகத்தான்பொங்கி
ஐவரும்ராச்சியத்தி லடிவைக்கத்தக்கதில்லை
காடெல்லாமைவருக்கே வீடாகத்தான்கொடுத்தார்
காட்டிலிருப்பதே காளையர்க்குநன்மைபல்லால்
சபதத்தினலேயல்லோ பூமியெல்லாமாளுவது
வீரியத்தினலேயல்லோ விசித்திரம்பேசுவது
வீரியங்களுண்டானல் மிகுந்தரசையாளாரோ

புஜபலங்களுண்டானல் போய்வாரேம்கானகத்தில்
கானகத்திற்சென்றவரைக் கருத்தாகத்தானழைத்து
விராடபுரத்தானிடத்தில் வேந்தர்களைத்தானமர்த்தி
நாடவர்க்குரையுமென்று நடந்துவந்தார் தூதாக
ஆனாலுமென்னவினி ஆயரே நீர்கேளும்
பாரதத்துக்கொப்பி படுகளத்தில் நாளுமிட்டு
வெட்டிக்செலித்தவர்க்கு வெற்றிமுடி என்றுசொன்னான்
அரசருடனிருந்தவற்கு அவனிமுழுதுமென்றான்
மாயவனர்கையில் வலக்கையைத்தான்கொடுத்தான்
வலக்கையைவாங்கியே மாயரெழுந்திருந்து
அத்தையரென்றுவுன் னரண்மனையில்வந்துநின்று
ஐவரிடவார்த்தையெல்லா மறியவுரைத்தீரே
நீ-மைந்தனென்றுந் தன்மனதிலேதோற்றமல்
பஞ்சவர்க்காசப் பரிசெலாமனமிறங்கி
எந்நாளும் தர்மம்வெல்லும் இடர்செயுங்கர்மமென்று
பொறுத்தார்புவியாள்வார் பூமியேகாட்சியதாய்
பொறுக்கவறியாதார் பூமியிலேதாமடிவார்
பஞ்சபூதங்களுந்தான் பகலிருளேசாட்சியதாய்
என்றுசொன்னீரந்நாளி லேந்திழையேகாந்தாரி
அந்நாளிலாயருட னரிழையேசொனனீரே
தாயார்சொல்பிள்ளைகட்குத் தானேபலித்ததென்றார்
மாதாசொல்தப்பாமல் மடிந்தார்கள் நூற்றுவரும்
காடுறைந்தவைவர்களும் கோடுபிரியாமல்
அமர்க்களத்தில்ஜெயித்தர ராஜமக்கள்தானறிய
போர்பொருதிவெனறுஐவர் பூமியை ஆள்வதற்கு
அமர்க்களத்தைவிட்டுமவ ராயன்கிருபையினல்
மாதாவின்பாதம் வணங்கிடவேணுமென்று
ஐவருமிப்போது அடிபணியவந்தார்கள்
அக்குறைகளெல்லா மறிந்துமனதடக்கி
நூற்றுவரைப்பார்க்கவைவ ரேற்றுமென்றுநீயறிந்து
கண்காட்சியாகவே நீ கையாலெடுத்திடுங்காண்
மனமகிழ்ச்சியாகவே நீர் வாழ்த்தியெடுத்திடுங்காண்
உனக்குமுன்கணவனுக்கு மூகந்துபெற்றநூற்றுவர்க்கும்
அரண்மனையில்பெணகட்கு மரசமக்கள்பெண்டுகட்கும்
கர்னர்சயித்தவனர் கார்கோசன்தேவியற்கும்
வானுலகப்புகழ வழிகாட்டவந்தவரை

பெண்ணணங்கேயாவரையும் புறங்கழித்துக்கொள்ளாமல்
அமிர்தமொழிவாயாலே அழையுமென்றுரைவரையும்
அழையுமென்றுவேந்தர் ஆரிழைக்குச்சொல்லுகையில்

சகல விபரமுங்கேட்டு காந்தாரி புலம்புகிறது

கற்பால்பதிவிரதை காந்தாரிநாயகியாள்
பஞ்சவரைத்தான்பார்த்து பைங்கிளியாலேதுசொல்வாள்
அமர்க்களத்தில்தான்செயித்தார் ஐவர்களுமென்றுரைத்தீர்
ரணக்களத்தில்வந்தெதிர்த்த ராஜரைக்கொல்வதல்லால்
நீரிலொளித்தவரை நீதியோகொல்வதற்கு
ஜலத்திலொளித்தவரைத் தேடிவந்துதானிழுத்து
வலிமையினல்த்தானிழுத்து மாயவனுர்கைகாட்டி
துடையிலிடித்துயென றன் துரியனைக்கொன்றுரே
வீணிலேகொன்றுவிட்டு வெளிப்பட்டார்பஞ்சவர்கள்
கொன்றுமேமைந்தனைதான் கொக்கரித்தார்பஞ்சவர்கள்
என்றுசொல்லிகாந்தாரி ஏந்திழைபாள்தான்புலம்பி
மார்பளவுதண்ணீரை வழியவிட்டாள்காந்தாரி
அவ்வேளைமாயவனுர் அறிந்துமேயேதுசெய்தார்
மதகரியான்தன்னையப்போ வரவழைத்துயேதுசொல்வார்
இதுசமயந்தாய்பாதம் இறைஞ்சிப்பணியென்றுர்
ஐவரொருமுகமாய் அடிபணியுமென்றுசொன்னுர்

பஞ்சவர்களைவர்களுங் காந்தாரிக்குச் சமாதானஞ்
சொல்வது

ஆயனுர்சொல்லுகையில் ஐவர்களுமோடிவந்து
தாயார்தன்பாதந் தழுவியவன்தான்பிடித்து
வீமனெடுத்துரைப்பான் மெல்லியற்குத்தாரம்
ஆச்சியரேகேளுமம்மா அடியேன்வாய்விண்ணப்பம்
பெற்றபிள்ளைகுற்றமதை பெற்றவர்தானல்லாமல்
மற்றவர்கள்தான்பொறுக்க மனம்வருமோமாதாவே
என்றுசொல்லக்கேட்டு ஏதுரைப்பாள்காந்தாரி
மனதிற்பொருத்திடென்று மதியுரைத்தவீமாகேள்
ரணக்களத்தில்போர்செய்யும் ராஜாக்கள்தானறிய
உன்தப்பிதுற்சாதனன் தன்கழுத்தைநீகவ்வி
தன்னுதிரந்தான்குடிக்கத் தருமமோவுந்தனுக்கு
என்றுசொல்லக்கேட்டு ஏதுரைப்பான்வீமனப்போ
அன்னையயேகேளுமம்மா அடியேன்வாய்விண்ணப்பம்

சமர்க்களத்திராசாக்கள் தானஞ்சவேணுமென்று
வென்னியைக்கவ்விட்ட விரதமேயல்லாமல்
மன்னிரத்தங்குடித்த தில்லைநான்மாதாவே
ஆச்சியமேயின்னமொன்று அடியேன்சொல்ல நீர்கேளு [ம்
மாயவனார்வஞ்சனையை மனதிலறிந்ததில்லை
தாயென்றுந்தந்தையென்றுந் தமையன்மார்தம்பியென்று [ம்
உற்ருருறவென்றும் உறவின்முறைகளென்றும்
சேர்ந்தார்சினேகரென்றும் தேசாதிதேசமென்றும்
பிள்ளைகள்மக்களென்றும் பிறவித்துணையில்லாமல் [ல்
சென்மபகையாக்கித் திருக்கலகமிட்டு
மரப்பாவைசூஷ்திரத்தில் வரிந்திழுக்கும்நாரியைப்போல்
ஐவரையுமுன்னிட்டு அமர்செய்தாரெம்பெருமாள்
பூமிபாரந்தீர்க்கவென்று பிறந்துவந்தார்புண்ணியனார்
ஆகையினல்பூசலுக்கு ஆளானேனைவர்களும்
வீமன்பகையாளி வில்விஜயன்தாயாதி
தருமனர்சத்ராதி சசாதேவன்மித்ராதி
ஐவரும்நூற்றுவரை அமர்க்களத்தில்வென்ருரென்று
மாதாவேயெண்ணுதே மாயவனார்மாயமிது
ஐவருங்கொன்றதில்லை அடியார்மேற்குற்றமில்லை
உன்பாதஞ்சாட்சியாய் உலகளந்தார்செய்ததிது
அன்னை நீர்கேளும் மாயவனார்தான்வரவும்
ஐவரால்நூற்றுவரை அடக்கமனதிலெண்ணி
வந்துதித்தாரெங்களிட மைத்துனராய்மாதாவே
சகாதேவனலேநாம் தப்பினேனைவர்களும்
மக்களென்றுசொல்லி மனந்தனிலேசோருதே
பிள்ளைகளைப்பார்க்கிலும் பிரியங்காண்நாமுனக்கு
ஐவர்செய்தகுற்றமெல்லாம் ஆச்சியமே நீபொருத்து
மனங்குளிரவைவர்களை வாழ்த்தியெடுத்திடுங்காண்
என்றுசொல்லியைவர்களு மிறைஞ்சிமுடிசாய்ந்து
ஐவருந்தாய்பாத மழுதுபிடித்தார்கள்
திருமாலும்வியாசருமாய்ச் சேரவந்துநின்ருர்கள்
மாயவருங்காந்தாரி மாதையழைத்துரைப்பார்
கண்குளிரவைவலையும் கடுகவெடுமென்றுரைத்தார்
கற்பால்பதிவிரதை காந்தாரிநாயகமே
கண்குளிரவைவர்களை வாழ்த்தியெடுமென்றுரைத்தார்

காந்தாரி முதலான சகலரும் அமர்க்களம் வந்து புலம்புகிறது

மாயவனார் தாமுரைக்க மனமகிழ்ந்து காந்தாரி
ஐவரையும் வாழ்த்தியே ஆலித்தெடுத்தணைத்து
தையலுடன் காந்தாரி தனையருடன் தானிருந்தாள்
அப்போது குந்தியரு மாருத துக்கமுடன்
அலண்டுபுரண்டுவந் தைவரையுந் தான் றழுவி
கர்னு கர்னுயென்று சொல்லிக் கட்டியணைத்தழுதாள்
பஞ்சவர்க்குகைகொடுத்த பத்தினியாளோடிவந்து
மைந்தரேயென்றுசொல்லி மாயவனார் தன்பாதம்
வந்துமேதான் விழுந்து மனதுமிகத்தளர்ந்து
தேம்பியழுதாளே தேர்விஜயன் தேவியரும
மாயவனார் திரௌபதியை வாரியெடுத்தணைத்து
ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலும்
மாண்டார்வருவதில்லை வாருமம்மாவென்றுசொல்லி
ரணக்களத்தைச்சோதிப்போம் நாயகியேவாருமென்று
அமர்க்களத்தில்தானடந்தார் அரசமக்கள் தங்களுடன்
சஞ்சலுடன் தையலுடன் தம்பிவிதுரனோடும்
கிருதவர்மன தன்னுடனே கீர்த்திபெற்றபொன்னரசர்
கன்னியாள் காந்தாரி கருத்துள்ள குந்தியம்மாள்
பெருந்திருவாள் துரோபதையும் பெண்ணரசிபொன்னுரு
சூடாமணிவிதுரன் தோகைசித்திராங்கதையும் [வி
நூற்றுவர்கள் தேவியரு மேற்றமுள்ள பெண்களெல்லாம்
அமர்க்களத்தில்மடிந்த அரசமக்கள் தேவியெல்லாம்
வண்டுமுகராத மலர்முடித்தக்கூந்தலெல்லாம்
பூமியினமேல்தான்புரளப் புழுதியெங்குமேற்படிய
தலைமீதில்கையைவைத்துத் தாபரிக்குஞ்சப்தமுடன்
சொல்லிமுடியாது செவிகேட்கவொண்ணாது
பட்டமரந்தளிர்ந்திருக்கும் பச்சென றிலையரும்பும்
கல்லுமுருகிவிடும் முல்லையரும்புதிரும
பாலன்பாலுண்ணாது பட்சியிரை தீண்டாது
அழுதிருந்தபிள்ளையெல்லா மலறியேசோர்ந்துவிழும்
ஆழியுடைந்தாற்போல் அட்டதிக்குஞ்சாய்ந்தாப்போல்
அழுகிறசப்தமென்றால் அண்டமுடியாது
மேலோகத்தேவரெல்லாம் வேடிக்கைப்பார்க்கலுற்றார்
வானவரெல்லோரும் மதிமயங்கிநின்றுவிட்டார்

பேய்கொண்டவாரதுபோல் பித்தேற்றிநின்றுவிட்டார்
விமானங்கள்சாய்ந்துவிடும் விமானத்தில்பூவுதிரும்
புரவிகள்காலோய்ந்து பூமியிலேதான்விழுமாம்
தேர்களுக்குப்பூட்டிவைத்த டேகையங்களத்தனையும்
இற்றிற்றுத்தான்விழுமாம் இனையில்லாபோர்களத்தில்
தேவர்களின்கன்னியர்கள் தேன்மொழிமாரானவரும்
அட்சரகின்னரர்க ளரிவைமாரெல்லோரும்
கந்தருவரிஷிகளுடன் வந்திருந்தாரப்பொழுது
ஆணினங்கள்பெண்ணினங்க ளனைவருந்தான்பார்த்து
புற்பதுமைபார்க்கவந்த பூவையர்களெல்லோரும்
புஷ்பவருஷப்போல் பொருந்தாரேபோர்க்களத்தில்
அரசரிடதேவியர்க ளழுதுபுலம்பலுற்றார்
ஏழுலகையாண்டதொரு வெம்பெருமாள்தான்பார்த்து
தக்கபுகழுடைய தருமமைத்தானழைத்து
ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலும்
மாண்டவர்வருவதுண்டோ மன்னவரே நீர்கேளும்
பிரமாவெழுதினதை புரட்டிவைக்கக்கூடாது
தப்பவைக்கொண்ணுது சந்திரகுலவிளக்கே
தம்பிமார்தேவிகளைத் தருமரே நீரழைத்து
அவரவர்கள் துக்க மதையாற்றிவையுமென்றுசொன்னர்

தருமர் காந்தாரிமுதல் சகலருக்கு
ஆறுதல் சொல்லல்

அப்போதுதருமலிங்கம அட்சணமேயேதுசெய்தார்
அப்படியேநல்லதென்ரு னந்தவாழ்மார்பன்
பேரரசன்தேவியான பெருந்திருவாள்பக்கம்வந்து
கோவென்றுதானழுதார் கொழுந்தியரைத்தான்பார்த்து
இனி-ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலும்
மாண்டார்வருவதுண்டோ வாருமம்மாயென்றுசொல்லி
மைத்துனன்மார்தானிருக்க மனஸ்தாபமேதுனக்கு
பாவங்களென்னலே பத்தினியேசெய்ததுண்டோ
எவரெவர்கள்செய்தவினை ஏதுவினையானலும்
அவரவர்கள்செய்தவினை யவரேயனுபவிப்பார்
வாருங்களென்றுசொல்லி வருந்தியழைக்கலுற்றார்
பேரரசன்தேவி பெருந்திருவாளேதுரைப்பாள்
ஏதுக்கினிமேலு மிவ்வார்த்தையுந்தனுக்கு
வீம்புகள்பேசியவர் வீணுய்மடிந்தார்கள்

தருமநினைப்பில்லாமற் றானேமடிந்தார்கள்
சொல்லிப்பயனென்னவினிச் சுந்தரப்பூமுடியாள்
மன்னவர்கள் நூற்றுவரும் மடிந்தார்கள்மண்மேலே
நாங்களிருக்கவினி ஞாயமல்லமன்னவனே
மண்ணிலிருந்தாலினிமேல் வையகத்தாரேசாரோ
பூமியிலிருந்தாக்கால் பூகலத்தாரேசாரோ

பெண்கள் தீப்பாய்ந்தது

தீயைவளர்த்துமென்றார் தேனினமொழியார்கள்
அக்கினியைமூட்டுமென்றார் அரசரிடதேவியர்கள்
அப்படியேயாகுதென்று ஆனந்தவாழ்மார்பன்
தீயைவளர்த்தினன் செம்பொன்மணிமுடியான்
நூற்றுவர்தேவியரை நொடியிலேதானழைத்து
பொன்னுருவிகாந்தாரியைப் போதவேதானழைத்து
மாதுநல்லாள் துரௌபதியை வலதுபுறம்வைத்துக்கொண்டார்
ஆயர்கிருபையினால் அக்கினியைச்சுற்றிவந்தார்
அனைவோரொருமுகமாய் அனல்பாய்ந்தாரப்பொழுது
பொன்னுருவிதான் தவிர போய்குதித்தார்பெண்களெல்லாம்
மைந்தனுக்காகபொன்னுருவிவையகத்தில்தானிருந்தாள்
புத்திரனுக்காகவல்லோ பொன்னுருவித்தானிருந்தாள்
அரசனிடதேவியர்க ளனைவோருமனல்பாய்ந்தார்
படுகளங்களத்தனையும் பற்றியெரிந்ததுகாண்
நாற்பத்தெட்டோசனையு நலமாயெழுந்ததுகாண்
நூற்றுவர்கள்தேவியற்கு மேற்றமுள்ளவாகனங்கள்
சமர்க்களத்தில்மடிந்தமன்னர் தேவிமாரெல்லவர்க்கும்
புட்பவிமானங்க ளெல்லவர்க்கும்வந்ததுகாண்
இந்திரன்விமானங்க ளெல்லவர்க்கும்வந்ததுகாண்
வாகனத்தின்மீதேறி வானுலகம்போய்ச்சேர்ந்தார்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் தருமருக்குப் பட்டந்தரித்தல்

ஆயர்பெருமாளு மைவரையுந்தானழைத்து
கண்ணில்லாள்காந்தாரி காரிழையாள்குந்தியரும்
மாதுநல்லாள் துரோபதையு மற்றுமுள்ளகன்னியரும்
கூடியேபாடிமூனே கும்பலுடன்வந்திருந்தார்
விதுரன்பலராமர் விளங்கியதோரசுவத்தாமன்
கிருபையனுஞ்சஞ்சயனுங் கூடிவந்தார்பாடிமூனே
அனைவோரும்பாடிமூனே யமர்ந்திருந்தாரப்போது
தர்மருக்குப்பட்டந் தரிப்பிக்கவேண்டுமென்று

ஆயன்பெருமானும் மனதிலேதானினைத்து
கர்னனூர்பெற்றெடுத்த காவலனைத்தானழைத்து
தக்கப்புகழுடைய தர்மர்கையிலொப்புவித்து
தமையனூர்கர்னனைப்போல் தார்வேந்தர்பாருமென்றார்
அண்ணர்கர்னரைப்போல் லருங்கிளியைப்பாருமென்றார்
மாயவரும்பஞ்சவரும் மனதுமிகத்தான்தளர்ந்து
தமையனூர்பட்டமென்று சந்ததிக்குத்தான்தெரிந்து
தருமருக்குப்பட்டந் தரிப்பித்தாரெம்பெருமாள்
தெய்வலோகத்தாருந் துந்துபிகள்தான்முழங்க
புஷ்பவருஷம் பொழிந்தார்கள்தேவரெல்லாம்
ஆயிரப்பிராமணர்க ளள்ளிச்சேஷையிட்டார்கள்
ஆலாத்திப்பெண்க ளாயிரம்பேர்கூடிவந்து
கற்பூர ஆலாத்தி கன்னியர்கள்தான்காட்ட
வெள்ளியாலாலாத்தி வேணபடியளித்தார்
ஆலமெடுத்ததொரு ஆரிழைமார்சூழ்ந்துநிற்க
மங்களங்கள்பாடினூர் மங்கையர்களெல்லோரும்
பதினெட்டுவாத்தியங்கள் பாங்குடனேதான்முழங்க
எக்காளையூத இராயக்கொடிமுழங்க
பஞ்சவர்கள்நாடுபெற்றுப் பாருலகையாளவந்தார்
ஐவர்கள்நாடுபெற்று அரசுசெலுத்தவந்தார்
என்றுசொல்லிச்சின்ன மெழிற்சின்னந்தானூத
வானுலகந்தெய்வலோகம் வையகத்தோர்கொண்டாட
பூதலங்களெங்கும் புகழ்ந்துமழைபொழிய
பட்டமரந்துளிர்க்கும் பாருலகநதான்றழைக்கும்
மாதமும்மாரி மழைபெய்துதானிருக்கும்
திங்கள்மும்மாரிபெய்து தேசஞ்செழுத்திடுமே
அப்போதுமாயவனூ ரைவரையுமிட்டுவந்து
அத்திபுரந்தனிலே யமர்த்திவிட்டுமாயவனூர்
கங்கையனூர்கர்னருக்குங் காட்சியவர்தான்கொடுத்து
பூத்தேரினமீதேறிப் போய்வாருமென்றுசொல்லி
காட்சியதுதான்கொடுத்துக் கரியமால்தான்போனூர்
துவாரகையைநோக்கியந்த தேவர்களுந்தான்போனூர்
இந்தப்பெருங்கதையை யெல்லாருந்தான்படிக்க
சந்தப்பொருந்தும்நங்கை தன்கதையைப்படிக்க
மண்ணூடர்கொண்டாடும் மாலாபலவாயிலங்க
விண்ணூடர்கோவுமகிழ் வேல்வேந்தன்ராமசாமி

செட்டியார்மாதவத்திற் சேயனாய்வந்துதித்தான்
பெட்டியின்மாணிக்கம்போற் பேருலகிலேமதித்தோன்
தன்னையடுத்தவரைத் தன்போலுமெண்ணிடுவோன்
அன்னைப்பிதாக்களுக்கு மரும்பூசைபண்ணிடுவோன்
நாடிவருபவர்க்கு நயந்தன்னந்தானளிப்போன்
தேடிவருபவர்க்குத் தினந்தங்கந்தானளிப்போன்
மன்னுந்திருமாலை மாறாமல்கும்பிடுவோன்
துன்னுபவர்பாகந் துளியேநம்பிடுவோன்
கோபாலச்செட்டியார் கோரிக்கையின்படிக்கு
மாபாலபுருஷோத்தம மன்னன்தவனடிக்கும்
செபங்கள்தபங்கள்தினஞ் செய்துமிகமகிழ்வோன்
சுபங்களுடையவர்க்குச் சொர்னந்தந்தேமகிழ்வோன்
களைத்துவந்தோர்தமக்கு களைகளைத்தீர்த்திடுவோன்
பசித்துவந்தோன்தமக்குப் பாலாடையீந்திடுவோன்
உலகைவிலைமதிக்கு முயர்காதில்குண்டலங்கள்
இலகுமவன்கடக மீரேழுமண்டலங்கள்
விலையேறுமார்பதக்கம் விண்ணுலகையேமதிக்கும்
கலைவீணாமவர்பொருதம் கனபூமிபோலோங்கும்
சொல்லுங்கர்னன்குடையுந் தோற்கவேதந்திடுவோன்
அல்லும்பகலும்பிச்சை அன்பாய்வந்திடுவோன்
சீதரனையெந்நாளும் சிந்தித்துநின்றிடுவோன்
கோதருடன்தீவினையைக் குணந்தந்துவென்றிடுவோன்
மங்கைமகிழ்ந்தோளன மறைபோலும்போற்றாளன்
அங்கைசொல்லொத்தயாளன்மகிழ்ரதிமணாளன்
சங்கைப்புலவருக்குத் தனமீயுமொய்யாரன்
துங்கமுறுமுதாரன் சொல்வடிவிலேமாரன்
சிங்கம்போலுவீரன் சீர்சொல்லின்சொற்படிக்குப்
பொற்புமிகவாய்ந்த பொற்களத்தையூர்மேவும்
அற்புமிகவேந்தன் அகஸ்தியனைப்போற்றாவும்
நன்னூலுங்காரிகையு நற்பொருளுழந்நூலும்
பன்னூலும்என்னூலும் பகாறிபதொன்னூலும்
தொலகாப்பியவுரையுஞ் சூறாவளியுரையும
பல்காப்பியவுரையும் பதப்பொருளினுரையும்
நேமிறாதவுரையுந் நேரானசெய்யுள்கோவை
சாமிநாதன்சொன்ன தனியிறையவணார்கோவை
ஐம்பத்துமூவர்செய்த வரியவிலக்கணமும்

நன்புதன் நீரருளா னன்குணர்ந்தோனக்கணமே
போற்றும்வேதகிரியான் புலவனருள்சேயன்
சாற்றுமாவாறுமுகத் தமிழ்வல்லோர்தம்நேயன்
சுத்தமாயிக்கதையை சொற்கள்பிழைநீக்கி
தத்தமக்குமேற்கவே சாசவிலையாக்கி
அச்சுகளெல்லாம் அழகாகவேயடுக்கி
மெச்சும்படியாக மேன்மேலுமேதொடுத்து
ஓயாமல்கர்ணனைப்போல் உகந்தியுமொய்யாரன்
அச்சுக்கூடந்தனிலே அச்சுதவண்மைகளை
பாண்டவர்தன்கதையைப் பரிந்துமிகக்கேட்டோர்கள்
ஆண்டவர்நற்கதையை அடைவாரிந்நாடோர்கள்
கர்னன்கதையைக்கேட்டால் கனமுண்டுபூவினிலே [மே
வீமன்கதையைக்கேட்டால் வினையெல்லாம்போய்விடு
நகுலன்கதையைக்கேட்டால் நல்குமேமோட்சவீடு
சகாதேவன்கதையைக்கேட்டால் வந்திடுமேவாணுடு
அப்பர்சப்பந்தர்போலே அன்பாகவாழ்வாரே
செப்பெருஞ்சுந்தரர்போலே சிவனடியிற்சூழ்வாரே
மாணிக்கவாசகர்போல் வரங்கள்பெறுவாரே
அல்லிக்கொடிபோலே அனைவோருந்தான்வாழி
வள்ளிக்கொடிபோலே மாந்தர்மிகவாழி
ஓங்கிவளர்த்த உயர்மூங்கில்போல்வாழி
திக்கில்லாமன்னவர்கள் தேசத்திலேவாழி
ஊழியூழிதோறும் உலகத்திலுள்ளவர்கள்
வாழிவாழியென்று வாமளிததாரீஸ்வாணர்

விருத்தம்

இப்பெருங்கதையை யுரைத்தவர்படித்தோ
ரெழுதினோர் பொருளிசைத்தோர்
செப்பெருமன்பர் கேட்டுளோரிதன்பேர்
செப்பினோர் தீமையிற்றீர்ந்தே
எப்பெருஞ்சிறபபு மைந்தரும்வாழ்வு
மிசைந்ததீர்க் காயுளுமுளராய்
எப்பெருங்கதியி னிலைபெறவிளங்கி
உப்பருப்புகழ வாழ்குவரே.

கர்னமகாராஜன் சண்டை - முற்றிற்று.

திருமகள் விலாச அச்சகம், சென்னை-1:—1962.